பக்கங்கள் : 32

# உதயன்

சுடர் 27
கதிர் 203

வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 02 சனிக்கிழமை (16/06/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


## இந்திய ஜனாதிபதி வேட்பாளராக பிரணாப் முகர்ஜி

புதுடில்லி,ஜூன் 16

நடைபெறவிருக்கும் இந்திய ஜனாதிபதித் தேர்தலில் மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தான் ஜனாதிபதிக்கான வேட்பாளர் என காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி நேற்று அறிவித்தார். இதனையடுத்து அவர் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்யவுள்ளார்.

பிரதீபா பட்டீலின் பதவிக் காலம் முடிவதை அடுத்து எதிர் வரும் ஜூலை மாதம் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் நடக்கிறது. இதற்கான வேட்பு மனு தாக்கல் எதிர்வரும் 16 ஆம் திகதி தொடங்குகிறது. இந்தத் தேர்தலில் வேட்பாளராக யாரை நிறுத்தலாம் என காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி மற்றும் பா.ஜ., தலைமையிலான தே.ஜ., 04

# பிரபாகரனின் கடைசி மகன் பாலச்சந்திரனை கொல்வதற்கு உத்தரவிட்டவர் கோத்தாவே

## லங்கா நியூஸ்வெப் அதிர்ச்சித் தகவல்; இராணுவம் மறுப்பு

கொழும்பு, ஜூன் 16

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 14வயது மகன் பாலச்சந்திரன், பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் நேரடி உத்தரவின் பேரிலேயே கொல்லப்பட்டதாக லங்கா நியூஸ்வெப் இணையத்தளம் வெளியிட்டுள்ள அதிர்ச்சித் தகவலை இலங்கை இராணுவம் மறுத்துள்ளது.

இலங்கை இராணுவத்தின் 53ஆவது டிவிசன் தளபதியான பிரிகேடியர் கமால் குணரட்ணவின் (தற்போது மேஜர் ஜெனரல்) மேற்பார்வையிலேயே பிரபாகரன் பாலச்சந்திரன் கொல்லப்பட்டதாக அது கூறியுள்ளது.

இது தொடர்பாக லங்கா நியூஸ்வெப் வெளியிட்டுள்ள தகவல்கள் வருமாறு:-

2009 மே 19ஆம் திகதி காலை 7.30 மணியளவில் நந்திக்கடல் அருகே பாலச்சந்திரன் இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்தார். 4ஆவது விஜயபாகு காலாட் படைப் பிரிவைச் சேர்ந்த சார்ஜன்ட் முத்துபண்டா தலைமையிலான 8 பேர் கொண்ட இலங்கை இராணுவ அணியிடமே அவர் சரணடைந்தார்.

முதல் நாள் இரவே தனது தந்தை வேலுப்பிள்ளை பிரபாகரன் சுட்டுக்கொல்லப்பட்டு விட்டதாகவும், அவரது உடல் நந்திக்கடல் பகுதியில் உள்ள 04

# வடக்கில் காணி சுவீகரிப்பா? முடியுமானால் நிரூபியுங்கள்

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய சவால்



கொழும்பு, ஜூன் 16

வடக்கில் தனியாரின் காணிகள் அரசால் சுவீகரிக்கப்படுகின்றன என எழுப்பப்பட்டு வரும் குற்றச்சாட்டுகளை நேற்றுத் திட்டவட்டமாக நிராகரித்த பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ''வடக்கில் பலவந்தமாகத் தனியார் காணிகள் எவையும் சுவீகரிக்கப்பட்டிருந்தால் அவற்றை இனவாதம் பேசும் தமிழ் அரசியல்வாதிகள் ஆதாரத்துடன் நிரூபித்துக் காட்டட்டும்'' என்றும் சவால் விடுத்தார்.

காணி சுவீகரிப்பு என்பது வடக்கில் சில அரசியல்வாதிகளால் முன்னெடுக்கப்படும் பொய்ப்பிரசாரம் எனவும் கோத்தபாய குறிப்பிட்டார்.

வடக்கில் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் காணிகள் சுவீகரிப்புத் தொடர்பாகப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 04

## கருத்துரிமையை மதிக்கிறது பிரிட்டன்

கொழும்பு,ஜூன் 16

ஆர்ப்பாட்டம் செய்வதற்குத் தனது பிரஜைகளுக்கு உள்ள உரிமையை மதிப்பதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது. பிரிட்டனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களைத் தடுப்பதற்கு பிரிட்டன் சட்ட நடைமுறை அதிகாரிகள் தவறிவிட்டனர் என்ற குற்றச்சாட்டுக் குறித்து கருத்துக் கேட்டபோதே இலங்கைக்கான பிரிட்டன் தூதரகப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரிட்டன் பிரஜைகளின் ஆர்ப்பாட்டத்துக்கான சட்டபூர்வமான உரிமையை நாம் மதிக்கிறோம். ஆனால், இது பேச்சுச் சுதந்திரத்துக்கான உரிமையுடன் சமநிலையாகக் கையாளப்பட வேண்டும்' என பிரிட்டன் தூதரகப் பேச்சாளர் சாரா மேன் கூறினார்.

பொதுநலவாய வர்த்தகப் பேரவை 04

## ஜே.வி.பியின் கூட்டத்தில் நேற்று சூடு; இருவர் சாவு

கொழும்பு,ஜூன் 16

ஹம்பாந்தோட்டை கட்டுவன பகுதியில் நேற்று நடைபெற்ற ஜே.வி.பியின் கூட்டத்தின் மீது இனந்தெரியாத ஆயுதக் கும்பலொன்று சாராமாரியாக மேற்கொண்டதுப் பாக்கிப் பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர் .

ஆயுதம் தாங்கிய அரசின் அடிவருடிகள் கும்ப லொன்றே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது என்பதை தன்னால் உறுதியாகக் கூறமுடியும் என்று ஜே.வி.பியின் பொதுச்செய 04

## இராணுவ முகாமுக்காக காணி பறிக்க உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை

### அம்பாறை மக்கள் தாக்கல் செய்த வழக்கில் உத்தரவு

அம்பாறை,ஜூன் 16

அம்பாறை மாவட்டம் ஒலுவில் கேசன்கேணி கிராமத்தில், இராணுவ முகாம் ஒன்றை அமைப்பதற்காக மக்களின் காணிகளைச் சுவீகரிக்கும் இராணுவத்தின் நடவடிக்கைக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த இரண்டு கிராமவாசிகளால் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை விசாரித்த பின்னரே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. அதன்படி இந்த வழக்கு அடுத்த விசாரணைக்கு வரும் வரை, அதாவது அடுத்த மாதம் 23ஆம் திகதிவரை இந்த இடைக்காலத்தடை நடைமுறையில் இருக்கும்.

கடந்த டிசம்பர் மாதத்தில் தமது 04

## தமிழரை மிரட்டுகிறது இராணுவம்

### இலங்கை வந்த இந்தியக் குழு பரபரப்புப் பேட்டி

சென்னை,ஜூன் 16

வன்னி முகாம்களில் தமிழர்களை நாங்கள் சந்தித்துப் பேசினோம். தமிழர்களின் நிலை இன்னும் மிக மோசமாகத்தான் உள்ளது.இலங்கையில் நடக்கும் கொடுமைகளைச் சொல்லத் தமிழர்கள் பயப்படுகிறார்கள். அந்த அளவுக்கு இலங்கை இராணுவம் அவர்களை மிரட்டி வைத்துள்ளது என இலங்கை வந்து திரும்பிய இந்தியக் குழு சென்னையில் தெரிவித்துள்ளது.

போவோர்ட் பிளாக் நாடாளுமன்ற உறுப்பினர் வருண் முகர்ஜி 04

## பரிந்துரைகளுக்கு அமைய வடக்கு-கிழக்கில் சிங்களம்

கொழும்பு,ஜூன் 16

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய வடக்கு-கிழக்கு மக்களுக்குச் சிங்கள மொழி கற்பிக்கப்படவுள்ளது. தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் ஆலோசனைக்கு 04

## தான் குற்றமற்றவர் என முதலில் சரத் பொன்சேகா நிரூபிக்கட்டும்

### அமைச்சர் கெஹலிய சவால்

கொழும்பு, ஜூன் 16

அரசைக் குற்றஞ்சாட்டும் தான் குற்றமற்றவரென முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நிரூபிக்க வேண்டுமென அரச பேச்சாளரும் ஊடக அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அவருடைய மருமகன் பொலிஸாரினால் தேடப்பட்டு வரும் 04

## வடமராட்சியில் வயோதிப மாது அடித்துக்கொலை

வடமராட்சி, ஜூன் 16

தலையில் அடிகாயங்களுடன் வயோதிபமாது ஒருவரின் சடலம் வல்வெட்டித்துறையில் மீட்கப்பட்டது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம் 04

## மாவீரர் படங்களை வீடுகளில் வைத்திருக்கத் தடையில்லை

தமிழ் மாவீரர்களின் படங்களைப் பெற்றோர்கள் தங்கள் வீடுகளில் வைத்திருப்பதற்கு எந்த விதமான தடையும் இல்லை - என்று கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் ரேணுக ரொவல் தெரிவித்துள்ளார்.

முறிகண்டியில் நிலப்பிரச்சினை தொடர்பாக நேற்றுமுன்தினம் நடந்த சந்திப்பில் அப்பகுதி மக்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவத்தினர் சில மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுத்தனர். 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்களின் உதவியுடன் ஆட்சியைக் கவிழ்ப்போம்

## ஐ.தே.க. சூளுரை

கொழும்பு, ஜூன் 16

நாட்டின் நீதியையும், சமாதானத்தையும் சீர்குலைக்கும் கொடூரச் செயல்களை அரசு அரங்கேற்றி வருகின்றது. நாட்டில் நீதியையும் சமாதானத்தையும் நிலைநிறுத்தத் துடிக்கின்ற அரசதரப்பிலுள்ள அமைச்சர்களையும் எம்முடன் இணைத்துக்கொண்டு இந்த அரசை ஆட்சியிலிருந்து கவிழ்ப்போம். அந்தக் காலம் வெகு தொலைவில் இல்லை என ஐ.தே.கட்சி அரசுக்கு அபாயச் சங்கு ஊதியுள்ளது.

உலக சந்தையில் எரிபொருள்களின் விலை குறையும்போது, உள்நாட்டில் அதன் விலையைக் குறைக்க முடியாத அரசு எதற்காக ஆட்சியில் இருக்கவேண்டும் என அமைச்சர் விமல் வீரவன்ஸவிடமும், அரசிடமும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் நீதியும் சமாதானமும் அரசால் சீர்குலைக்கப்பட்டு வருகின்றன. அதற்கு அரசால் அரங்கேற்றப்பட்டு வருகின்ற கடந்தகால சம்பவங்களே சான்றாகும். இலங்கை விமான சேவை நிறுவனத்தின் தலைவர் நிஷாந்த விக்கிரமசிங்கவின் வீட்டிலிருந்து11 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் பெறுமதியான பணத்தையும், சொத்துகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

எமது நாட்டு நீதிக்கமையை ஒருவர் 2ஆயிரம் அமெரிக்க டொலர் பணத்தை மட்டுமே தம்வசம் வைத்திருக்க முடியும். 2 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு மேல் பணம் வைத்திருந்ததால்தான் தனுன திலகரத்னவின் தாயாரைப் பொலிஸார் கைதுசெய்தனர். ஆனால், இப்போது நிஷாந்த விக்கிரமசிங்கவின் வீட்டிலிருந்து 11ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் பணமும் சொத்துகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

ஏன் இவருக்கு எதிராக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை? அரசிலுள்ளோர் சட்டவிதிகளை மீறிச் செயற்படும்போது, அந்தச் சட்டத்தையே மாற்றிக் கொள்கின்றனர்.

இதற்காகத்தான் 17ஆவது அரசியல் சீர்திருத்தத்தை நீக்கி 18ஆவது அரசியல் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தி சட்டத்தை செயலிழக்கச் செய்துள்ளது.

தமது முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி மாகாண சபைத் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக அவற்றைக் கட்டம் கட்டமாக நடத்த அரசு திட்டமிடுகின்றது. கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய மாகாணசபைத் தேர்தல் செலவிற்காக 150 கோடி ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது.

இது யாருடைய பணம்? ஏன் இந்தப் பணத்தை இவ்வாறு நாசம் செய்கின்றனர்? இறுதியில் இந்தப் பெரும் சுமை அனைத்தையும் அப்பாவி மக்களின் தோள்களிலேயே அரசு சுமத்தும்-என்றார். (த)

## குறிப்பிட்ட காலத்துக்குள் மீள்குடியமர்வு பூர்த்தியாகாது

கொழும்பு,ஜூன் 16

இலங்கையின் வடக்கே போரினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களை மீளக்குடியேற்றும் நடவடிக்கைகள் முன்னர் கூறப்பட்ட ஜூன் 30 திகதி என்ற கால எல்லைக்குள் பூர்த்தியாக முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கூறியுள்ளார்.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னர் எதிர்பார்க்கப்பட்டதை விடச் சற்று தாமதமாகும் என் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் மேலும் கூறினார். மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கின்ற போதிலும் அவற்றைப் பூர்த்தி செய்ய மேலும் சிறிது காலம் தேவைப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிலக்கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்படாத காரணத்தினாலும், இராணுவ முகாம்களுக்காக இடங்கள் எடுக்கப்படும் பட்சத்தில் அதற்குப் பதிலாக வேறு இடங்களை அடையாளம் கண்டு மக்களை அங்கு குடியேற்ற வேண்டியுள்ளதாலும் இந்தச் சிறிய தாமதம் ஏற்படுவதாக அமைச்சர் கூறினார். இருந்தபோதிலும், அதற்கு பல மாதகாலம் பிடிக்கும் என்று கூறப்படுவது தவறு என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில், இறுதிப் போர் நடந்த பகுதிகளில் அதிக அளவிலான கண்ணிவெடிகளை அகற்ற வேண்டியுள்ளதாகக் கூறிய அமைச்சர் முரளிதரன், அங்கு விரைவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் மீளக் குடியேற்றப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டார். (த)

## சவூதி எஜமான்களின் சித்திரவதையால் 130 பணிப்பெண்கள் நாடு திரும்பினர்

கொழும்பு,ஜூன் 16

சவூதி அரேபியாவுக்கு வேலைவாய்ப்பு பெற்றுச்சென்ற பணிப்பெண்களில் 130பேர் நேற்று வெள்ளிக்கிழமை நாடு திரும்பினர் என்று இலங்கை வேலைவாய்ப்பு பணியகத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

வேலைவாய்ப்பு பெற்றுச்சென்று அந்த நாட்டு எஜமான்களினால் சித்திரவதைகளுக்கு உள்ளான நிலையில், சவூதியிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்த பணிப்பெண்களில் ஒரு தொகையினரே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர் என்றும் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இந்தத் தொகைப் பணிப்பெண்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் சவூதியிலுள்ள இலங்கை தூதரகமும் சவூதி அரசும் இணைந்து மேற்கொண்டதாக அவர் கூறினார். இவ்வாறு நாடு திரும்பியவர்களில் பலருக்குச் சம்பளம் எதுவும் கிடைக்காத நிலையிலேயே அவர்கள் நாடு திரும்பியுள்ளனர் என்று வேலைவாய்ப்புப் பணியகத்தின் பேச்சாளர் மேலும் கூறினார். (த)

## தியவதன நிலமேவுக்கு 50 மில்லியன் நஷ்ட ஈடு

### வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவு

தலதா மாளிகையின் தியவதன நிலமேயான நிலங்க தேலவுக்கு 50 மில்லியன் ரூபா நஷ்ட ஈடு வழங்குமாறு தேசிய சொத்துகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் எனும் அமைப்புக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

தலதா மாளிகையிலிருந்து தங்க முலாம் பூசப்பட்ட புத்தர் சிலைகள் சில காணாமல் போனதாகக் கூறப்பட்டதன் மூலம் தனது புகழுக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளதாகக் கூறி தியவதன நிலமே மான நஷ்ட வழக்குத் தொடுத்திருந்தார்.

இந்த வழக்கிலேயே அவருக்கு 50 மில்லியன் ரூபா நஷ்ட ஈடு வழங்குமாறு நீதிபதி தம்மிக கனேபொல உத்தரவிட்டார். (த)

## லண்டனில் தமிழரைக் கட்டுப்படுத்த ஸ்கொட்லான்ட் யார்ட் தவறியுள்ளது


### அமைச்சர் கெஹலிய குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூன் 16

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக லண்டனில் புலி ஆதரவு புலம்பெயர் தமிழர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த, ஸ்கொட்லான்ட் யார்ட் புலனாய்வுப் பிரிவு தவறியுள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குற்றம் சுமத்தியுள்ளார்.ஸ்கொட்லான்ட் யார்ட் புலனாய்வுப் பிரிவின்நடவடிக்கைகள்குறித்து திருப்தி அடைய முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக லண்டனில் புலி ஆதரவு புலம்பெயர் தமிழர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த, ஸ்கொட்லான்ட் யார்ட் புலனாய்வுப் பிரிவு தவறியதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த 6ஆம் திகதி லண்டனில் ஜனாதிபதிக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை ஸ்கொட்லான்ட்யார்ட் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததாகவும், ஓர் பார்வையாளரைப் போன்று செயற்பட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



ஓரளவு அதிகமான தமிழ் இளைஞர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.ஜனாதிபதிக்கும் நாட்டுக்கும் எதிராக நடைபெற்ற போராட்டத்தைப் புலம்பெயர் தமிழர்கள் நீண்ட காலமாகத் திட்டமிட்டு மேற்கொண்டுள்ளதாகவும் கெஹலிய தெரிவித்தார்.

மக்களைக் கட்டுப்படுத்தல், குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தல், புலனாய்வு நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு ஸ்கொட்லான்ட்யார்ட் மிகவும் பிரசித்தி பெற்றது .இவ்வாறான பின்னணியை உடைய புலனாய்வுப் பிரிவினரால் புலி ஆதரவு புலம்பெயர் தமிழர்களினால் ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிட்டுள்ளமையை முன்கூட்டியே அறியக் கிடைக்காமை ஆச்சரியமளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய வர்த்தகப் பேரவையில் ஜனாதிபதி ஆற்றவிருந்த உரையைப் பொதுநலவாய செயலகம் தன்னிச்சையாக இரத்துச்செய்தமை வருத்தமளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## மீண்டும் டெங்கு அபாயம்

கொழும்பு,ஜூன் 16

நாட்டில் மீண்டும் டெங்குக் காய்ச்சலின் பாதிப்பால் சகல பிரதான வைத்தியசாலைகளிலும் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் இந்த ஆண்டின் முதல்ஐந்து மாதங்களில்டெங்கு காய்ச்சலினால் 80 பேர் கொல்லப்பட்டதுடன், 14,500 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைகள், அரச நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்கள் உரிய முறையில் பராமரிக்கப்படுவதில்லை என சுகாதார அமைச்சு குற்றம் சுமத்தியுள்ளது.

டெங்கு நோயினால் அதிகளவில் பாடசாலை சிறுவர்களே பாதிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நாட்டில் நிலவி வரும் காலநிலையினால் டெங்குக் காய்ச்சல் ஏற்படக் கூடிய அபாயம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## துறைமுகம் ஆழ மாக்குவதால் கொழும்பில் நேற்று நில அதிர்வு

கொழும்பு,ஜூன் 16

கொழும்பில் சில பகுதிகளில் நேற்றுக் காலை நில அதிர்வொன்று உணரப்பட்டுள்ளது என இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் டப்ளியூ.ஏ.சரத் லால் குமார தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுகத்தை ஆழமாக்கும் பணிகள் இடம்பெற்று வருவதால் நிலத்துக்கு அடியில் வெடிப்புச் சம்பவங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் காரணமாகவே இந்த நில அதிர்வு உணரப்பட்டிருக்கலாம் என்று புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் தலைவர் பேராசிரியர் என்.பி.விஜயானந்த தெரிவித்தார்.

மேற்படி துறைமுக புனர்நிர்மாணப் பணிகளுக்காக இதுவரையில் 11 வெடிப்புச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இரு முறை மாத்திரமே இவ்வாறு நில அதிர்வு உணரப்பட்டது என்றும் பேராசிரியர் கூறினார்.

இந்த வெடிப்புச் சம்பவங்கள் புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் ஆலோசனைகளுக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வெடிப்புக்களின் தன்மையை அளவிடுவதற்கான கருவிகள் துறைமுகப் பகுதியில் பொருத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். இவ்வாறானதொரு நிலையில் இடம்பெறும் அதிர்வினை பூமியதிர்ச்சியாகக் கொள்ள வேண்டாம் என்றும் பேராசிரியர் அறிவித்தார். (த)

# வட மாகாணத் தேர்தல் இப்போதைக்கு இல்லை

### கண்ணிவெடி, மீள்குடியேற்றத்தைக் காரணம் காட்டுகிறது அரசு

கொழும்பு, ஜூன் 16

வடமாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, ஹிலாரி அம்மையாரும் கோருகின்றார் எனத் தெரிவித்த அரசு, வட மாகாண சபைத் தேர்தல் தற்போதைக்கு நடைபெறாது என்ற தொனியில் கருத்து வெளியிட்டதுடன், கண்ணிவெடி, மீள் குடியேற்றம் ஆகிய விடயங்களைக் காரணங்காட்டி தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்தியது அரசு.

அத்துடன், வடமாகாண சபைத் தேர்தலை அரசு விரைவில் நடத்த வேண்டுமென தேசிய, சர்வதேச ரீதியில் அழுத்தங்கள்எழும்இவ்வேளையில், வடக்கு தேர்தலை நடத்துவது குறித்து உரிய நேரத்தில் முடிவெடுக்கப்படும் என அரசு உறுதியாகத் தெரிவித்திருக்கின்றது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் காலை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது, வடமாகாண சபைத் தேர்தல் விவகாரம் தொடர்பில் ஊடகவியலாளரொருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல "வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதென்பது இலகுவான விடயமல்ல. வாக்காளர்களைப் பதிவு செய்யவேண்டும்; கண்ணிவெடிகளை அகற்ற வேண்டும்; மீள்குடியேற்றம் முழுமையாகப் பூர்த்தியடையவேண்டும்'' எனக் குறிப்பிட்டார்.

அத்துடன், வடமாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, ஹிலாரி கிளிண்டன் அம்மையார் கூட சொல்கின்றார். வடக்கு தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு உரிய வகையில் முடிவெடுக்கும் என்றும் அமைச்சர் கெஹலிய தெரிவித்தார்.

அதேவேளை, யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் ஆகின்றன. அப்படி இருக்கையிலும் ஏன் தேர்தலை நடத்துவதற்கு அரசு தாமதிக்கின்றது எனக் கேட்டபோது, தேர்தலை நடத்துவதற்கு அரசு முடிவெடுத்த பின்னர் ஊடகங்களுக்கு நாம் தெளிவுபடுத்துவோம் எனப் பதிலளித்தார் அமைச்சர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிரந்தர நியமனம் கிடைக்கும்வரை

# வன்னித் தொண்டர் ஆசிரியர் திங்கள்முதல் மறியல் போரில்

வவுனியா,ஜூன் 16

*வன்னி மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி நாளை மறுதினம் திங்கட்கிழமை மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு முன்பாக தொடர் மறியல் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர். நிரந்தர நியமனம் வழங்குவதாகக் கூறி தம்மை கல்வித்திணைக்கள அதிகாரிகள் தொடர்ச்சியாக ஏமாற்றி வருவதாகவும், இந்த இழுத்தடிப்பு முயற்சிக்கு முடிவு கட்டி தமக்கான நியமனத்தைப் பெற்றுக் கொள்ளும் வரை இந்த மறியல் போராட்டத்தை தொடரவுள்ளதாகவும் வன்னித் தொண்டர் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.*

வன்னி மாவட்ட தொண்டர்ஆசிரியர்கள் ஒன்றியத்தின் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இடம்பெற்றது. அதன் போதே இந்த தொடர்மறியல் போராட்டத்தை முன்னெடுப்பது குறித்து தீர்மானிக்கப்பட்டது.

வன்னியிலுள்ள மடு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு, வவுனியா வடக்கு, துணுக்காய் ஆகிய ஆறு வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் நீண்டகாலமாகத் தொண்டராசிரியர்களாக பணியாற்றி வருபவர்களே இந்தத் தொடர் மறியல் போராட்டத்தில் பங்குபற்றவுள்ளனர்.

இந்தப் போராட்டம் குறித்து தொண்டர் ஆசிரியர் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னியிலுள்ள பாடசாலைகளில் பணியாற்றிவரும் தொண்டராசிரியர்களாகிய நாம், எமக்கான நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி, பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு வடிவங்களில் போராட்டங்களை நடத்தியிருந்தோம். எனினும் அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும், பொய்யான வாக்குறுதிகளை எமக்கு வழங்கியிருந்தனர் இதனை நம்பிய நாம் சாத்வீக ரீதியிலான போராட்டங்களை கைவிட்டிருந்தோம்.

யாழ்.மாவட்டத்திலும், வவுனியா தெற்கு வலயத்திலும் தொண்டர்களாக பணியாற்றிய பலருக்கு அரசியல் செல்வாக்குக் காரணமாக நிரந்தர நியமனம் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் சுமார் 10 வருடங்களுக்கு மேலாகத் தொண்டர்களாகப் பணியாற்றி வரும் எமக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதன் காரணமாகவே இந்தத் தொடர் மறியல் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்தோம்.

சம்பந்தப்பட்ட தரப்பினர்களில் எமக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கான எழுத்து மூல உறுதிமொழியை வழங்கும் வரை தொடர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்- என்று தெரிவித்தனர்.

(ங-க-400)

## சிகிச்சைக்குப் போனாலும் சிங்களத்தால் சிக்கல் தான்!

### மன்னார் வைத்தியசாலையில் நோயாளர் பரிதவிப்பு

மன்னார்,ஜூன் 16

மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையிலுள்ள சில நோயாளர் விடுதிகளில் தமிழ் தெரியாத சிங்கள மருத்துவர்களும், தாதியர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களில் அநேகருக்கு தமிழ் மொழி தெரியாததால், வைத்தியசாலை நோயாளர் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்கள் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்று கூறப்படுகிறது.

மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலை தற்போது சகல வசதிகளையும் கொண்டதாக விளங்குகின்றது.

இங்கு பணியாற்றும் மருத்துவர்களில் அநேகர் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். எனினும் இனமத பேதமின்றி இவர்கள் நோயாளிகளுக்குச் சிறந்த முறையில் சேவையாற்றி வருகின்றனர்.

ஆனால் இந்த மருத்துவர்கள் சிலருக்கு தமிழ் மொழி தெரியாததால், சிகிச்சை பெறும் நோயாளர்கள் சிங்களத்திலோ அல்லது ஆங்கிலத்திலோ தான் தமது நோய் பற்றி அவர்களுக்கு விளக்க வேண்டும். தப்பித் தவறி தமிழ் மொழி மட்டும் தெரிந்த நோயாளர்கள் இவ்வாறான தமிழ் மொழி தெரியாத வைத்தியர்களிடம் சிகிச்சை பெற நேர்ந்தால் அவர்கள் தமது நோய் பற்றி விளக்க பெரும் சிரமப்படுகின்றனர். அத்துடன் நோயாளியின், உடல் நலக் குறைவு பற்றிய விளக்கத்தை பெற முடியாததால் என்ன வகையான சிகிச்சை அளிக்கலாம் என்று தமிழ் தெரியாத வைத்தியர்களும் திண்டாடுகின்றனர். ''சிகிச்சைக்குப் போன இடத்திலும் சிங்களத்தால் சிக்கல் தான்'' என்று நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தமிழ், சிங்களம் ஆகிய மொழிகள் தெரிந்த பணியாளர் ஒருவரையாவது இத்தகைய விடுதிகளில் நியமிப்பதன் மூலமாக மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமெனப் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (ங-க-12)

# முல்லையில் படையெடுக்கும் நெற்பயிர் சிற்றுண்ணிகள்

### தொடர்ந்தும் பாதிக்கப்படும் விவசாயிகள்

முல்லைத்தீவு, ஜூன் 16

முல்லைத்தீவின் சில பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட சிறுபோக நெற்பயிர்கள் சிற்றுண்ணித் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு விவசாய அலுவலகத்தைச் சேர்ந்த பாடவிதான உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

கடும் வெப்பம், மழை வீழ்ச்சியின்மை ஆகிய காரணங்களால் நெற்பயிர்களில் சிற்றுண்ணிகளின் தாக்கம் காணப்படுகின்றது, தண்ணிமுறிப்பு, உடையார்கட்டு, முள்ளியவளை, முத்துஐயன்கட்டு ஆகிய பகுதிகளிலுள்ள நெல் வயல்களே இந்தச் சிற்றுண்ணிகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

சிற்றுண்ணிகளின் தாக்கத்தினால் நெற்பயிர்களின் இலைகள் கருகிய நிலையில் பழுப்பு நிறமாக மாறிவிடுகின்றன. இதனால் பயிர்களின் வீரியம் குறைவதுடன் விளைச்சலிலும் பாதிப்புக்கள் ஏற்படும் சாத்தியக்கூறுகள் உள்ளன.


இந்தச் சிற்றுண்ணிகளை அடையாளம் காண வேண்டுமென்றால் பயிர்களின் மீது புறங்கையை வைத்துப் பார்த்தல் வேண்டும். அல்லது ஒரு வெள்ளைக் காகிதத்தை வைத்தாலும் அதில் சிற்றுண்ணிகள் மொய்ப்பதைக் காணமுடியும்.

இந்த வகைச் சிற்றுண்ணியைக் கட்டுப்படுத்துவதற்கு 'அவமைச்சின்' என்ற இரசாயனத் திரவத்தைப் பயிர்களின் மீது தெளித்தல் வேண்டும்.

சிற்றுண்ணியால் பாதிக்கப்பட்ட நெல்வயல்களின் உரிமையாளர்கள் உடனடியாக அதனைக் கட்டுப்படுத்தாது விட்டால் நெற்பயிர்கள் முழுமையாகப் பாதிக்கப்படும் நிலை ஏற்படும்- என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பெரும் போகத்தின் போது அறுவடைசெய்த நெல்லை இன்னமும் விற்க முடியாத நிலையில் பல விவசாயிகள் உள்ளனர். இதனால் தாம் பெற்ற கடன்களை அடைக்க முடியாத நிலையும் தோன்றியுள்ளது. இந்த நிலையில் சிறுபோக நெற்செய்கையில் ஏற்படும் பாதிப்புகளால் இவர்களின் நிலை மேலும் நெருக்கடிக்குள்ளாகும் என்று தெரிவிக்கப்படுகிறது

(ங-க-500)



வவுனியா தெற்கு கல்வி வலயமும் ரெக்னோ வேள்ட் கணினிக் கல்வி நிறுவனமும் இணைந்து நடத்திய க.பொ.த.உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பொருளியல் பாடச் செயலமர்வை வளவாளராகக் கலந்து கொண்ட வே.கருணாகரன் மங்கள விளக்கை ஏற்றி ஆரம்பித்து வைப்பதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் இங்கு காணலாம். (400)

# மல்லாவி திருநகரில் சிரமதானப் பணிகள்



துணுக்காய்,ஜூன் 16

மல்லாவி திருநகர் கிராமத்தில் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபத்தின் திறப்பு விழாவை முன்னிட்டுக் கிராம மக்களால் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

திருநகர் கிராமத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபத்தின் திறப்பு விழா வைபவம் மிக விரைவில் இடம்பெறவுள்ளதால் கடந்த 10 ஆம் திகதி காலை 9 மணியளவில் திருநகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சேதுபதி தவசிங்கம் தலைமையில் இடம்பெற்ற சிரமதானத்தில் 60க்கும் மேற்பட்ட கிராம மக்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். (க-415)

## அதிபர், 17 மாணவர்களுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

வவுனியா, ஜூன் 16

வவுனியா பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலய அதிபர் மற்றும் அந்தப் பாடசாலை மாணவர்கள் 17பேருக்கு எதிரான வழக்கு செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்தினுள் நுழைந்து அந்தப் பாடசாலை அதிபரும் இலங்கை ஆசிரியர் சங்க பொருளாளருமான பா.நேசராஜாவைத் தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வவுனியா மாவட்ட நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, விசாரணைகளின் பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

ஏற்கனவே சந்தேக நபர்கள் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்ட 17 மாணவர்களுடன் கோமரசன் குளம் மகாவித்தியாலய அதிபர் க.தனபாலசிங்கத்தையும் சந்தேகநபராகத் தெரிவித்து மன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்ப[illegible] அதிபர் மன்றில் மு[illegible] விசாரணையின் பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ங-4)

# மின்கம்பியில் உப்புப்படை மன்னாரில் மின்தடை

மன்னார்,ஜூன் 16

மின்கம்பிகளில் உப்புப் படை படிவதன் காரணமாகவே மன்னாரில் திடீர் திடீரென மின்சாரம் தடைப்படுவதாக மின்சார சபையின் மன்னார் அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

**கடலிலுள்ள உவர்ப்பு நீருடன் கூடிய காற்று மின்கம்பிகளில் உப்புப் படையாகப் படிகிறது. இதனால் கம்பிகளில் உரசல்கள்,வெடிப்புகள் ஏற்படுவதால் மின் தடைப்படுகிறது.**

மன்னாரில் அடிக்கடி மின்சாரம் காணாமல் போவதாக மக்கள் முறைப்பாடு தெரிவித்திருந்தனர். இது தொடர்பாகக் கேட்டபோதே மின்சார சபை மேற்குறித்தவாறு பதிலளித்தது.

இது குறித்து மின்சார சபை மேலும் தெரிவித்ததாவது-

தற்போது மன்னாரில் கடும் காற்று வீசி வருகின்றது. இதனால் மன்னார்-மதவாச்சி பிரதான வீதியிலுள்ள அதியுயர் மின் கம்பங்களிலுள்ள மின்கம்பிகளில் கடலிலுள்ள உவர்ப்பு நீருடன் கூடிய காற்று உப்புப் படையாகப் படிகிறது. இதனால் கம்பிகளில் உரசல்கள்,வெடிப்புகள் ஏற்படுவதால் மின் தடைப்படுகிறது.

தற்போது அதியுயர் சக்தி [illegible]கள் மூல[illegible]மின்கம்பிகளைக் கழுவும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இவை பூர்த்தியானதும் மன்னாருக்கான மின் விநியோகம் சீராகும்- என்றும் மன்னார் மின்சார சபை அலுவலகம் தெரிவித்துள்ளது.

சமீப காலமாகவே மன்னாரில் அடிக்கடி ஏற்படும் மின் தடை மின் தடை காரணமாகவும், திடீர் திடீரென உயர் அழுத்த மின்சாரம் பாய்வதாலும் பெறுமதியான மின் உபகரணங்கள் சேதமடைந்து வருகின்றன.

கடந்த ஆண்டும் இவ்வாறான உப்புப் படை காரணமாக அடிக்கடி மின்தடை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ங-க-12)

## முதலாம் குறுக்கு வீதி புனரமைப்பு ஆரம்பம்

நெளுக்குளம்,ஜூன் 16

வவுனியா முதலாம் குறுக்கு வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று வவுனியா நகரசபையின் பதில் தலைவரான எம்.எம்.ரதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா முதலாம் குறுக்கு வீதியில் பெருமளவான வாகனங்கள் தரித்து நிற்பதுடன் கனரக வாகனங்களின் தொடர்ச்சியான போக்குவரத்தும் இடம்பெறுகின்றது.

மேலும் இந்த வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாததால் இதில் பயணிக்கும் மக்களும், கடைத்தொகுதிகளுக்குச் செல்லும் வர்த்தகர்களும், வாடிக்கையாளர்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் இந்த வீதி தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் நகரசபைக்குக் கிடைத்துள்ளன.

இதனையடுத்து இந்த வீதியைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில் வயோதிப....

பவத்தில் இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகிலுள்ள வீடொன்றில் தனிமையில் வசித்து வந்தவரான அருணாசலம் சின்னக்கண்டு (வயது 85) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

குறித்த வயோதிப மாது தனி மையாகவே வீட்டில் வசித்து வந்துள்ளார். அவரது மூன்று பிள்ளைகளும் வெளிநாடுகளில் உள்ளனர். அவர்களில் ஒருவர் மீண்டும் ஊருக்கு வந்து அண்மைக்காலமாக அருகிலுள்ள வீடொன்றில் தங்கியுள்ளார்.

இதேவேளை குறித்த வயோதிப மாதுவின் பெறாமகன் ஒருவர் அண்மையில் டென்மார்க்கில் இருந்து வந்து கொலையுண்ட வயோதிபப் பெண்மணியுடன் தங்கியுள்ளார். நேற்றுக் காலை முதல் வீட்டில் ஆளரவம் எதுவும் தென்படாததால் சந்தேகப்பட்ட அயலவர்கள் வீட்டுக்குச் சென்று பார்த்த போது இரத்த வெள்ளத்தில் தலையில் காயங்களுடன் மூதாட்டி சடலமாக இருப்பதைக் கண்டுள்ளனர். பின்னர் இது குறித்து அவர்கள் வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு விரைந்த பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் மரண விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்காக சடலத்தை போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

குறித்த வயோதிப மாதுவை தலையில் தாக்கப் பயன்பட்ட திருவுபலகை இரத்தக் கறையுடன் சமையலறையில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து டென்மார்க்கில் இருந்து வந்திருந்த வயோதிபமாதுவின் பெறாமகன் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ங-15-8)

## கருத்துரிமையை மதிக்கிறது பிரிட்டன்...

யின் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராபஜபக்ஷ ஆற்றவிருந்த உரை இரத்துச் செய்யப்பட்டமை குறித்து பிரிட்டன் தூதுவர் பதிலளிக்கையில், இந்த உரை இரத்துச் செய்யப்பட்டமை அரசின் தீர்மானமல்ல எனக் கூறினார். 'இது அரசின் தீர்மானம் அல்ல. பொதுநலவாய வர்த்தகப் பேரவை சுயாதீனமானது. கவனமாக ஆராய்ந்தபின் பொதுநலவாய வர்த்தக பேரவை அந்தத் தீர்மானத்தை மேற்கொண்டது. அந்தத் தீர்மானத்தை நாம் மதிக்கிறோம்' என அவர் கூறினார். (த)

## இந்திய ஜனாதிபதி...

கூட்டணியிலும் குழப்பம் நிலவி வந்தது. இரண்டு கூட்டணி யிலும் உள்ள கட்சிகள் ஆளுக்கு ஒரு வேட்பாளரைப் பரிந்துரைத்து வந்தன. இந்த நிலையில் கடந்த இரண்டு வாரத்துக்கு முன்னதாக நடந்த காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்யும் அதிகாரம் சோனியாவுக்கு வழங்கப்பட்டது. இதனையடுத்து அவர் நேற்றுப் பிரணாப் முகர்ஜியை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்தார்.

நேற்று பிரதமர் மன்மோகன்சிங் மூத்த அமைச்சர்களுடன் அவசர ஆலோசனை நடத்தினார். காங்கிரஸ் தலைவர் சோனியாவையும் சந்தித்து பேசினார். இதில் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவது குறித்து ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. இவர் அமைச்சர் பதவியை எதிர்வரும் 24 ஆம் திகதி ராஜினாமாச் செய்யவுள்ளதாகவும், 25 ஆம் திகதி ஜனாதிபதிக்கு வேட்புமனுவை தாக்கல் செய்யவிருப்பதாகவும் டில்லி வட்டாரம் தெரிவிக்கிறது. அடுத்த நிதி அமைச்சர் பொறுப்பை யாருக்கு வழங்குவது என்றும் காங்கிரஸ் பரிசீலனை செய்து வருகிறது.

## ஜே.வி.பியின் கூட்டத்தில்...

லாளர் ரில்வின் சில்வா நேற்று இரவு 'உதய'னிடம் தெரிவித்தார். அதேவேளை,துப்பாக்கி ரவைகள் மூலம் இரண்டு உயிர்களை பறித்தெடுத்த வெறியாட்ட கும்பலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ள நிலையில்,துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுபவை வருமாறு-

ஹம்பாந்தோட்டை - கட்டுவன பகுதியில் நேற்று ஜே.வி.பி. முக்கிய கூட்டமொன்றை நடத்தியுள்ளது. இந்தக் கூட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர்கலந்துகொண்டனர்.

கூட்டம் ஆரம்பிக்கப்பட்டு கலந்துரையாடல்கள் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆயுதக் கும்பலொன்று கூட்டம் நடைபெற்ற பகுதியை நோக்கி தொடர்ச்சியாக - சராமரியாக - துப்பாக்கி பிரயோ கத்தை மேற்கொண்டுள்ளது. கறுப்புத்துணியால் முகத்தை மூடிக்கொண்டு-மோட்டார் சைக்கிள்களில் வட்டமிட்டவாறு சினிமாப்பாணியில் அந்த ஆயுதக் கும்பல் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளது.

ஆயுத தாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இருவர் பலியாகினர். அத்துடன் சிலர் படுகாயமடைந்தனர்.

கூட்டம் நடைபெற்ற மண்டபத்தின் உரிமை யாளரும், கூட்டத்தில் கலந்துகொண்ட பெண்ணொருவருமே இந்தச் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பலியாகியுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (10-சி)

## மாவீரர் படங்களை வீடுகளில்...

அந்த வீடுகளுக்கு குடியேறிய மக்கள் முதன் முதலில் ஆணிகளை அடித்து சில படங் களைக் கொழுவினார்கள் அந்தப் படங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வரிச்சீருடை அணிந்த மாவீரர்களின் படங்கள்.

அவர்கள் எங்களுக்கு எதிராக போர் புரிந்த பொழுதும் அவர்கள் தமிழ் மக்களின் பிள்ளைகள் என்பதை எப்படி மறுப்பது என்று கேட்ட பிரிக்கேடியர் ரேணுகா ரொவல் அதனை எந்த இராணுவ உறுப்பினரும் தடுக்கக் கூடாது என்று தான் உத்தரவிட்டார் என்றும் தெரிவித்துள்ளார்.

## இராணுவ முகாமுக்காக...

கிராமத்துக்கு வந்த இராணுவத்தினர், அங்கு தாம் முகாம்களை அமைக்கவுள்ளதால்,அங்கிருந்து கிராம மக்கள் வெளியேற வேண்டும் என்று கூறியதாகத் தமது மனுவில் தெரிவித்து மனுதாரர்கள், இந்த உத்தரவை அடுத்துச் சில கிராம வாசிகள் ஏற்கனவே அங்கிருந்து வெளியேறிவிட்டதாகவும், இந்த முகாம் காரணமாக சுமார் 50 குடும்பங்கள் பாதிக்கப்படும் நிலை உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு விசாரணையில் கருத்து வெளியிட்ட அரச தரப்பு வழக்குரைஞர், மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் கடந்த ஒக்ரோபர் மாதத்துடன் காலாவதியாகியுள்ளதால், அவற்றைக் கையகப்படுத்த அரசுக்கு அதிகாரம் உள்ளதாகத் தெரிவித்தார்.

இது குறித்துப் பிரதிவாதிகளிடம் மேலதிக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள கால அவகாசம் வேண்டும் என்றும் அரச தரப்பு வழக்குரைஞர் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார். இதற்கமைய வழக்கு விசாரணை அடுத்த மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (த)

## பரிந்துரைகளுக்கு அமைய..

அமைய தேசிய மொழிகள் மற்றும் பயிற்சி நிறுவகத்தினால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது. இதனடிப்படையில் வடபகுதியில் பணியாற்றும் தமிழ் பேசும் அரச உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழி கற்பிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக 10 நாள் விசேட பயிற்சித் திட்டம் ஒன்றை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவில் தெரிவிக்கப்பட்ட 135 பரிந்துரைகளில் 33 பரிந்துரைகளை மட்டுமே உடனடியாக நடைமுறைப்படுத்தவுள்ளதாக இலங்கை அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## தமிழரை மிரட்டுகிறது...

தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் கதிரவன், போவோர்ட் பிளாக் தேசிய செயலாளர் தேவராஜன் ஆகியோர் வன்னிப் பிரதேசத்துக்குப் பயணம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டுள்ளனர். அங்கிருந்து நேற்றுக்காலை விமானம் மூலம் சென்னை திரும்பினர்.

அவர்கள் நேற்றுக் கூட்டாகச் சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்தனர். இதன்போது அவர்கள் தெரிவித்ததாவது:-

இலங்கையில் என்ன நடக்கிறது என்ற உண்மை நிலையைக் கண்டறிய இலங்கை சென்றோம். அங்கு 3 நாள் முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால், கிளிநொச்சி, வவுனியா உள்ளிட்ட பல பகுதிகளைப் பார்வையிட்டோம்.

அங்குள்ள முகாம்களில் தமிழர்களைச் சந்தித்து பேசினோம். தமிழர்களின் நிலை இன்னும் மிக மோசமாகதான் உள்ளது. இலங்கையில் நடக்கும் கொடுமைகளைச் சொல்ல தமிழர்கள் பயப்படுகிறார்கள். அந்த அளவுக்கு இலங்கை இராணுவம் அவர்களை மிரட்டி வைத்துள்ளது.

இலங்கைத் தமிழர்கள் புனர்வாழ்வுக்கு இந்திய அரசு ஆயிரம் கோடி ரூபா கொடுத்துள்ளது. அந்தப் பணத்தில் தமிழர்கள் வசிக்கும் பகுதியில் வீதிகள் செப்பனிடப்பட்டுள்ளதைத் தவிர, மற்ற அடிப்படை வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை.தமிழர்கள் வீடு கட்ட தலா 3 லட்சம் ரூபா கொடுக்கின்றனர். அது போதுமானதாக இல்லை.

தமிழர்கள் வசிக்கும் பகுதியில் 89 ஆயிரம் பெண்கள் தங்களது கணவன்மார் இறந்து விட்டாரா, அவர்கள் கதி என்னவென்று தெரியாமல் தவிக்கின்றனர்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசினோம்.

புத்தமத வழிபாட்டுக்கு மட்டும் முக்கியதுவம் அளிக்கின்றனர். தமிழர்கள் அவதிப்படும் கொடுமைகளைப் பற்றி புகைப்படம், வீடியோ எடுத்துள்ளோம்.

நாங்கள் சேகரித்த ஆவணங்களைவைத்து போவோர்ட் பிளாக் செயற்குழுவில் விவாதித்து அறிக்கை தயாரிக்கப் படும். அந்த அறிக்கையை இந்திய அரசிடம் வழங்குவோம். நாடாளுமன்றத்தில் இந்த பிரச்சினையை எழுப்புவோம்.-என்றனர். (த)

## தான் குற்றமற்றவர் என முதலில்...

ஒருவர். அவர் தலைமறைவாகியுள்ளார். பொன்சேகா ஊழலை ஒழிப்பதில் உண்மையில் அக்கறையானவராக இருந்தால் தன் மருமகனைச் சட்டத்தின் முன் நிறுத்தி தன் நேர்மையை நிரூபிக்க வேண்டுமெனவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல கூறினார்.

பொன்சேகா இராணுவத் தளபதியானதே அரசியல் தலையீட்டின் காரணமாகத் தான். உண்மையில் ஒரு இளைப்பாறிய இராணுவ அதிகாரியான இவர் இராணுவத் தளபதியாக்கப்பட்டார். இதை அரசியல் தலையீடெனக் கருத முடியும். அவரை இராணுவத் தளபதியாக நியமித்தது தவறென்பது தெளிவான விடயம். - என்றும் கெஹலிய கூறினார். (த)

## பிரபாகரனின் கடைசி...

பற்றைக்குள் கிடப்பதாகவும் பாலச்சந்திரன் படையினரிடம் கூறியிருந்தார். இந்த விவரங்களைச் சார்ஜன்ட் முத்துபண்டா 4ஆவது விஜயபாகு படைப்பிரிவின் சி கொம்பனியைச் சேர்ந்த லெப்டினன்ட் நாலகவுக்கு தெரியப்படுத்தினார். அப்போது லெப்டினன்ட் நாலக இன்னொரு அதிகாரியான கிரிந்த, சார்ஜன்ட் விஜேசிங்க ஆகியோருடன் நந்திக்கடல் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்.

தன்னைப் பிரபாகரனின் மகன் என்று அடையாளப்படுத்திக் கொண்டு சிறுவன் ஒருவன் இரு பாதுகாவலர்களுடன் படையினரிடம் சரணடைந்துள்ளதாக 4ஆவது விஜயபாகு படைப்பிரிவின் கட்டளை அதிகாரி லெப்டினன்ட் கேணல் றோகித அலுவிகாரவுக்கு, லெப்டினன்ட் நாலக தகவல் அனுப்பினார்.

அவர் உடனடியாக, தனது மேலதிகாரியான 68-1 பிரிகேட் தளபதி லெப்டினன்ட் கேணல் லலந்த கமகே ஊடாக 53ஆவது டிவிசன் தளபதி பிரிகேடியர் கமால் குணரட்ணவுக்கு இந்த விவரங்களைத் தெரியப்படுத்தினார்.

அதையடுத்து, பிரிகேடியர் கமால் குணரட்ண பிறப்பித்த உத்தரவுக்கமைய, லெப்டினன்ட் நாலகவுடன் சர்ஜன்ட் முத்துபண்டா பாலச்சந்திரனை அழைத்துக் கொண்டு நந்திக்கடல் பற்றைக்குச் சென்றார். அங்கே பிரபாகரனின் உடலை பாலச்சந்திரன் காண்பித்தார்.

அதையடுத்து, பாலச்சந்திரனை லெப்.கேணல் லலந்த கமகே, பிரிகேடியர் கமால் குணரட்ணவிடம் அழைத்துச் சென்றார். அவர் பாலசந்திரனிடம் தனிபட்ட ரீதியாக விசாரணை நடத்தினார்.

அந்த விசாரணைகளின் போது, தனது தந்தை முதல் நாள் இரவு விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் அகப்பட்டு உயிரிழந்து விட்டார் எனப் பாலச்சந்திரன் கூறியிருந்தார். தனது தந்தையின் உடல், பற்றைக்குள் கிடப்பதாகவும், முதல் நாள் இரவு மோதலில் உயிர் தப்பிய இரு பாதுகாவலர்களுடன் தான் சரணடைந்தார் எனவும் அவர் கூறினார்.

தான் தந்தையுடன் படகு ஒன்றில் தப்பிச்செல்ல முயன்றார் எனவும், தாயாராரும், சகோதரியும் இன்னொரு படகில் தப்பிச் செல்ல முயன்றனர் எனவும் அவர் கூறியுள்ளார். எவ்வாறாயினும் மோதலில் தனது தந்தை கொல்லப்பட்டு விட்ட நிலையில், தாய்க்கும் சகோதரிக்கும் என்ன நடந்தது என்று தெரியாது என்றும் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தனது தந்தையும் மீதமிருந்த பாதுகாவலர்களும் படையினருடன் சண்டையிட்டனர் எனவும், அதன் போது இரு பாதுகாவலர்கள் தவிர ஏனையோர் உயிரிழந்து விட்டனர் எனவும் பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

இந்த விவரங்களைப் பிரிகேடியர் கமால் குணரட்ண உடனடியாகப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தனது கைத்தொலைபேசி ஊடாகத் தெரியப்படுத்தினார். இந்த விவரங்கள் அனைத்தையும் அவர் கருணா அம்மானுக்குக் கூறினார்.

பாலச்சந்திரன் உயிர் தப்பினால், விடுதலைப் புலிகளின் அடுத்த தலைவராக வருவதற்குச் சாத்தியம் உள்ளதால் அவரைக் கொன்று விடவேண்டும் என்று கருணா ஆலோசனை கூறியுள்ளார். வயதுகுறைந்த சிறுவன் என்பதால் நீதிமன்றம் அவரை விடுவித்து விடும் என்றும் அவர் கோத்தபாயவிடம் கூறியுள்ளார்.

அதையடுத்து கோத்தபாய ராஜபக்ஷ, பாலச்சந்திரன் கொலையைத் தனிப்பட்ட ரீதியாக மேற்பார்வை செய்யுமாறும், அவரது உடலை அழித்து விடுமாறும் உத்தரவிட்டார். இந்த விவரங்கள் இராணுவ அதிகாரி ஒருவர் மூலம் வெளிநாட்டு அரசு ஒன்றுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஏனையவர்களின் பாவங்களுக்குத் தாம் பொறுப்பேற்க விரும்பவில்லை என்று அந்த இராணுவ அதிகாரி கூறியுள்ளார். - இப்படி 'லங்கா நியூஸ் வெப்'தகவல்வெளியிட்டுள்ளது.

இந்தத் தகவல்களை அடியோடு மறுத்த இராணுவத் தரப்பு இவை புனையப்பட்ட பொய்கள் என்றும் தெரிவித்தது.

இதேவேளை, 'லங்கா நியூஸ் வெப்' வெளியிட்ட இந்தத் தகவல்களில் தலைவர் பிரபாகரன் குறித்து சிறுவன் பாலச்சந்திரன் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் படுபிழையானவை என்று வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு நெருக்கமான பிரமுகர்கள் தெரிவித்தனர்.

'லங்கா நியூஸ்வெப்' வெளியிட்ட இந்தத் தகவல்களில் எவையும் சுயாதீனமான தரப்புகளால் உறுதிப்படுத்தப்படவில்லை. (உ-த)

## வடக்கில் காணி சுவீகரிப்பா?...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- வடக்கில் காணிகள், குறிப்பாகத் தனியார் காணிகள் எவையும் சுவீகரிக்கப்படவில்லை; அபகரிக்கப்படவுமில்லை. சில இடங்களில் தனியாருக்குச் சொந்தமான காணிகளைப் பாதுகாப்புத் தரப்பினர் பயன்படுத்தினாலும் அந்தக் காணிகள் மீளளிக்க முடியாத ஒரு நிலைமை இருக்குமாயின் காணி உரிமையாளருடன் பேசி அவர்களுக்குரிய காணி நட்டஈட்டைச் செலுத்திய பின்னரே காணியை நாம் ஏற்கிறோம். இதுதான் உண்மை நிலைமை. இதற்கப்பால் அரச காணிகள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. அவற்றையே நாம் பொறுப்பேற்கிறோம்.

**வடக்கின் பாதுகாப்பு**

வடக்கிலிருந்து இராணுவ முகாம்களை முற்றாக அகற்றிவிட வேண்டுமெனக் கேட்கிறார்கள். அதிகளவான இராணுவ முகாம்கள் வடக்கிலா இருக்கின்றன? இராணுவ முகாம்கள் கூடுதலாக இருப்பது அநுராதபுரம் மாவட்டத்தில். இரண்டாவதாக கொழும்பு மாவட்டத்தில்தான் கூடுதலான இராணுவ முகாம்கள் உள்ளன. எனவே, கூடுதலாக இராணுவ முகாம்கள் வடக்கில் உள்ளன, அவை மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் இருக்கின்றன என்று தவறான தகவல்களை மக்களுக்கு வழங்கித் தவறாக வழிநடத்தக்கூடாது.

புலிகளின் காலத்தில் தமிழர்களின் காணிகளும், சொத்துகளும் அவர்களால் கையகப்படுத்தப்பட்டிருந்தன. இப்போது வீறாப்பாகப் பேசும் தமிழ்க் கூட்டமைப்பினரோ அல்லது வேறு எவருமோ புலிகள் காணிகளை அபகரித்துள்ளனர் என்று அப்போது அமெரிக்காவிடமோ அல்லது இந்தியாவிடமோ முறையிட்டார்களா என்று நான் கேட்க விரும்புகின்றேன். - இவ்வாறு குறிப்பிட்டார் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அப்துல் கலாமா - முகர்ஜியா அடுத்த ஜனாதிபதி யார்?

வரும் ஜூலை 19 ஆம் திகதி நடைபெறப் போகும் இந்திய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட யாரை நிறுத்துவது என்பதில் ஆளும் காங்கிரஸ் கூட்டணிக்குள் நெருக்கடி, சிக்கல் ஏற்பட்டிருப்பது கண்கூடாகத் தெரியவந்துள்ளது.

இப்பொழுது நிதி அமைச்சராக பதவியிலுள்ள பிரணாப் முகர்ஜியை நிறுத்துவதற்கு காங்கிரஸ் முடிவு செய்திருக்கும் நிலையில் கூட்டாட்சியில் இணைந்துள்ள திரிணாமூல் காங்கிரஸ் கட்சியின் தலைவர் மம்தா பானர்ஜியும் வெளியில் இருந்து ஆதரவு வழங்கும் சமாஜ் வாடிக் கட்சியின் தலைவர் முலாயம் சிங் யாதவும் அவரை ஆதரிக்க முற்றாக மறுத்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியைச் சந்தித்துப் பேசிய மம்தா பானர்ஜி அடுத்த ஜனாதிபதியாக பிரதமர் மன்மோகன் சிங்கை நிறுத்த வேண்டும், இல்லையென்றால் முன்னாள் சபாநாயகரும் இடதுசாரியுமான சோம்நாத் சட்டர்ஜியை நிறுத்த வேண்டும். அதுவும் இல்லையென்றால் முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே. அப்துல்கலாமை நிறுத்த வேண்டும். வேறு எவரையும் ஆதரிக்க முடியாது என்று கூறிவிட்டார்.

காங்கிரஸ் தரப்பில் நிறுத்தப்படும் பிரணாப் முகர்ஜியை ஆதரிக்காவிடில் இப்பொழுது உப ஜனாதிபதியாகவிருக்கும் ஹமீத் அன்சாரியை நிறுத்தலாம் என்று சோனியா காந்தி எண்ணியிருந்த நிலையில் மம்தா பானர்ஜி, சமாஜ்வாடிக் கட்சியின் தலைவர் முலாயம் சிங் யாதவைச் சந்தித்துப் பேசியதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் தான் தங்கள் வேட்பாளர் என்று அறிவித்துவிட்டார்.

இந்த இருகட்சிகளும் எடுத்துள்ள முடிவானது காங்கிரஸ் கூட்டாட்சி தொடர்ந்து நீடிப்பதை கேள்விக் குறியாக்கியுள்ளது என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தி.மு.கழகத் தலைவர் மு.கருணாநிதி ஆரம்பத்தில் அப்துல்கலாமை வேட்பாளராக நிறுத்தலாம் என்ற கருத்தைக் கொண்டிருந்தாலும் காங்கிரஸ் மேலிடம் வேறு திட்டத்தில் செயல்படுவதை அறிந்த பின் அது தீர்மானிக்கும் பிரமுகரையே தி.மு.க.வும் ஆதரிக்கும் என்று அறிவித்துவிட்டார். தி.மு.க.வின் முடிவை நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, சோனியா காந்தியைச் சந்தித்து நேற்றுமுன்தினம் தெரிவித்துவிட்டார்.

டாக்டர் மன்மோகன் சிங் பிரதமர் பதவியில் அதற்கான காலம் முடியும் வரை நீடிக்கவேண்டும். அதிலிருந்து அவரை அசைக்க முடியாது என்று சோனியா காந்தி உறுதிபடக் கூறிவிட்டார். ஹமீத் அன்சாரியையும் மம்தா பானர்ஜி அங்கீகரிக்க மறுத்திருப்பதால் காங்கிரஸ் தலைமைப்பீடம் பெரும் சிக்கலில் மாட்டிக்கொண்ட

வரும் ஜூலை 19 ஆம் திகதி நடைபெறப் போகும் இந்திய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட யாரை நிறுத்துவது என்பதில் ஆளும் காங்கிரஸ் கூட்டணிக்குள் நெருக்கடி, சிக்கல் ஏற்பட்டிருப்பது கண்கூடாகத் தெரியவந்துள்ளது.

மம்தா பானர்ஜி தம் கை ஓங்கியிருக்கும் சமயத்தில் சிறிதும் விட்டுக்கொடுக்காமல் கண்டிப்புடன் நடந்து கொள்பவர் என்பதில் பிரசித்தம் பெற்றவர்.

காங்கிரஸ் கட்சியின் சில முக்கிய தீர்மானங்களில் குறிப்பாக பெற்றோலிய விலை ஏற்றம், சில்லறை வியாபாரத்தில் வெளியார் முதலீடு மற்றும் ரயில் கட்டண உயர்வு ஆகியவற்றில் பிடிவாதத்துடன் நடந்து கொண்டு காரியம் சாதித்துக் கொண்டவர். எனவே இப்பொழுது ஜனாதிபதி வேட்பாளர் விடயத்திலும் விட்டுக்கொடுப்பது சாத்தியமில்லை என்று கருதப்படுகின்றது.

நிலைமை இவ்வாறு நீடிக்குமானால் மம்தா பானர்ஜியின் திரிணாமூல் காங்கிரஸும் முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாடிக் கட்சியும் மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கிக் கொள்ள முடிவு செய்யலாம். அவ்வாறு நடந்தால் காங்கிரஸ் கூட்டணி தனது முழுப் பதவிக் காலத்தையும் பூர்த்தி செய்யமுடியாத நிலை ஏற்படும். அவ்வாறான ஒரு நிலை வருவதை சோனியா காந்தி விரும்பமாட்டார் என்றே நம்பவேண்டும். ஆக இப்போதைய நிலையில் அப்துல்கலாம் மீண்டும் ஜனாதிபதியாக நியமனம் பெறும் சாத்தியம் உள்ளது.

அவ்வாறு செய்யும் பட்சத்திலேயே காங்கிரஸ் ஆட்சி தளம்பாமல் தனது முழு ஆயுளையும் பூர்த்தி செய்வதாய் இருக்கும். இல்லையெனில் நித்தியகண்டம் என்ற நிலையே நீடிக்கும். அப்துல் கலாமைப் பொறுத்தவரை முன்னர் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியின் போது பதவியில் இருந்தவர் என்பதைத் தவிர அரசியல் சார்பு இல்லாதவர், விண்வெளித் துறையின் விஞ்ஞானி, திருவனந்தபுரம் விண் ஆய்வு தொழில்நுட்பக்கழக பேராசிரியர். இந்தியாவின் 11ஆவது ஜனாதிபதியாக 2002 ஆம் ஆண்டுமுதல் 2007ஆம் ஆண்டு வரை பதவியில் இருந்த மேதை. சந்தர்ப்ப சூழ்நிலைகளும் இந்திய அரசியல் நகர்வும் அவருக்குச் சாதகமாக இருப்பதாகவே தெரிகிறது.

**(காங்கிரஸ் வேட்பாளர் தெரிவு அறிவிக்கப்படுவதற்கு முன்பாக எழுதப்பட்டது இந்த ஆசிரியர் தலையங்கம்)**

# சுகாதார அமைச்சின் தொழில் பயிற்சிக்கு வடக்கிலிருந்து விண்ணப்பிப்போர் குறைவு

## வெற்றிடங்களை நிரப்புகின்றனர் தென்னிலங்கையர்

யாழ்ப்பாணம்,ஜூன் 16

மத்திய சுகாதார அமைச்சால் கோரப்படுகின்ற தொழில் பயிற்சிகளுக்கு வடமாகாணத்தில் இருந்து விண்ணப்பிப்பவர்களின் வீதம் குறைவடைவதன் காரணமாக தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் உரிய வெற்றிடங்களை கடந்த 24 வருடங்களாக நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள். யாழ்.வைத்திய சாலையின் பிரதான தொழில் வழிச் சிகிச்சையாளர் ஆர்.கணேசலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

மத்திய சுகாதார அமைச்சினால் 14 பதவிகளுக்கான தொழில் பயிற்சிக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளமை தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு கூறினார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடமாகாணத்தில் கடந்த 24 வருடங்களாக மத்திய சுகாதார அமைச்சால் தொழில் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற போதும் விண்ணப்பிப்பவர்களின் வீதம் மிகக்குறைவு. இதன் காரணமாக தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் இலகுவான முறையில் குறித்த தொழில் பயிற்சிக்கு ஊடுருவி உள்ளார்கள்.

வடமாகாணத்தில் குறிப்பிட்ட பதவிகளில் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களே பதவி வகித்து வருகின்றனர். குறிப்பாக தொழில் வழிச்சிகிச்சையாளர், கதிரியக்கவியலாளர், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்,மருந்தாளர் ஆகிய பதவிகளுக்கு வடமாகாணத்தில் இருந்து விண்ணப்பிப்போர் மிகக் குறைவாக உள்ளனர். இது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படாதுவிட்டால் தமிழ் உத்தியோகத்தர்கள் எதிர்காலத்தில் இல்லாமல் போகக் கூடிய நிலையும் ஏற்படும்.

வடமாகாணத்தைச் சேர்ந்த கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களை உயர்தரத்தில் பயின்று மூன்று பாடங்களிலும் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாக உள்ள பட்சத்தில் தகுதியுடையவர்கள் கூட விண்ணப்பிப்பது கிடையாது.

எனவே பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இது குறித்து ஆலோசனைகளை வழங்கவேண்டும்.

மருந்து ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், பௌதிக சிகிச்சையாளர், தொழில்வழிச் சிகிச்சையாளர், கதிரியக்கவியலாளர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர், ஈ.சி.ஜி.தொழில்நுட்பவியலாளர், ஈ.ஈ.ஜி.தொழில்நுட்பவியலாளர், பொதுச்சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், மருந்தாளர், கண்தொழில்நுட்பவியலாளர், பல்தொழில்நுட்பவியலாளர், பூச்சியியல் உதவியாளர், பாடசாலை பற்சிகிச்சையாளர் ஆகிய பதவி நிலைகளுக்கு தகுதியுடைய விண்ணப்பதாரிகள் ஆர்வத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

தமிழ் பிரதேசமாக உள்ள வடமாகாணத்தில் சிங்கள உத்தியோகத்தர்கள் பணியாற்றும் நிலை தொடருமானால் பொதுமக்கள் பாதிப்பைச் சந்திக்க நேரிடும்.

இது தொடர்பாக கல்விச் சமூகம் வலுவூட்டல் செய்து வடமாகாணத்துக்கான தொழில் பயிற்சிகளுக்கு எமது பிரதேச விண்ணப்பதாரிகளை விண்ணப்பிப்பதற்குதூண்டவேண்டுமென்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-14)

# அரியாலையில் ரூ.1.5 மில்லியன் நிதி செலவில் கட்டடம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அரியாலை கிழக்கு கிராம அலுவலர் (ஜே/90) பகுதியில் மீனவர்களுக்கென 1.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கட்டடம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யும் பொருட்டு கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் இதற்கான நிதியை வழங்கியுள்ளது. (ம-7)

# மூன்றாவது நபரும் கைது

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயத் திருவிழாவில் இடம்பெற்ற இசை நிகழ்வின் போது மோட்டார் சைக்கிள் திருட்டுத் தொடர்பாக மேலும் ஒருவரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்று ஹான்ரில் பூட்டை உடைத்துக் கொண்டிருந்த வேளையில் பொது மக்கள் துரத்திய போது தப்பியோடிய நபரையே பொலிஸார் கைது செய்துள்ளனர். பொதுமக்களால் பிடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட இருவரையும் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தி விளக்கமறியலில் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. திருட்டுடன் தொடர்புடைய மூன்றாவது நபரும் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# கால்நடை அபிவிருத்திக்கு கடந்த வருடம் ரூ 30 மில்.

யாழ்ப்பாணம், ஜூன் 16

மாகாணத்துக்கென குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் கடந்த வருடம் வடக்கு மாகாண விவசாய அமைச்சால் கால்நடை அபிவிருத்திக்கு 30.45 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது என்று வடமாகாண விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி அமைச்சின் செயலாளர் யூ.எல்.எம். ஹால்டீன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்ட கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்துக்கு 9 வேலைத்திட்டங்களுக்கு 4.57 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

இன விருத்திக்கான நல்லினக் கடாக்கள் வழங்குவதற்கு 0.12 மில்லியனும் கால்நடை இன விருத்திப் பண்ணைகள் அமைத்தலுக்கு 0.60 மில்லியன் ரூபாவும் மாட்டுத் தொழுவங்களை மீளமைத்தலுக்கு 0.90 மில்லியன் ரூபாவும் கைவிடப்பட்ட மாடுகளைச் சுற்றிவளைத்துப் பிடித்தலுக்கு 0.80 மில்லியன் ரூபாவும் மறி ஆடுகளை விநியோகத்தலுக்கு 0.24 மில்லியன் ரூபாவும் -

ஆட்டுத் தொழுவங்களை மீளமைத்தலுக்கு 0.30 மில்லியன் ரூபாவும் கோழிக் குஞ்சுகளை விநியோகிப்பதற்கு 0.72 மில்லியன் ரூபாவும் கால்நடை வளர்ப்போர் சங்கங்களுக்குப் பக்கபலமாக இருப்பதற்கு 0.30 மில்லியன் ரூபாவும் பால் விநியோக நிலையங்களைப் புனரமைப்பதற்கு 0.60 மில்லியன் ரூபாவும் -

கிளிநொச்சி மாவட்டக் கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்தின் 8 வேலைத் திட்டங்களுக்கு 4.42 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத் திணைக்களத்தின் 8 வேலைத் திட்டங்களுக்கு 12.38 மில்லியன் ரூபாவும் வவுனியா மாவட்ட திணைக்களத்தின் 8 வேலைத் திட்டங்களுக்கு 3.31 மில்லியனும் மன்னார் மாவட்டத்தின் கால்நடை திணைக்களத்துக்கு 11 வேலைத் திட்டங்களுக்கு 5.32 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன என்று கூறினார். (ம-13)

# 'இந்தியாவை அறிந்து கொள்ளுங்கள்' 21 ஆவது நிகழ்ச்சி நிரல் கற்கைநெறி

கொழும்பு, ஜூன் 16

இந்தியாவை அறிந்து கொள்ளுங்கள் நிகழ்ச்சி நிரலின் 21 ஆவது கற்கை நெறியில் இணைந்து கொள்ள விரும்புகிறவர்களிடம் இருந்து கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

தமிழ்நாடு மற்றும் உத்தரகாந்த் மாநிலங்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படும் இந்த நிகழ்ச்சி 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதியிலிருந்து செப்ரெம்பர் 18 ஆம் திகதி வரை நடைபெறும்.

18 முதல் 26 வயதுக்குட்பட்டவர்களான இந்திய வம்சாவளியினரும் இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து இலங்கையில் வாழ்பவர்களும் இதில் கலந்து கொள்ளலாம்.

தெரிவு செய்யப்படுபவர்கள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு சென்று திரும்புவதற்கான விமான ரிக்கெற்றை விண்ணப்பதாரரே பெற்றுக் கொள்ள வேண்டும்.

பங்கு பற்றுவோர் தமது நிகழ்ச்சியை வெற்றிகரமாக முடித்தவுடன் விமான பயணக்கட்டணத்தின் 90 வீதம் திருப்பி வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் ஆங்கிலத்தில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாகவும், பட்டதாரியாக அல்லது பட்டப் படிப்பை மேற்கொள்பவராகவும் இருத்தல் வேண்டும். முதல் தடவையாக விண்ணப்பிப்பவராகவும் இருப்பது அவசியம்.

நிகழ்ச்சியின் முழு விவரம் இந்திய வெளியுறவு அமைச்சின் http://moia.gov.in இணைய முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். ஜூலை 5 ஆம் திகதிக்கு முன் இந்தியத் தூதரகத்துக்கு விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னித் தேர்தல் மாவட்டத்திலும் வாக்காளர் எண்ணிக்கை வீழ்ச்சி

வவுனியா, ஜூன் 16

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இறுதியாக நடைபெற்ற வாக்காளர் கணக்கெடுப்பின் போது 15 ஆயிரம் வாக்காளர்கள் குறைவாகவே பதிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியதே வன்னி தேர்தல் மாவட்டமாகும். கடந்த ஆண்டுக்கான கணக்கெடுப்பு வேலைகள் நிறைவுபெற்று வன்னி மாவட்ட வாக்காளர் இடாப்பு அண்மையிலேயே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகான வாக்காளர் கணக்கெடுப்பின் பிரகாரம் மன்னார் மாவட்டத்தில் 67ஆயிரத்து 862 பேரும், வவுனியா மாவட்டத்தில் ஒரு லட்சத்து ஆயிரத்து 92 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 52 ஆயிரத்து 455 பேரும் வாக்காளர்களாகப் பதிவு பெற்றுள்ளனர்.

**வாக்காளர் தமது உரிமையைப் பதிவு செய்வதில் கவனமெடுக்காமல் விடுவதால் பெருமளவான வாக்காளர்கள் பதிவுசெய்யப்படுவதில்லை.**

2010 ஆம் ஆண்டுக்கான தொகையுடன் ஒப்பிடும் போது மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 127 பேரும், வவுனியா மாவட்டத்தில் 12 ஆயிரத்து 597 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 316 பேரும் குறைவாகவே கடந்த ஆண்டில் பதிவுபெற்றுள்ளனர் என தெரிய வருகின்றது.

வாக்காளர் தமது உரிமையைப் பதிவு செய்வதில் கவனமெடுக்காமல் விடுவதால் பெருமளவான வாக்காளர்கள் பதிவுசெய்யப் படுவதில்லை. மேலும் பலர் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் தமது பெயர்களைப் பதிவு செய்கின்றனர். இவை கணினி மூலம் தெரிய வரும் போது பெயர்கள் நீக்கப்படுகின்றன.

வன்னி மாவட்டத்தில் இந்த ஆண்டுக்கான கணக்கெடுப்பு வேலைகள் கடந்த 1 ஆம் திகதி ஆரம்பமான போதும், கணக்கெடுப்பாளர்களாகக் கடமையாற்றும் பல கிராம சேவகர்கள் தமது கடமைகளை இன்னும் ஆரம்பிக்கவில்லையெனத் தெரிய வருகின்றது. வாக்காளர் தொகை மேலும் குறையுமிடத்து வன்னி மாவட்டத்திற்குத் தெரிவாகும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்படலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-402)

## கிளிநொச்சியில் பாதயாத்திரை



கிளிநொச்சி, ஜூன் 16

மதம் மாற்றப்படுவது தொடர்பாக மனமாற்றத்தை ஏற்படுத்தும் முகமாகக் கிளிநொச்சியில் பாதயாத்திரை ஒன்று இடம்பெற்றுள்ளது.

மதம் மாறுபவர்களிடமும் மத மாற்றம் செய்பவர்களிடையேயும் மன மாற்றத்தை ஏற்படுத்தும் முகமாக இந்து மகா சபையால் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகத் "தாய் மதத்தின் பெருமையை உணர்வோம்" என்னும் தொனிப் பொருளில் பாதயாத்திரை ஒன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகிய இந்த ஊர்வலத்தில் அதிக எண்ணிக்கையானவர்கள் கலந்து கொண்டதுடன் மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்ற இந்த ஊர்வலம் கிளிநொச்சி மலையாளபுரத்தை சென்றடைந்து நிறைவு பெற்றதுடன் கலந்து கொண்டவர்களிடையே கலந்துரையாடலும் இடம் பெற்றது.

(க-86)



மன்னார் மடுக்கல்வி வலயத்தைச் சேர்ந்த வெள்ளாங்குளம் பாடசாலை ஆசிரியர் முகுந்தனால் வடிவமைக்கப்பட்ட திருவள்ளுவரின் சிலையை மடுவலயக் கல்விப் பணிப்பாளர், குரூஸ் திரை நீக்கம் செய்து வைக்கிறார். (86)

## தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நெடுங்கேணியில் வேலைத் திட்டங்கள்

வவுனியா, நெடுங்கேணிப் பிரதேசத்தில் தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக இரண்டு வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதலாவது வேலைத் திட்டத்துக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 4ஆயிரத்து 212 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் 21ஆயிரத்து 484 குடும்பங்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டம் நெடுங்கேணி நகரை அண்மித்த பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாவது திட்டத்துக்கு நெடுங்கேணி தெற்கு பிரதேசத்தில் உலக வங்கி ஆயிரத்து 756 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் ஆயிரத்து 858 குடும்பங்களுக்கான குடிதண்ணீர்ப் பிரச்சினை முடிவுக்குக் கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் வவுனியா செயலக வளாகத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்துகொண்டார். மேலும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, அமைச்சர் ரிஷாத் பதியுதீன், வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிஸ்சந்திர ஆகிய முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

(க-402)

## எய்ட்ஸ் விழிப்புணர்வுச் செயலமர்வு

வவுனியா தெற்கு கல்வி வலயத்தினரின் ஏற்பாட்டில் வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்களுக்கான எய்ட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வு வவுனியா தெற்குக் கல்விப் பணிமனையில் இடம்பெற்றது. முதற்கட்டமாக 40 ஆசிரியர்கள் இந்தச் செயலமர்வில் பங்குபற்றினர்.

எய்ட்ஸ் நோயைத் தடுப்பதற்கான வழிமுறைகள், பாடசாலை மாணவர்களின் போசாக்கு, சுகாதாரம் உட்படப் பல்வேறு முக்கிய விடயங்கள் இங்கு ஆராயப்பட்டன.

இந்தச் செயலமர்வில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த பொ.சண்முகநாதன், ஆசிரிய ஆலோசகர்களான கி.மாதவன், ஆ.ஜெய்கிசன், மா.புலேந்திரராஜா ஆகியோர் விரிவுரையாற்றினர்.

(க-402)

## பூநகரியில் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் தென்னந்தோட்டம்

### நாளுக்கு நாள் அழியும் நிலை

பூநகரி, ஜூன் 16

பூநகரி, சின்னப் பல்லவராயன் கட்டுக் கிராமத்திலுள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமுள்ள தென்னந்தோட்டம் அழிவடைந்து வருகின்றது.

இந்தத் தென்னந்தோட்டம் சுமார் 500 ஏக்கர் விஸ்தீரணமுடையது. விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட இந்தத் தென்னந்தோட்டம் அவர்களால் நன்கு பராமரிக்கப்பட்டு வந்துள்ளதோடு நல்ல பயனையும் தந்துள்ளது. ஆனால் போர் முடிவடைந்த பின்னர் இராணுவத்தினர் இதனைத் தம்வசமாக்கிக் கொண்டனர்.

தற்போது உரிய பராமரிப்பில்லாததால் இந்தத் தென்னந்தோட்டம் அழிவடைந்து வருகின்றது. மேலும் இராணுவத்தினர் தென்னைகளிலுள்ள பச்சை ஓலைகளை வகைதொகையின்றி வெட்டி எடுத்துச் செல்வதாக இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் தென்னை மரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

பெரும் பயனைத் தரக்கூடிய இந்தத் தென்னந்தோட்டம் இவ்வாறு தம்கண் முன்னாலேயே அழிவடைந்து வருகின்றமை தமக்கு மிகுந்த மனவேதனையைத் தருவதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை சின்னப் பல்லவராயன் கட்டிலுள்ள காணியில்லாத 48 குடும்பங்களுக்கு இந்தக் காணியைப் பகிர்ந்தளிப்பதன் மூலமாக அவர்கள் நிரந்தர வீடுகளைப் பெறுவதற்கான சாத்தியங்கள் உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் இராணுவத்தினர் இந்தக் காணியைத் தாமாகவே விடுவிக்கும்வரை இது சாத்தியமாகாதெனவும் தெரியவருகின்றது.

(க)

## ஆசிரியர் இல்லாத ஆரம்ப பிரிவு வகுப்பு

அக்கராயன், ஜூன் 16

ஜெயபுரம் மகாவித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவு ஆசிரியர் ஒருவர் ஞானிமடம் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் இந்தப் பாடசாலையின் ஆரம்பப் பிரிவுக்கான வகுப்பொன்றில் ஆசிரியர் இல்லாத நிலை காணப்படுகிறது.

இதேபோன்று வேரவில் இந்து மகாவித்தியாலயத்திலும் இரு வகுப்புக்களுக்கு ஆசிரியர்கள் இல்லாத நிலை காணப்படுகிறது. தற்போது ஆரம்பக் கல்வியை முழுமையாகப் பெறுவதில் ஜெயபுரம் மகாவித்தியாலயம், வேரவில் இந்து மகாவித்தியாலயம் ஆகியன இடர்களை எதிர்கொண்டுள்ளன. கிளிநொச்சி வலயத்திற்கு வருகைதரும் ஆசிரியர்கள் பூநகரிப் பாடசாலைகளை விரும்பாது நகரப் பாடசாலைகளில் பணியாற்ற விரும்புவது பூநகரிப் பாடசாலைகளில் ஆசிரிய நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

(க-18)

## 7 பாடசாலைகளுக்கு பவுஸர் மூலம் குடிதண்ணீர்

அக்கராயன், ஜூன் 16

பூநகரியில் ஏழு பாடசாலைகளுக்குக் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறுவதாகப் பூநகரிக் கோட்டக் கல்வி அலுவலர் சு.தர்மரட்ணம் தெரிவித்துள்ளார்.

பூநகரிப் பாடசாலைகளில் குடிதண்ணீர்ப் பிரச்சினை உள்ளது. மீளக் குடியமர்வு இடம்பெற்றதில் இருந்து பூநகரிப் பிரதேச சபை குடி தண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டு வந்தது.

வலயக் கல்விப் பணிமனை நீர்த்தாங்கி ஒன்றை வழங்கியதன் மூலம் பூநகரி மகாவித்தியாலயம், ஞானிமடம் அ.த.க, பரமன்கிராய் அ.த.க, சுண்ணாவில் அ.த.க, கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயம், செல்லையா தீவு அ.த.க. ஆகிய பாடசாலைகளுக்குக் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறுகிறது.

(க-18)

## ஜெயபுரம் கிராம மக்களை புறக்கணிக்கப்படும் பஸ்கள்

கிளிநொச்சி, ஜெயபுரம் கிராமத்திற்கும் மன்னார் பூநகரி வீதியில் பயணிக்கும் பஸ்கள் வந்துசெல்ல வேண்டும் என ஜெயபுரம் கிராம மக்கள் நீண்டகாலமாக விடுத்து வரும் கோரிக்கை புறக் கணிக்கப்பட்டு வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியிலிருந்து மன்னாருக்குப் பயணிக்கும் பஸ்கள் ஜெயபுரம் ஊடாகப் பயணிக்கும் நிலையில் மன்னாரிலிருந்து பூநகரி வழியாக யாழ்ப்பாணம் பயணிக்கும் எந்த பஸ்ஸும் ஜெயபுரத்திற்கு வருவதில்லை. இதனால் நடந்து சென்று பல்லவராயன் கட்டுச் சந்தியை அடையும் ஜெயபுரம் கிராம மக்கள் பஸ்களில் பயணிக்க வேண்டியுள்ளது.

(க-18)

## மல்லாவி ஆதார வைத்தியசாலையில் ஒரே மாதத்தில் 19,760 பேருக்கு சிகிச்சை

துணுக்காய், ஜூன் 16

மல்லாவி ஆதார வைத்தியசாலையில் கடந்த மாதம் வரை 19ஆயிரத்து 760 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் பிரகாரம் ஜனவரி மாதம் 4 ஆயிரத்து 386 பேரும், பெப்ரவரி மாதம் 4 ஆயிரத்து 250 பேரும், மார்ச் மாதம் 4ஆயிரத்து 80 பேரும், ஏப்ரல் மாதம் 3ஆயிரத்து 321 பேரும், மே மாதம் 3ஆயிரத்து 723 பேரும் சூ என மொத்தமாக 19 ஆயிரத்து 760 பேர் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிராம மக்களின் மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வைத்தியசாலையாக மல்லாவி ஆதார வைத்தியசாலை திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலை 5 மணிக்குப் பின் வகுப்புக்கள் தனியார் கல்வி நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

### கரவெட்டிப் பிரதேச செயலர் தெரிவிப்பு

வடமராட்சி, ஜூன் 16
கரவெட்டிப் பிரதேசத்தில் மாலை 5 மணிக்குப் பின்னர் தனியார் கல்வி நிலையங்களில் வகுப்புக்கள் எதுவும் நடத்தக் கூடாது. அவ்வாறு நடத்தும் தனியார் கல்வி நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாலைக்குப் பின்னர் தனியார் கல்வி நிலையங்களில் வகுப்புக்கள் நடைபெறுவதால் மாணவர்களிடையே ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன சீர்குலைய வழிபிறக்கும்.

பெற்றோரும் பிள்ளைகளின் வருகைக்காக ஏக்கத்துடன் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இந்தக் காரணங்களை முன்வைத்து கரவெட்டிப் பிரதேசத்தில் மாலைக்குப் பின்னர் வகுப்புக்களை நடத்தக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாகக் கரவெட்டிப் பிரதேசத்தில் இயங்கி வரும் தனியார் கல்வி நிலையங்களின் இயக்குநர்களிடையே நடத்தப்பட்ட கூட்டத்தில் மாலை நேரத்துக்குப் பின்னர் தனியார் கல்வி நிலையங்கள், வகுப்புக்கள் எதனையும் நடத்துவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் ஒரு சில தனியார் கல்வி நிலையங்கள் இந்தத் தீர்மானத்தை மீறிச் செயற்படுவதாகக் கிடைத்த தகவல்களை அடுத்து அவ்வாறு செயற்படும் தனியார் கல்வி நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-8)



காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் காரைநகர் கோட்டப் பாடசாலைகளில் உள்ள வறுமைக்கோட்டுக்குட்பட்ட கண்பார்வை குறைவான மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக மூளாய் வைத்தியசாலையில் மாணவர்களுக்கான கண்பரிசோதனை இடம்பெற்றது. காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீ விக்னேஸ்வரனின் நெறிப்படுத்தலில் கண் வைத்திய நிபுணர் மருத்துவர் குகதாசன் பரிசோதனைகளை மேற்கொண்டார். (ம-250)

# கோரிக்கை நிறைவேற சிதறு தேங்காய்

### யாழ். பல்கலை ஊழியர்கள் நேற்று வழிபாடு

யாழ்ப்பாணம், ஜூன் 16
சம்பள அதிகரிப்பு உட்படத் தமது கோரிக்கைகள் வெற்றிபெற வேண்டும் என்பதற்கு ஆசி வேண்டி யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் நேற்றுப் பொங்கல் செய்து ஆயிரத்தெட்டு சிதறு தேங்காய் உடைத்து வழிபாடு செய்தனர்.

நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் இந்த வழிபாட்டில் கல்விசாரா ஊழியர்கள் ஈடுபட்டனர். தமது கோரிக்கைகளை முன்வைத்து இன்று 11 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் மாணவர்களும் இதற்குத் தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

பரமேஸ்வரன் கோயில் முன்பாக சர்க்கரைப் பொங்கல் பொங்கிப் படைத்து வழிபாடு செய்தனர். பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆலய முன்றிலில் ஆயிரத்தெட்டு சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டு வழிபாடு செய்தனர்.



பல்கலைக்கழகத்தின் அநேகமான ஊழியர்கள் இதில் கலந்துகொண்டனர். தமது கோரிக்கைகள் நிறைவேறப்படும் வரை தமது போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று ஊழியர் சங்கத்தினர் தெரிவித்தனர். (ம-4)

# சேவையில் ஈடுபடுவதற்கு அம்புலன்ஸ் படகு தயார்

யாழ்ப்பாணம், ஜூன் 16
நெடுந்தீவுக்கான அம்புலன்ஸ் மோட்டார் படகு திருத்தியமைக்கப்பட்டு மீண்டும் சேவையில் ஈடுபடத் தயாராகியுள்ளது.

நீண்ட நாள்கள் பழுதடைந்து இருந்த இந்தப் படகின் திருத்த வேலைகளைத் துரிதமாக மேற்கொள்ளுமாறு நெடுந்தீவு வைத்திய அதிகாரி மற்றும் பொதுமக்கள் கேட்டதற்கு இணங்கத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# இத்தாவில் கிராமத்துக்கு மலசலகூட வசதிகள்

பளை பிரதேசத்தில் இத்தாவில் கிராமத்தில் மீள் குடியேறிய குடும்பங்களின் சுகாதார வசதிகளைக் கருத்தில் கொண்டு, அடிப்படை வசதிகளில் ஒன்றான மலசலகூட வசதியை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ள 'ஒக்ஸ்பாம்' நிறுவனம் அதற்கான அனுமதியைப் பளை பிரதேச சபையிடம் கோரியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பளை பிரதேசத்திலுள்ள பதினெட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் முழுமையாகக் கண்ணிவெடி அகற்றப்பட்ட பதினைந்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மட்டும் முழுமையாக மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

முழுமையாகக் கண்ணிவெடி அகற்றப்படாத இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய இரு பிரிவுகளிலும் குறிப்பிட்ட தொகையான குடும்பங்கள் மட்டும் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். கண்ணிவெடி அகற்றப்படாத முகமாலையில் இதுவரை எவரும் மீளக்குடியமர்த்தப்படவில்லை.

இத்தாவில் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களின் சுகாதார வசதிகளைக் கருத்தில் கொண்டு, நூறு மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ள 'ஒக்ஸ்பாம்' நிறுவனம் பிரதேச சபையின் சட்டவிதி முறைகளுக்கமைய மலசலகூடங்கள் அமைப்பதற்கான அனுமதியை சபையிடம் கோரியுள்ளது. (ம-115)

# உயர்தர மாணவருக்கு தலைமைத்துவப் பயிற்சி

தென்மராட்சி, ஜூன் 16
சாவகச்சேரி நகர சபையும் யாழ்.வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தினரும் இணைந்து தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்பில் கற்கும் மாணவத் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி வகுப்பை நடத்தவுள்ளனர்.

இந்தப் பயிற்சி வகுப்பு, புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி நகராட்சி மன்றக் கேட்போர் கூடத்தில் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

வளவாளர்களாக யாழ். மாவட்ட முன்னாள் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் கே.பத்மநாதன், மருதங்கேணி முன்னாள் உதவி அரச அதிபர் வே.வீரபத்திர பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என்று நகர சபைச் செயலாளர் அ.புத்திசிகாமணி தெரிவித்தார். (ம-9)

# பெற்றோலியக் கூட்டுத்தாபன 50 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 16
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 50 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நேற்றுக் காலை நல்லூர் கந்தசுவாமி கோயிலில் விசேட பூசை வழிபாடுகளுடன் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காகக் கூட்டுத்தாபன உயரதிகாரிகள் கொண்ட குழு ஒன்றும் யாழ்ப்பாணம் வருகை தந்தது.



கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் சமிந்த சமரக்கோன், கூட்டுத்தாபனப் பணிப்பாளர் விஜயகுணவர்த்தனா, கூட்டுத்தாபன தொழிற்சங்க பணிப்பாளர் பந்துல சமரகுணவர்த்தனா, வடபிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன் உட்பட மற்றும் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

தொடர்ந்து விழாவில் எரிபொருள் விற்பனை நிலையப் பணியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்றும் இடம்பெற்றது. (ம-17)

# எரிந்து நாசமான கடையின் உரிமையாளருக்கு நிதி உதவி

### வர்த்தகர் சங்கம் ரூ. 5 லட்சம் வழங்குகிறது

வடமராட்சி, ஜூன் 16
நெல்லியடி நகரில் சில வாரங்களுக்கு முன்னர் மின் ஒழுக்கால் தளபாடக் கடை ஒன்று முற்றாக எரிந்து நாசமானதைத் தொடர்ந்து அந்தக் கடையின் உரிமையாளர் மீண்டும் தொழிலை ஆரம்பிக்க வசதியாக 5 லட்சம் ரூபாவை நெல்லியடி வர்த்தகர் சங்கம் இன்று வழங்கவுள்ளது.

சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்கத் தலைவர் த.அகிலதாஸ் தலைமையில் கரவெட்டிப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பொதுக்கூட்டத்தில் வைத்து தீ விபத்தால் இழப்புக்குள்ளான கடை உரிமையாளருக்கு வர்த்தகர் சங்க உறுப்பினர்களின் பங்களிப்புடன் சேகரிக்கப்பெற்ற 5 லட்சம் ரூபா வழங்கப்படும் எனச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-8)

# வலி. வடக்கில் நடமாடும் சேவை


யாழ்ப்பாணம், ஜூன் 16
வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இலவச நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் இதுவரை தமது தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளாதவர்கள், தேசிய அடையாள அட்டையை புதுப்பித்துக் கொள்பவர்கள், தேசிய அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள் பங்கு கொண்டு பயனடைய முடியும்.

இந்தச் சேவையில் வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசித்து வருபவர்களும் கலந்து கொண்டு பயனடையுமாறு தெல்லிப்பழை வலி. வடக்கு பிரதேச செயலர் கே.ஸ்ரீமேகன் தெரிவித்துள்ளார். (ம-13-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிணையில் விடுவிக்கப்பட்ட நித்தியானந்தா மீண்டும் கைது



பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்த காரணத்தால் பிணையில் விடுவிக்கப்பட்ட நித்தியானந்தா மீண்டும் கைது செய்யப்பட்டார்.

மதுரை ஆதீனத்தின் இளைய ஆதீனமாக அண்மையில் நியமிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய சுவாமியாருக்கு கர்நாடக நீதிமன்றம் ஒன்று நேற்று முன்தினம் பிணை வழங்கி உத்தரவிட்டது. எனினும் பொது அமைதிக்கு பங்கம் விளைவித்ததாகக் கூறப்பட்டு மீண்டும் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார். அவரை ஒரு நாள் நீதிமன்றக் காவலில் வைக்குமாறு ராம்நகர மாவட்ட ஆட்சியாளர் உத்தரவிட்டுள்ளார். அவர் மீண்டும் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூருக்கு அருகிலுள்ள பிடதியில் நித்தியானந்தா நடத்திவரும் ஆச்சிரமம் ஒன்றில் ஆட்சேபகரமான சில விடயங்கள் நடைபெற்று வருகின்றன என்றும் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கர்நாடக மாநில அமைச்சர் சுரேஷ் குமார் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இதனிடையே அமெரிக்காவில் வாழ்ந்து வரும் ஒரு கன்னடப் பெண்மணி, நித்தியானந்தா தன்னை பாலியல் பலாத்காரம் செய்தார் என்று ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் தெரிவித்ததை அடுத்து, கன்னட அமைப்புகள் நித்தியானந்தா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அழுத்தங்கள் கொடுத்தன.

இந்த விடயம் தொடர்பில் ஊடகத்துறையினருக் கும், நித்தியானந்தா ஆச்சிரமத்தைச் சேர்ந்தவர்க ளுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன.

இதன்பின்னர் நித்தியானந்தாவைக் கைது செய்யவும், அவரது ஆசிரமத்தில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்ளவும் கர்நாடக அரசு உத்தரவிட்டது. (வ)

## ரஞ்சிதாவும் எழுதுகிறார் சுயசரிதை



பெங்களூர், ஜூன் 16

நடிகை ரஞ்சிதா தனது வாழ்வில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து சுயசரிதை எழுதப்போவதாக அறிவித்துள்ளார். மேலும் நித்தியானந்தா தொடர்பான, சர்ச்சையான விடயங்கள் அடங்கிய இறுவட்டை உருவாக்கியது எனக்கு மிகவும் மன வேதனை அளித்துள்ளது. நீதி கேட்டு தனி ஆளாக நீதிமன்றம் ஏறி இறங்கியுள்ளேன். நீதிமன்றத்தின் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

நித்தியானந்தா தியான பீடம் குறித்து கட்டுக்கதைகள் உருவாக்கப்படுகின்றன. சுவாமியை தனிப்பட்ட முறையில் ஒழித்துக் கட்ட சூழ்ச்சி நடந்துள்ளது. நித்தியானந்தாவுடன் என்னை இணைத்துக் கூறிய அனைத்தும் கற்பனைக் கதைகள். வெறும் யூகத்தில் பல முறைப்பாடுகளை உருவாக்கி, என் கௌரவத்துக்கு பங்கம் விளைவித்தனர். என் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள், எதிர்கொண்ட பிரச்சினைகள்குறித்து சுயசரிதைஎழுதவுள்ளேன் - என்றார். (வ)

## காலமானார் 'காக்கா' ராதாகிருஷ்ணன்



நடிகர் திலகம் சிவாஜி கணேசனை திரையுலகுக்கு அறிமுகம் செய்து வைத்த பெருமைக்குரிய பழம்பெரும் நடிகர் காக்கா ராதாகிருஷ்ணன் நேற்றுமுன்தினம் மாரடைப்பால் காலமானார்.

இவருக்கு கடந்த சில மாதங்களாக மூச்சுத்திணறல் இருந்தது. அதற்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். கடந்த வாரம் ஓரளவு குணம் அடைந்து வீடு திரும்பினார்.

இருப்பினும் நேற்று முன்தினம் மாலை மீண்டும் மூச்சுத்திணறல் ஏற்பட்டு மாலை 3.30 மணிக்கு மரணம் அடைந்தார்.

காகா ராதாகிருஷ்ணன் என்றழைக்கப்படும் ராதாகிருஷ்ணன் 6 வயதில் இருந்து நாடகத்தில் நடித்தவர். நடிகர் என்.எஸ்.கிருஷ்ணன் நாடகக்குழுவில் நீண்ட காலம் நடித்தார். மங்கையர்க்கரசி என்ற படத்தின் மூலம் அறிமுகமானார். அந்தப் படத்தில் நடித்தபோது ஒருமரத்தில் ஏறி காக்கா பிடித்தவாறு நடித்திருந்தார். அதில் இருந்து அவர் 'காக்கா ராதாகிருஷ்ணன்' என்று அழைக்கப்பட்டார். இது வரை 600இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். (வ)

# மீண்டும் ஆட்சியை பிடித்தார் ஜெகன்

### ஆந்திர இடைத் தேர்தலில் அவரது கட்சி அமோக வெற்றி



ஆந்திராவில் மறைந்த ராஜசேகர ரெட்டியின் மகன் ஜெகன்மோகன் ரெட்டி ஆரம்பித்த வை.எஸ்.ஆர்.கட்சிக்கு இடைத்தேர்தலில் 15 தொகுதிகளில் அமோக வெற்றி கிடைத்துள்ளது.

கோடிக்கணக்கில் சொத்துக்களைக் குவித்தார் என்ற காங்கிரஸின் குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் எடுபடாமல் போனது.

விமான விபத்தில் சிக்கி உயிரிழந்த ராஜசேகர ரெட்டியின் மகனான ஜெகன் காங்கிரஸை எதிர்த்து கட்சி ஆரம்பித்தார். இதனால் காங்கிரஸ் அரசு இவருக்கு நெருக்கடிகொடுக்க ஆரம்பித்தது.

தந்தை ஆட்சிக்காலத்தில் தனியார் நிறுவனங்களுக்கு சலுகைகளை வாரி வழங்கி பல கோடி வருமானம் பெற்றார் ஜெகன். லாபம் அடைந்த அந்தக் கம்பனிகள் பிராயச்சித்தமாக ஜெகன் நடத்தி வரும் நிறுவனங்களில் கோடி, கோடியாக முதலீடு செய்தன.

இதன்மூலம் ஜெகன், மக்கள் பணத்தைச் சுரண்டி அளவில்லா சொத்துச் சேர்த்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டது. இதுதொடர்பாக சி.பி.ஐ.வழக்குப் பதிவு செய்து ஜெகனைச் சிறையில் அடைத்தது.

இந்தநிலையில்தான் ஆந்திராவில் 18 சட்டசபைத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கை நேற்று நடைபெற்றது.

இதில் 15 தொகுதிகளில் ஜெகன் கட்சி முன்னிலை வகிக்கிறது. காங்கிரஸ் கட்சி 2 தொகுதிகளில் மட்டுமே குறைந்த ஓட்டுக்கள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறது.

சந்திரசேகரராவ் தலைமையிலான தெலுங்கானா ராஷ்ட்டிரிய சமிதிக் கட்சி ஓர் இடத்தில் மட்டும் முன்னிலை வகிக்கிறது. பழம்பெரும் கட்சியான தெலுங்கு தேசம் (சந்திரபாபு நாயுடு) ஓர் இடத்தைக் கூடபிடிக்குமாஎன்ற கேள்வி எழுந்துள்ளது. (வ)

## கலாம் தான் வேட்பாளர்

### மம்தா திட்டவட்டம்

டில்லி, ஜூன் 16

பரபரப்பாக பேசப்பட்டு வரும் ஜனாதிபதித் தேர்தலில், முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் போட்டியிடுவார் என்று திரிணாமூல் காங்கிரஸ் கட்சி தலைவர் மம்தா பானர்ஜி உறுதியாகத் தெரிவித்தார்.

இதுகுறித்துப் பேசிய அவர், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட கலாம் சம்மதித்துள்ளார் என்றும், கலாமை வேட்பாளராக நிறுத்துவதில் தனக்கும், முலயாமுக்கும் இடையில் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை என்றும் தெரிவித்தார்.

மேலும், கலாமுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று அனைத்துக் கட்சிகளுக்கும் மம்தா வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த நிலையில், கலாமை நிறுத்துவதில் காங்கிரஸ் கட்சியின் பதிலுக்குதான் காத்திருப்பதாகவும் தகவல் அளித்துள்ளார் மம்தா.

தேர்தலில் போட்டியிடும் கலாமுக்கு மம்தா பானர்ஜி வாழ்த்துத் தெரிவித்தார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. இதனையடுத்து, ஜனாதிபதி வேட்பாளராக மீண்டும் போட்டியிடுவது குறித்த செய்தியாளர்களின் கேள் விக்கு, சரியான நேரத்தில் பொருத்தமான் முடிவை அறிவிப்பேன் என்று நேரடியாக பதில் கூறி யுள்ளார் கலாம். (வ)

**புதுக்கோட்டை இடைத்தேர்தல்:**

## அ.தி.மு.கவுக்கு வெற்றிமுகம்



புதுக்கோட்டை இடைத்தேர்தல் 14ஆவது சுற்றுகள் முடிவுகளின் படி அ.தி.மு.க. வெற்றி பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை சட்டமன்ற இடைத்தேர்தலில் நேற்று வாக்குப் பதிவுகள் எண்ணிக்கை ஆரம்பமானது. மொத்தம் ஒரு லட்சத்து 43,277 வாக்குகள் பதிவாகியுள்ளன. தொடர்ந்து அ.தி.மு.க. முன்னிலை வகித்து வருகிறது.

இதில் 14 ஆவது சுற்று முடிவில் அ.தி.மு.க. வேட்பாளர் கார்த்திக் தொண்டைமான் 64 ஆயிரத்து 333 வாக்குகளும், தே.மு.தி.க. வேட்பாளர் ஜாகீர் உசேன் 21 ஆயிரத்து 187 வாக்குகளும் பெற்றுள்ளனர்.

இதில் 13 ஆவது சுற்று முடிவில் அ.தி.மு.க. வேட்பாளர் கார்த்திக் தொண்டைமான் 59 ஆயிரத்து 903 வாக்குகளும், தே.மு.தி.க. வேட்பாளர் ஜாகீர் உசேன் 19 ஆயிரத்து 950 வாக்குகளும் பெற்றிருந்தனர். (வ)


## தமிழகத்திலும் பேஸ்புக் தடை

ஒரிசா மாநில அரசைப் போன்று தமிழக அரசும், அரசு அலுவலகங்களில் பேஸ்புக், டுவிட்டர், யூ ரியூப் போன்ற இணையத் தளங்களைப் பயன்படுத்தத் தடை விதிப்பது குறித்து அரச உயர் அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

மத்திய, மாநில அரசு அலுவலகங்களைப் பொறுத்தவரையில் அலுவலக நேரங்களில் ஊழியர்கள் கணினியிலுள்ள இணையத்தளங்கள் மூலம் பொழுது போக்குவது உட்பட பல்வேறு செயல்களிலும் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அரசு வேலை தாமதப்படுவதுடன், அரசின் செலவினமும் அதிகரித்து வருகின்றது. தமிழக அரசின் பார்வைக்கும் ஒரிசா மாநில அரசின் தடை உத்தரவு தெரியவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து அரசு அலுவலகங்களிலும் பேஸ்புக், டுவிட்டர், யூரியூப் போன்ற இணையத்தளங்களைப் பயன்படுத்துவதற்குத் தடைவிதிப்பது குறித்தும் தமிழக அரச உயர் அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர். (வ)

## ஜனாதிபதி வேட்பாளர் தேர்வில் காங்கிரஸ் நடத்தை மோசம்

### அத்வானியுடனான சந்திப்பில் ஜெ. கருத்து



ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் காங்கிரஸின் அணுகுமுறை மிக மோசமாக இருப்பதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பில், பாரதீய ஜனதாக்கட்சியின் மூத்த தலைவர் அத்வானி தமிழக முதல்வரை நேற்று முன்தினம் நேரில் சந்தித்துப் பேசினார். இதன்பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த தமிழக முதல்வர் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் காங்கிரஸின் அணுகுமுறை மிக மோசமாக இருக்கின்றது. ஜனாதிபதி வேட்பாளர் குறித்த ஊகங்களுக்குப் பதிலளிக்க முடியாது. ஜனாதிபதி வேட்பாளர் குறித்து அத்வானியுடன் விரிவாக விவாதித்தேன். எனினும் அந்த விடயங்களை குறித்து விளக்க முடியாது -என்றார்.

வெங்கையா நாயுடு தலைமையில் உள்துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழுவில் இடம்பெற்றிருக்கும் அத்வானி நேற்று முன்தினம் சென்னைக்குச் சென்றார். நேற்று கல்பாக்கம் அணு உலையைப் பார்வையிட்டார். அதன் பின்னர் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை சென்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார். இதன்போது ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் குறித்து இருவரும் ஆராய்ந்தனர்.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் அத்வானி தெரிவித்ததாவது:-

தமிழக முதல்வர் ஜெயலலிதாவும், ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக்கும் பி.ஏ. சங் மாவை ஆதரிக்கின்றனர். நாங்கள் இதுவரை முடிவு செய்யவில்லை. இன்று நடைபெற உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கூட்டத்தில் இது குறித்து முடிவு எடுக்கப்படும் - என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல் கேட்டு நடந்தால் மட்டுமே நிதியுதவி


## பாகிஸ்தானை மீண்டும் எச்சரிக்கிறது அமெரிக்கா

அமெரிக்கா கூறுவதைச் செயற்படுத்தினால் மட்டுமே பாகிஸ்தானுக்கு நிதி உதவி அளிக்கப்படும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனெட்டா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்கா கூறுவதைப் பாகிஸ்தான் செயற்படுத்த வேண்டும் என்பதையே அமெரிக்கா விரும்புகிறது. ஆனால் அதற்குப் பாகிஸ்தான் இதுவரை ஒப்புக்கொள்ளவில்லை. எனவே நிதி உதவி வழங்கும் விடயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டியுள்ளது.

பாகிஸ்தானுக்கு 2013ஆம் ஆண்டுக்கு 350 கோடி டொலர் தொகையை இராணுவ மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு அளிக்கலாம் என்று ஒபாமா நிர்வாகம் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. இந்த நிலையில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சரே



அமெரிக்கா கூறுவதைப் பாகிஸ்தான் செயற்படுத்த வேண்டும் என்பதையே அமெரிக்கா விரும்புகிறது. ஆனால் அதற்குப் பாகிஸ்தான் இது வரை ஒப்புக் கொள்ளவில்லை.

இந்தக் கருத்தை வெளியிட்டிருப்பதால், பாகிஸ்தானுக்கு நிதி உதவி கிடைப்பது மேலும் சிக்கலாகியுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து கடந்த 7 மாதங்களாக நேட்டோ படை வாகனங்கள் செல்வதற்குப் பாகிஸ்தான் அனுமதி மறுத்துள்ளது. இதனால் மாதத்துக்கு 10 கோடி டொலர் கூடுதலாகச் செலவாகின்றது. இப்போதுதான் கூடுதல் செலவு பற்றிய விவரம் முதல் முறையாக வெளியாகியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் நேட்டோ படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் 28 பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். இதற்குப் பதிலடியாக நேட்டோ வாகனங்கள் பாகிஸ்தான் தரை வழியைப் பயன்படுத்த தடை விதித்தது. இந்தச் சம்பவத்துக்கு அமெரிக்கா பகிரங்கமாக மன்னிப்பு கேட்டது.

இதையடுத்து கடந்த மாதம் சிக்காக்கோவில் நடைபெற்ற மாநாட்டில் கூட பாகிஸ்தான் எவ்வித அறிவிப்பையும் வெளியிடவில்லை.

இரு நாடுகளிடையிலான விரிசல் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில், பாகிஸ்தானுக்குக் கிடைக்க இருந்த நிதியும் நிறுத்தப்பட்டுள்ளமை சிக்கலை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

பாகிஸ்தான் தனது எல்லையை மூடும் முன்பு ஆப்கனுக்கு அனுப்ப வேண்டிய அனைத்துப் பொருள்களும் கராச்சித் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்த பின்னர் லொறிகள் மூலம் ஆப்கனுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இப்போது ஆப்கனின் வடக்குப் பகுதிக்குக் கொண்டு வரப்படுகிறது. இதற்கு ரஷ்யா மற்றும் மத்திய ஆசிய நாடுகள் தரை வழியாகச் சுற்றி வர வேண்டியுள்ளது.

இதனால் செலவும் அதிகரித்துள்ளது. இந்த ஆண்டு இறுதியிலிருந்து அமெரிக்கப் படை வீரர்கள் படிப்படியாக நாடு திரும்ப உள்ளனர். பாகிஸ்தான் போக்குவரத்துப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் செலவு அதிகரிக்கும்-என்றார்.

இந்த மாதத் தொடக்கத்தில் இந்தியா, ஆப்கன் உள்ளிட்ட ஆசிய பிராந்தியத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பனெட்டா, அமெரிக்காவின் பொறுமையைப் பாகிஸ்தான் வெகுவாகச் சோதித்துப் பார்க்கிறது என்று குறிப்பிட்டிருந்தார். (ந)

## எகிப்தில் நாடாளுமன்றை கலைக்க உத்தரவு

எகிப்து நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும், என்று அந்தநாட்டு உச்சநீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

எகிப்தில் 30 ஆண்டுகளாக ஆட்சி செய்த அதிபர் ஹொஸ்னி முபாரக்குக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்தது. இதையடுத்து இராணுவ உயர்மட்டக் குழு இடைக்கால ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. தேர்தல் நடத்தக் கோரி மக்கள் மீண்டும் போராட்டம் நடத்தியதைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு நவம்பர், டிசெம்பர் மற்றும் இந்த ஆண்டு 508 இடங்களுக்கான நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றதுடன் அதிபர் தேர்தலும் நடந்துள்ளது. எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால், மறுதேர்தல் நடைபெற உள்ளது. முபாரக் ஆட்சியில் பிரதமராக இருந்தவர், அதிபர் தேர்தலில் போட்டியிட்டதை எதிர்த்து வழக்குத் தொடரப்பட்டது. ஆனால், அவர் தேர்தலில் போட்டியிட நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. இதற்கிடையே நாடாளுமன்றத் தேர்தல், விகிதாசார முறைப்படி நடக்காததால், இது அரசியலமைப்புக்கு முரணானது எனக் கூறி நாடாளுமன்றைக் கலைக்க எகிப்து உச்சநீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

## பேச்சுக்கு பிரிட்டனை அழைக்கும் ஆர்ஜென்டீனா



சர்ச்சைக்குரிய பொக்லன்ட் தீவுகள் குறித்து பிரிட்டன் தம்முடன் பேச்சு நடத்த வேண்டும் என்று ஆர்ஜென்டீனா வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் கலந்துரையாடல் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆர்ஜென்டீன ஜனாதிபதி கிறிஸ்டீனா பேர்னாண்டஸ் கிச்னர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். எனினும்பொக்லன்ட் தீவுகள் குறித்து எந்தவிதமான பேச்சுக்கும் இடமில்லை என்று பிரிட்டிஸ் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

பொக்லன்ட் தீவுகள் பிரிட்டிஷ் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு 30 வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

இந்தத் தீவுகள் தொடர்பில் 1982 ஆம் ஆண்டு இடம்பெற்ற மோதல்களில் பொக்லன்ட் தீவுகளை ஆர்ஜென்டினாவிடமிருந்து பிரிட்டன் கைப்பற்றியிருந்தது.

இந்த மோதல்களில் 650 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிறுமியைத் துன்புறுத்திய தம்பதியருக்குச் சிறை

ஜேர்மனியிலிருந்து போஸ்னியாவிற்கு 8வயது சிறுமியை அழைத்து வந்து, வீட்டுக்குள் அடைத்து வைத்து கொடுமைப்படுத்திய தம்பதியினருக்கு 6 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மிலெங்கோ மற்றும் ஸ்லோவோஜ்கோ தம்பதியர் 19 வயதான சிறுமியை அடைத்து வைத்து கொடுமைப்படுத்துவதாக அருகில் இருப்பவர்கள் பொலிஸுக்கு தகவல் தெரிவித்தனர். உடனேவிரைந்து வந்தபொலிஸார் அந்த சிறுமியை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர்,

பன்றி சாப்பிடும் உணவுகளையும், குதிரைக்கு பதிலாக இந்த பெண்ணை வண்டி இழுக்கச் செய்தும் கொடுமைப்படுத்தியது விசாரணையில் தெரியவந்தது. இருவருக்கும் 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.



காபூலில் நடைபெற்ற ஆசிய அமைச்சர்களின் கூட்டத்தில் கலந்து கொண்ட ஆப்கானிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜல்மய் ரசூல் மற்றும் பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹினா ரப்பானி ஹார் இருவரும் கைலாகு கொடுப்பதைக் காணலாம்.

## போலியோ மருந்தின் மூலம் சதி

### பாக். பள்ளிவாசலில் பிரசாரம்

போலியோ சொட்டு மருந்து கொடுப்பது இஸ்லாத்துக்கு எதிரானது என்றும், சொட்டு மருந்து கொடுக்க வருபவர்களுக்கு எதிராகப் புனிதப் போர் நடத்த வேண்டும் என்றும் பாகிஸ்தானில் ஒரு பள்ளிவாசல் அறிவித்துள்ளது. இது குறித்து 'தி எக்ஸ்பிரஸ் ட்ரிப்யூன்' வெளியிட்டுள்ள செய்தியில்கூறியிருப்பதாவது:-

பாகிஸ்தானின் முசாபர்கார் பகுதியில் உள்ள கான் பர் பக்கா ஷெருக்கு என்ற இடத்துக்கு போலியோ சொட்டு மருந்து கொடுக்க குழு ஒன்று அங்கு சென்றது.

இது குறித்து தகவல் அறிந்த உள்ளூர் மதத் தலைவரான மௌலவி இப்ராஹிம் சிஸ்தி அந்தப் பகுதியில் உள்ள பெரிய பள்ளிவாசலுக்குச் சென்று "போலியோ சொட்டு மருந்து விஷமானது, அதைக் குழந்தைகளுக்குக் கொடுப்பது இஸ்லாத்துக்கு எதிரானது. அந்த மருந்தைக் கொடுக்கும் குழு யாரையாவது வற்புறுத்தி வழங்கினால் அவர்களுக்கு எதிராகப் புனிதப் போர் நடத்தப்படும்''என்று அறிவித்தார்.


மேலும் போலியோ மருந்து கொடுத்து மக்களை மலட்டுத் தன்மை உடையவர்களாக்க மேற்கத்திய நாடுகள் சதித் திட்டம் தீட்டியுள்ளதாகவும் மதத் தலைவர்கள் நம்ப வைத்துள்ளனர் .

# சீனாவில் கட்டாயக் கருக்கலைப்பு

## சிசுவை வெளியே எடுத்து கொன்று விடும் அக்கிரமம்

சீனாவில், இரண்டாவது குழந்தை பெற்றுக் கொள்ள, அபராதம் செலுத்தாத காரணத்தால், இளம் பெண்ணுக்கு, ஏழாவது மாதத்தில் அரச அதிகாரிகள், கட்டாயக் கருக்கலைப்பு செய்துள்ளனர். இந்தக் கருக்கலைப்புடன் தொடர்புடைய புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி ஊடகங்களின் கவனத்தை திசை திருப்பியுள்ளன.

உலகிலேயே சீனாவில் அதிக சனத்தொகைகாரணமாக , அந்நாட்டில் ஒரு குழந்தைக்கு மேல் பெற்றுக் கொள்ளத் தடை உள்ளது. மீறி பெற்றுக் கொண்டால் கடும் அபராதம் அல்லது சிறைத் தண்டனையை எதிர்கொள்ள நேரிடும். இந்த நிலையில் சீனாவின் ஷான்சி மாகாணத்தைச் சேர்ந்தவர்,



பெங் ஜியாமி. முதல் குழந்தை உள்ள நிலையில், இந்தப் பெண்ணுக்கு இரண்டாவது குழந்தை உருவானது. இதை கேள்விப்பட்ட சுகாதார அதிகாரிகள், அவரை அபராதம் செலுத்த வேண்டும் அல்லது கருக்கலைப்பு செய்ய வேண்டும் என வற்புறுத்தினர். பெங்கின் கணவர் டெங் ஜியுவான், இரண்டாவது குழந்தைக்கு ஆசைப்பட்டு அபராதம் கட்ட முயற்சித்தார்.

எனினும் உரிய காலத்தில் அவர் அந்த அபராதத்தை கட்டாத காரணத்தால், கடந்த 2ஆம் திகதி, சுகாதார அதிகாரிகள், பெங்கை, வலுக்கட்டாயமாக மருத்துவமனைக்கு கூட்டிச் சென்று அவருக்கு பிரசவ ஊசி ஏற்றி ஏழு மாத சிசுவை வெளியே எடுத்தனர். சிசு வெளியே வந்ததும், அதன் தலையில் ஊசி போட்டு கொன்று விட்டனர்.

இந்தக் காட்சிகளைப் புகைப்படமாக்கிய ஒரு சமூக ஆர்வலர் இணையத்தில் வெளியிட்டார். இது சீன மக்களிடமும் எனைய நாடுகளிலும் சீனாவின் ஒரு குழந்தை திட்டம் தொடர்பில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு சீன மனித உரிமை இயக்கத்தினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.இது குறித்து வெளிநாட்டு மனித உரிமை அமைப்பினர் ''ஹிட்லர் காலத்தில் கூட இதுபோன்ற சம்பவம் நடந்ததில்லை'' என்கின்றனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிட்டு பொதுமக்கள் சிரியாவில் படுகொலை

## சர்வதேச குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டு

லண்டன், ஜூன் 16

சிரியாவில் இராணுவம் திட்டமிட்டு பொதுமக்களைக் கொன்று குவித்து வருகின்றது என்று சர்வதேசக் குழு தமது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

சிரியாவில் அதிபர் பஷர் அல்-அசாத்தின் ஆட்சியை எதிர்த்து வெடித்த கிளர்ச்சியை அடக்க அந்தநாட்டு இராணுவம் ஏவி விடப்பட்டிருக்கிறது. இந்த வன்முறை, மோதல்களில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஐ.நா.சபை சிறப்புத் தூதர் கொபி அனான் மேற்கொண்ட முயற்சிக்குப் பின் போர் நிறுத்தம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. இருந்த போதிலும் இராணுவம் பீரங்கிகள் மூலம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. கடந்த 15 மாதங்களாக அந்த நாட்டில் வன்முறை, படுகொலைகள் நீடித்து வருகின்றன.



இந்த நிலையில் சிரியாவில் நிலவும் அத்துமீறல்களை நேரில் கண்டறிய சர்வதேச மனித உரிமை, அமைதிப் பாதுகாப்புக் குழு ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. கடந்த ஏப்ரல், மே மாதங்களில் அந்தக் குழுவினர் அங்குள்ள அலிப்போ, இடிலிப் மாகாணங்களில் உள்ள 23 நகரங்கள் மற்றும் கிராமங்களுக்குச் சென்று பார்வையிட்டனர். அங்கு வசிக்கும் பொதுமக்கள், படுகொலை செய்யப்பட்டோரின் குடும்பத்தினர், தாக்குதலில் வீடுகளை இழந்து தவிப்போர் ஆகியோரைச் சந்தித்தனர். அதன் போது சேகரிக்கப்பட்ட உருக்கமான தகவல்களை 70 பக்கங்கள் கொண்ட அறிக்கையாகத் தயாரித்து வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில், சிரிய இராணுவம் திட்டமிட்டுத் தாக்குதல் நடத்தி அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவிக்கிறது. இந்தக் கொடூரச் செயல் எல்லா இடங்களிலும் பரவலாக இடம்பெறுகிறது என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.


இதன் காரணமாகத் தாங்கள் ஏற்கனவே வலியுறுத்தியபடி, சிரியா மீது சர்வதேச நீதிமன்ற விசாரணை நடத்தப்பட வேண்டும், ஆயுதம் இறக்குமதி செய்யத் தடைவிதிக்க வேண்டும் என்று சர்வதேச குழு ஐ.நா.சபையை வலியுறுத்தி இருக்கிறது.

இது பற்றிக் கூறிய சர்வதேச அமைதிக்குழு ஆலோசகர் ரோவேரா, "நாங்கள் சிரியாவின் வடமேற்குப் பகுதி நகரங்களில் இரகசியமாக ஆய்வு நடத்தியதில் அங்கு அப்பாவி மக்களுக்கு எதிராகக் கொடுமைகள் நிகழ்த்தப்படுவதைக் கண்டோம். இராணுவ வீரர்கள் பெரும் எண்ணிக்கையில் இளைஞர்களைக் கொல்கிறார்கள். வீடுகளைத் தரைமட்டம் ஆக்குகிறார்கள். பலரைச் சட்டவிரோதமாக அழைத்துச் சென்று சித்திரவதை செய்கிறார்கள்" என்று கூறினார்.

> அங்கு பெரும் எண்ணிக்கையில் இளைஞர்களைக் கொல்கிறார்கள். பலரைச் சட்டவிரோதமாக அழைத்துச் சென்று சித்திரவதை செய்கிறார்கள்.

ஆனால் சிரிய அரசோ வெளிநாட்டுத் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருவதால்தான் இராணுவ வத்தினரும், பொலிஸாரும் கொல்லப்படுகின்றனர் என்று கூறி வருகிறது. (ந)

# ஐ.நா பாரம்பரியச் சின்னம் இயேசு பிறந்த தேவாலயம்



இயேசுநாதர் பிறந்ததாக நம்பப்படும் பெத்லஹேமில் அமைந்துள்ள பிறப்பிடத் தேவாலயம் ஐ.நா.வின் பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள யுனெஸ்கோவின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்படலாம் .

குறித்த தேவாலயம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதியானது ஐ.நா.வின் பாரம்பரியச் சின்னமாகப் பிரகடனப்படுத்தப்பட்டால் பலஸ்தீனப் பகுதியில் முதலாவதாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியாகப் பெயர் பெறும்.

பலஸ்தீனம் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் ஐ.நா.வின் யுனெஸ்கோவில் தனது அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டது. இந்தக் கோரிக்கை பலஸ்தீனத்தினாலேயே முன்வைக்கப்பட்டுள்ளது.எனினும் இதற்கு இஸ்ரேல் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

பெத்லஹேமின் மேற்குக் கரைப் பகுதியில் ஜெருசலேமிலிருந்து 8 கிலோமீற்றர் தொலைவில் இந்தப் பிறப்பிடத் தேவாலயம் அமைந்துள்ளது.

இது உலகிலுள்ள பழைமையானதும் தொடர்ந்து செயற்பாட்டில் உள்ளதுமான தேவாலயங்களில் ஒன்றாகும். வருடந்தோறும் சுமார் 2 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை தருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

## கொலையாளி புத்த துறவியானார்

இரண்டு கொலைகளைச் செய்துவிட்டு புத்த துறவியாக வாழ்ந்து வந்த நபருக்கு சீனாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் ஜியுஜியாங் பகுதியைச் சேர்ந்தவர் சியு சின்லியான் (வயது -39) என்பவர் கடந்த 1994 ஆம் ஆண்டு ரயில் நிலைய ஓய்வறையில் ஏற்பட்ட தகராறில் ஒரு கணவன்- மனைவியைக் கொலை செய்தார். அவர்களது இரண்டு வயது குழந்தையையும் தாக்கியதில் அந்தக் குழந்தைக்கு காயம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சின்லியான் மற்றும் ஐந்து பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்தக் கொலை சம்பவத்துக்குப் பின் தலைமறைவான சின்லியான், ஷிஜியாங் மாகாணத்தில் உள்ள ஹாங் ஷா நகரில் உள்ள புத்த மடாலயத்தில் புத்த துறவியாக இருந்தார்.

கடந்தாண்டு நவம்பர் மாதம் தான் இவர் இந்த மடாலயத்தில் தங்கியிருந்தது தெரிய வந்தது. இதையடுத்து இவர் கைது செய்யப்பட்டார்.

இரண்டு கொலைகளைச் செய்த குற்றத்துக்காக இவருக்கு நீதிமன்றம் மரண தண்டனை அறிவித்துள்ளது. (ந)


# சரவணா ரெக்ஸ்

வாடிக்கையாளருக்கான விசேட சலுகை

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட Special OFFICE WARE பஞ்சாபிதுணிகள் சாறிகள் இந்தியா விலைக்கே விற்பனை செய்யப்பட்டுவருகின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

இடம் - சரவணாரெக்ஸ் களஞ்சிய சாலை
சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்
(ஆடித்தள்ளுபடி நடைபெற்ற இடம்)

கையிருப்பு முடியும்வரை
நேரம்- காலை 9.00 மணி தொடக்கம்
இரவு 7.00 மணி வரை

1 சில்க் சாறி- 500/=
1 கொட்டன் சாறி- 500/=

* இந்தியன் சீக்குன்ஸ் சாறிகள் - 1500/=
* இந்தியன் பட்டுச் சாறிகள் - (Full work) 3000/=
* இந்தியன் கஸ்மீர் சாறிகள் - 1500/=
* இந்தியன் மைசூர் சில்க் சாறிகள் - 2500/=
* இந்தியன் சுங்குடி வொயில் சாறிகள் - 1000/=
* ஜப்பான் சில்க் சாறிகள்
* இந்தியன் பான்சி சாறிகள் மற்றும் பாகிஸ்தான் பஞ்சாபித்துணிகள், சில்க் பஞ்சாபித் துணிகள், கொட்டன் பஞ்சாபித் துணிகள் மற்றும் ரெடிமேற் பஞ்சாபிகள்
* பெண்களுக்கான ரொப் - 500/=
* இந்தியன் ரெடிமேற் பஞ்சாபி - 2000/=
* ஆண்களுக்கான சேட் - 500/=
* ஆண்களுக்கான ஜீன்ஸ் - 500/=

மற்றும் விதவிதமான சாறித் தெரிவுகள்

[சி/584] [2-6-9]



# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்
அமரர் க. முருகதாஸ்
(மேற்பார்வை பொது சுகாதாரப் பிரிசோதகர்)
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பொது சுகாதார பரிசோதகர்கள்
கிளிநொச்சி மாவட்டம்.
(19414) (8.9.45)



# ALLIANCE FRANCAISE DE JAFFNA

The Only Official French Language Centre in Jaffna
*Learn French the French Way*

யாழ்ப்பாணத்தில் உள்ள Alliance Francaise de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri - Nallur Road, Jaffna Phone: 021 2228093
E-mail: alliance jaffna@yahoo. com
(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம்.
(19408) (45-6-9)



# 3 ஆம் வருட நினைவுகள்



திருமதி லயன் சீமாட்டி
தவமணி பாலசிங்கம்
(தவமக்கா)

எங்களைப் பிரிந்து மூன்று வருடங்கள்
சென்றாலும் அம்மா எங்கள் இதயத்தில் வாழ்கின்றீர்கள்

அராலீ வடக்கு. [19377] [45.6.9] பாலேந்திரக்குமார் (BALAN) மகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1,350 பேருக்கு நியமனங்கள்

## மட்டக்களப்பில் வழங்க அமைச்சர் செனவிரட்ண உறுதியளித்தார் என்கிறார் கருணா

மட்டக்களப்பு,ஜூன்16

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற பட்டதாரிகளின் நேர்முகப்பரீட்சையின்படி தகுதியானவர்கள் எனத் தெரிவு செய்யப்பட்ட 1,350 பேருக்கு நியமனங்கள் வழங்குவதாக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன உறுதியளித்தார் என்று மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 950 பேருக்கே நியமனங்களுக்கான தேவைப்பாடுகள் இருக்கின்ற நிலையில் மேலதிகமாக உள்ளவர்கள் தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வந்தன. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு சென்ற பிரதி அமைச்சர் அங்கு இடம்பெற்ற நேர்முகத்தேர்வு, நியமனங்கள் குறித்து கேட்டறிந்துகொண்டார்.

**மட்டக்களப்பு மாவட்டத்தில் 950 பேருக்கே நியமனங்களுக்கான தேவைப்பாடுகள் இருக்கின்ற நிலையில் மேலதிகமாக உள்ளவர்கள் தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்டுவந்தன.**

தொலைபேசியில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்னவை தொடர்புகொண்ட விநாயகமூர்த்தி முரளிதரன், மட்டக்களப்பு மாவட்டத்தில் நேர்முகத்தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்ட அனைவருக்கும் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2009ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் பட்டதாரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட அனைவருக்கும் நியமனங்கள் வழங்கப்படும் என்றும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

இந்த நியமனங்களுக்காக யாரும் பணத்தை வழங்கி ஏமாற வேண்டாம். அவ்வாறு ஏற்பட்டால் தனது கவனத்துக்குக் கொண்டுவரு மாறு அவர் கூறினார். (ச)

## விவசாயக் கல்லூரியில் விமான நிலையமா?

### சீறுகின்றன மாணவர் சங்கங்கள்

கண்டி,ஜூன்16

குண்டசாலையிலுள்ள விவசாயக் கல்லூரியை மூடிவிட்டு, அந்த இடத்தில் சர்வதேச விமான நிலையம் ஒன்றை அமைப்பதற்கு அரசு முயற்சிப்பதாக மாணவர் சங்கங்கள் நேற்றுமுன்தினம் குற்றம் சுமத்தியுள்ளன.

இந்த நடவடிக்கை நாட்டின் விவசாயக் கல்வியை கடுமையாகப் பாதிக்கும். இந்த விவசாய கல்லூரி வளாகத்தில் திட்டமிடல் நடவடிக்கைகளை கடந்த மே மாதம் 8 ஆம் திகதி அதிகாரிகள் ஆரம்பித்ததாகவும் விமான நிலையத்துக்கான அடிக்கல் இந்த மாதம் நடப்படவுள்ளதாகவும் சோஷலிஸ மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். குண்டசாலையிலுள்ள விவசாயக் கல்லூரி 100 வருடங்களுக்கு மேல் பழையமையானது. விவசாய நிபுணத்துவம் கொண்ட 91 தொகுதி மாணவர்களை அது தோற்றுவித்துள்ளது. நாட்டின் விவசாயத்துறைக்கு இந்தக் கல்லூரி அவசியமாகும் என்று அவர் கூறினார்.

மூன்று மொழிகளிலும் இரு வருடகால டிப்ளோமா பாடநெறியை வழங்குவதால் இந்தக் கல்லூரி தனித்துவமிக்கது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

சுதேச மருத்துவத்துறையில்

## தொற்றா நோய்களுக்கான முதலாவது சிகிச்சைப் பிரிவு

நிந்தவூர்,ஜூன்16

சுதேச மருத்துவத்துறையில் முதலாவது தொற்று நோய் அல்லாத நோய்களுக்கான விசேட சிகிச்சைப் பிரிவொன்று நிந்தவூர் ஆயுள்வேத வைத்தியசாலையில் அடுத்த மாதம் ஆரம்பிக்கப் படவுள்ளது. இதற்கான அனுமதியை மாகாண சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது என்று நிந்தவூர் ஆயுள்வேத வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் கே. எல்.எம். நக்பர் தெரிவித்தார்.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சி, தனிநபர் மற்றும் சமூக வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றம், அசேதன உணவுப்பொருள்களின் பயன்பாடு ஆகியன வாதம், பக்கவாதம், புற்றுநோய், இரத்த அழுத்தம், சிறுநீரக நோய்கள் உள்ளிட்ட பல்வேறு தொற்றா நோய்களுக்கு காரணமென ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது என்று அவர் கூறினார்.

இந்த நோயாளர்களுக்கு மருத்துவ வசதியளிப்பதற்காக சுகாதார அமைச்சு அதிக பணத்தைச் செலவு செய்து வருகிறது. இதனை இயற்கை மருத்துவமான ஆயுள்வேத சுகாதாரம் மூலம் கட்டுப்படுத்தும் நோக்கில் களனி பல்கலைக்கழக விக்கிரமாராய்ச்சி ஆயுர்வேத கற்கை நிலையத்தில் டாக்டர் நக்பரினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பயனாக, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸ் மற்றும் சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் திருமதி. சிறிதர் ஆகியோரின் பங்களிப்புடன் மேற்படி சுதேச மருத்துவ துறைசார் சிகிச்சை மத்திய நிலையம் இலங்கையில், கிழக்கு மாகாணத்தில் முதன் முறையாக திறக்கப் படவுள்ளது என்று மேலும் குறிப்பிட்டார். (ச)


## புதையல் தோண்டிய நான்கு பேர் கைது

மட்டக்களப்பு,ஜூன்16

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருட்டு மானோடைப் பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படும் 4 பேரை மாவடியோடைப் படையினர் கைதுசெய்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்கள் காட்டுக்குள் பதுங்கியிருந்து புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டதை அவதானித்த படையினர் உடனடியாக இவர்களைக் கைதுசெய்து கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மேலும் 4 பேர் தப்பியோடிவிட்டனர் என்று படையினர் தெரிவித்தனர். (ச)



கிழக்கு மாகாணத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

## வயிற்றோட்டத்தால் பாதிப்பு

சப்ரகமுவ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சுமார் 50 இற்கும் அதிகமான மாணவர்கள் வயிற்றோட்டம் காரணமாக இதுவரையில் பம்பஹின்ன பிரதேச வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள் ளனர் என்று வைத்திய சாலை வைத்திய அதிகாரி ரோஹன லியனகே தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக 30 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் அவ்வப்போது வயிற்றோட்டத்துக்குச் சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விடுதியில் தங்கியிருக்கும் பெரும்பாலான மாணவர்களே வயிற்றோட்டத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்று வைத்திய அதிகாரி கூறினார். (ச)

## துணைவேந்தராக மீண்டும் இஸ்மாயில் நியமனம்

அம்பாறை,ஜூன்16

தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இரண்டாவது தடவையாகவும் கலாநிதி எஸ்.எம். எம்.இஸ்மாயில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழங்கப் பட்டுள்ளது.

இதற்கிணங்க கடந்த 13ஆம் திகதி முதல் 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13ஆம் திகதி வரை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக கலாநிதி இஸ்மாயில் கடமையாற்றவுள்ளார்.



தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் முதலாவது துணைவேந்தராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் கடந்த 2009ஆம் ஆண்டு இவர் நியமிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கைக்குண்டுகள் மீட்பு

மட்டக்களப்பு,ஜூன்16

மட்டக்களப்பு, ஆயித்தியமலைப் பொலிஸ் பிரிவிலுள்ள நெல்லூர் கிராமத்தில் கைக்குண்டுகளைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இந்தக் குண்டுகள் மீட்கப்பட்டன என்று ஆயித்தியமலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம். எஸ். பண்டார தெரி வித்தார்.

விடுதலைப்புலிகள் இந்தப் பகுதிகளை விட்டுப் பின்வாங்கிச் செல்லும் போது கைவிட்டுச் சென்ற குண்டுகளாக இவை இருக்கலாம் என்று அவர் மேலும் கூறினார். (ச)

## சட்டவிரோத மின்சாரம் பெற்றோருக்கு அபராதம்

மட்டக்களப்பு,ஜூன்16

அம்பாறை மத்திய முகாம் பிரதேசத்தில் சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெற்ற 14 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபாவும் ஏனைய 13 பேருக்கும் 16,530 ரூபா வீதம் இரண்டு லட்சத்து 34 ஆயிரத்து 890 ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.ஏ. றிஸ்வி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

மின்சாரசபையின் அம்பாறை மாவட்ட தலைமை அலுவலக விசேட பிரிவும் மத்தியமுகாம் பொலிஸாரும் இணைந்து மத்திய முகாம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் கடந்த புதன்கிழமை விசேட தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற 14 பேரை கைது செய்ததுடன் சட்டவிரோத மின்சார பாவனைக்காகப் பயன்படுத்திய மின்வயர்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இந்த நபர்களை கல்முனை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே நீதிவான் குறித்த அபராதத்தை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-32)

## மாணவர்களுக்கு சைக்கிள்

மட்டக்களப்பு,ஜூன்16

போரினால் பாதிக்கப்பட்ட வவுணதீவு பிரதேச வறிய மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இலங்கைக்கான சிறுவர் நிதியத்தின் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தினால் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ச)

## மட்டு. களுமுந்தன்வெளிக்கு மின்சாரம்

மட்டக்களப்பு,ஜூன்16

மட்டக்களப்பு, போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட களுமுந்தன் வெளி பிரதேசத்தில் போரால் பாதிக்கப் பட்டிருந்த மின்விநியோகம் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. மஹிந்த சிந்தனையின் முழு இலங்கைக்குமான ஒளியேற்றும் திட்டத்தின் கீழ் இந்த மின்விநியோகத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. களுமுந்தன்வெளிப் பிரதேசத்துக்குச் சென்ற மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனிடம் இந்தப் பிரதேச மக்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மின் விநியோகம் வழங்கப்பட்டது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சந்தனநங்கை கிருஷ்ணன் (சந்திரா)

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சந்தன நங்கை கிருஷ்ணன் (சந்திரா) நேற்றுமுன்தினம் 14.06.2012 வியாழக்கிழமை காலமானார்.



அன்னார் கிருஷ்ணன் (உரிமையாளர் - அமுல் கிறீம்கவுஸ், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான முருகப்பர் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் துஷ்யந்தன் (முகாமையாளர், செலிங்கோ இன்சூரன்ஸ் பொதுப் பிரிவு, மானிப்பாய்க் கிளை), வாசுகி (ஆசிரியை- சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஜெகன் (லண்டன்), மீரா (செயலாளர், உலக சுகாதார நிறுவனம் (WHO) யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயும், யசோ, Prof. ரவிராஜன் (தலைவர், பௌதிகவியல்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), நகுலினி (லண்டன்), Dr. தயாபரன் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியும், அபிசானி, அனுகாஷினி, ஆகாஷ், சர்வேஷ், ரம்யன், ஆதவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சியாமளா (ஜேர்மனி), கிருஷா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், குலவீரசிங்கம் (ஜேர்மனி), சண்முகதாஸ் (பிரான்ஸ்), நடேசன், சதாசிவம், பொன்னம்மா, ராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.06.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மாயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5/4, றக்கா வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (19380) (45.6.9)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி கனகரத்தினம்மா வேலுப்பிள்ளை



வட்டுக்கோட்டை, கனகரத்தினம் வீதியைப் பிறப்பிடமாகவும், பிள்ளையார் கோயிலடி, சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம்மா வேலுப்பிள்ளை நேற்றுமுன்தினம் (14.06.2012) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மக ளும் சிவாஜி, சிவஜோதி, சிவாஜினி (லண்டன்), சிவறஜ்ஜினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், கௌரி, சகுந்தலா, தயா பரன் (லண்டன்), கேசவன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், மயூரன், பிரணவன் (லண்டன்), பிரவீனா (லண்டன்), பிரகாமி (லண்டன்), மாவலன் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2012) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி,
சித்தன்கேணி. (19395) (6,9,10)

தகவல்:
வே. சிவஜோதி (மகள்)

### தேவை

யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட உயர் கல்வி நிலையமொன்றுக்கான வீடு அல்லது கட்டடம் தேவை.
தொடர்பு : 0777 444 407 (19418) (45.6.9)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி கென்ஸ்மன் வீதி, முதலாம் ஒழுங்கையில் உள்ள மதிலுடனும், கிணற்றுடனும் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0777563525 (14740)(2-9-6)

### விற்பனையாளர் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள விற்பனையாளர் (ஆண், பெண்) தேவை. பழக விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம்.
தொடர்பு:- 0777563525 (14741)(2-9-6)





# EPSIBA BEAUTY CARE
## எப்சிபா
அழகுக்கலையகம்

கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்ட அழகுக்கலை நிபுணர்களால் அழகுக்கலை பயிற்சி வகுப்புகள் சான்றிதழ்களுடன் வழங்கப்படும். மணப்பெண் அலங்காரத்துடன் அனைத்து அழகுக்கலைச் சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

**EPSIBA BEAUTY CARE**
எப்சிபா அழகுக்கலையகம்
23, கண்டி வீதி, சாவகச்சேரி தொ.பே.இல : 021 7200919 (14743)(2-6-9)

# சேவை நயப்பு - 16.06.2012



உயர்திரு.துரைஐயா எங்கரசு
கோட்டக்கல்விப் பணிப்பாளர், சங்கானை
பிறந்த திகதி:– 1952.06.13
ஆரம்பக் கல்வி:– யா/இணுவில் மத்திய கல்லூரி.
இடைநிலைக்கல்வி:– யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
பட்டப்படிப்பு:– பேராதனைப் பல்கலைக்கழகம்.

ஆசிரியர் சேவை விவரம்
★ 1984.03.12 – 1991.05.31
மினு/ கல்லொழுவ முஸ்லீம் வித்தியாலயம்.
மினு/ நீர்கொழும்பு அல்ஹிலால் ம.வி.
யா/ புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி

அதிபர் சேவை
★ 01.06.1991 – 04.05.2006
யா/ ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்
யா/ ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்
யா/ இணுவில் மத்திய கல்லூரி

கோட்டக்கல்விப் பணிப்பாளர்
சங்கானைக் கல்விக்கோட்டம் – சங்கானை.
2006.05.03 – 2012.06.12

அதிபர், ஆசிரியர்கள், கோட்டக்கல்விப்பணிமனை, சங்கானை.
(19396) (2-9-6)

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெருவில் பிரதான வீதிக்கு அருகில் விசாலமான வீடு வாடகைக்கு உண்டு. களஞ்சிய சாலைக்கு உகந்தது.
தொடர்பு : 077 344 6673 (19416) (45,6,9)

### கடை விற்பனைக்கு

காரைநகர் வலந்தலை ஆஸ்பத்திரிக்கு முன்பாக மலசலகூடம், கிணறு ஆகியவற்றுடன் கூடிய விசாலமான நிலப்பரப்பைக் கொண்ட இரு கடைகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு : 0776331061 (19387)

### காணி விற்பனைக்கு

பூநகரி பிரதான வீதியில் 13 ஏக்கர், 38 பேட்செஸ் காணி விற்பனைக்குண்டு.
பகுதி பகுதியாகவும் விற்கப்படும்
(19225) தொடர்புகளுக்கு :077 9689043

### தவறிவிட்டது

கோகுலகுமார் பிரியா என்பவரது யாழ் பல்கலைக் கழக பட்டச் சான்றிதழ் 07.06.2012 அன்று கச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பேருந்தில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
0773122198
சான்றிதழ் வழங்கப்பட்ட திகதி: 12.03.2010
(19386) (6,9,10)

### வீடுவளவு விற்பனைக்கு

இராஜவீதி, நீர்வேலி மேற்கில் பவானி களஞ்சியத்துக்கு அருகில் 4 பரப்பு 16 குளி காணியில் அமைந்துள்ள நல்ல நிலையிலுள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 077 6191083
(சி/9322)(6-7-8)

### வயறிங், AC வேலைகள் செய்து கொடுக்கப்படும்

உங்கள் வீடுகளில் வயறிங், பைப்லைன் மற்றும் AC திருத்த வேலைகள் குறைவான செலவிலும் குறுகிய காலத்திற்குள் பாதுகாப்பான முறையில் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 1970395, 021 3006140
(19186)(6-9-8)

### தேவை

யாழ்.நகர் பஸ் நிலையம் முன்பாகவுள்ள பார்மசி, கிளினிக்குக்குப்பின்வரும்பதவிக்குஆள்கள்தேவை.
★ வியாபார நிலைய மேற்பார்வையாளர். (முன் அனுபவம் இருத்தல் நன்று)
★ பயிற்றப்பட்ட தாதியர்
★ Accounts Clerk
நேர்முகத் தெரிவு
... ன்றைஸ் மெடி கிளினிக்
17.06.2012 ஞாயிறு 9 மணிக்கு
(19382)(2-6-9)

### காணி விற்பனைக்கு

அல்வாய் வடமத்தி, சற்கோட்டையை அண்மித்த பகுதியில் 10 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0779305617 (18662)(2-6-9)

### J.C.B வாடகைக்கு (பைக்கோ)



★ போக்குவரத்துக்கூலி அறவிடப் படமாட்டாது
★ குறைந்த கட்டணத்தில் துரித சேவைக்கு இன்றே நாடுங்கள்

இல. 207, புதிய எரிபொருள் நிரப்பு நிலையம், சுன்னாகம், பளை (தபாற்கந்தோர் எதிரில்)

தொடர்புகளுக்கு:
077 7712482/ 0779847285 (19406) (6-10)

### மணமக்கள் தேவை

★ 83 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 18 ¼ பாவம் உடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
★ 82 இல் பிறந்த 7இல் செவ்வாய் 20 ¾ பாவமுடைய கனடா பிரஜாவுரிமை பெற்று வந்துள்ள மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை.
★ 83 இல் பிறந்த 7 இல் சூரியனும் செவ்வாயும் உடைய 51 பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
★ 81 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 22 பாவமுடைய ஆஸ்திரேலியா இஞ்சினியருக்குப் படித்த மணமகள் தேவை.
★ 77 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 50 பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற மண மகனுக்கு படித்த மணமகள் தேவை.
★ 79 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 14 பாவமுடைய ஆஸ்திரேலியாவில் சொவ்வெயர் இஞ்சினியராகப் பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
★ 72 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 20 பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்று விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
★ 81 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 8 ½ பாவ முடைய லண்டன் இஞ்சினியர் Work Pemet இல் பணிபுரியும் மணமகனுக்கு லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகள் தேவை.
★ 78 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 23 பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமைபெற்ற எக்கவுண்டனுக்குப் படித்த மணமகள் தேவை.
★ 79 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 13 ¼ பாவமுடைய B.Sc. Quanti Serviyaring ஆக புறுணையில் பணிபுரியும் மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
★ 89 இல் பிறந்த RC வேதமுடைய ஆஸ்திரேலியா பிரஜாவுரிமைபெற்ற மணமகளுக்கு RC வேதமுடைய மணமகன் தேவை.
★ 87 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 26 ¼ பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜாவுரிமைபெற்ற மணமகளுக்கு படித்த மணமகன் தேவை.
தொடர்பு : கமலக்கண்ணன் திருமணசேவை
இல. 320, கோயில் வீதி, நல்லூர். 077 6070862 (19370) (2-6-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரத் தளபாடம் குறித்த சட்டத்தில் திடீர் தளர்வு

## இனி அனுமதி தேவைப்படாது

கொழும்பு,ஜூன்16

மரம் மற்றும் மரத்திலான வீட்டுத் தளபாடங்கள் தொடர்பான சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளன. நடைமுறையில் உள்ள சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு, சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதாக சுற்றாடல் துறை அமைச்சின் செயலாளர் பீ.எம்.யூ.டீ.பஸ்நாயக்க குறிப்பிட்டார்.

புதிய விதிமுறைகளுக்கமைய, சந்தனம், கருங்காலி உள்ளிட்ட 4 வகையான பெறுமதி மிக்க மரங்களினால் தயாரிக்கப்படும் வீட்டுத் தளபாடங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வகையான வீட்டுத் தளபாடங்களையும் அனுமதிப் பத்திரமின்றி நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் கொண்டு செல்ல முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தவிர வெட்டப்பட்ட மரங்களைக் கொண்டு செல்வது தொடர்பான சட்டத்திலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். (ச)



இலங்கையில் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு நூல் நிலையக் கட்டடங்கள், புத்தகங்கள், கற்பித்தல் உபகரணங்களை 50 கோடி ரூபாவுக்குப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய அமெரிக்க இராஜ்ஜியத்தின் பிரதான அலுவலகத்தின் முதன்மை செயற்றிட்ட அலுவலர் கோரி ஹேமனும் தேசிய மொழிகள் செயல்திட்ட அலுவலர் வில்ஃபிடோ பஸ்குவல்வுடன் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண, இலங்கையின் தேசிய அத்தியட்சகர் சந்திரா ரணவிக்ரம ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ)

# அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றுபவர்கள் இனி கைதாவர்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவிப்பு



**நடைமுறையில் இருந்த சட்டத்தின் பிரகாரம், மணல் ஏற்றிச் செல்வதற்காக அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் கட்டாயமாக் கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.**

கொழும்பு,ஜூன்16

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் செல்கின்றவர் களைக் கைது செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

எனினும், அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் செல்வதற்காக விதிக்கப்பட்டிருந்த சட்டங்களில் சில வாரங்களுக்கு முன்னரே அரசு தளர்வை ஏற்படுத்தியிருந்தது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். இது தொடர்பில் மீண்டும் சட்ட ரீதியான சிக்கல் தோன்றியுள்ளதால் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வது அவசியமாகும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். ஏற்கனவே நடைமுறையில் இருந்த சட்டத்தின் பிரகாரம், மணல் ஏற்றிச் செல்வதற்காக அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய பக்கமுன பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மணலை ஏற்றிச்சென்ற 19 லொறிகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இதன் போது கைதானவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதேவேளை, முன் அறிவித்தல் எதுவுமின்றி கைது செய்யப்படுவது நியாயமற்றதாகும் என்று மணல் ஏற்றிச் செல்வோர் முறைப்படுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

# முஸ்லிம் கடைகள் மீது நாய் இரத்தம் தெளிப்பு

## காலியில் காட்டுமிராண்டித்தனம்

கொழும்பு,ஜூன்16

காலி பெந்தர எல்பிட்டிய பகுதிகளில் மூடப்பட்டிருந்த முஸ்லிம் கடைகளுக்கு முன்பாக நாய்கள் படுகொலை செய்யப்பட்டு அப்பகுதிகளில் வீசப்பட்டிருப்பதுடன், நாய் இரத்தமும் அங்குள்ள கடைகள் மீது தெளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

முஸ்லிம்களின் கடைகளில் சிங்களவர்கள் பொருள்கள் வாங்குவதை நிறுத்துமாறும், முஸ்லிம்களை கடைகளை மூடிவிட்டுச் செல்லுமாறும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்த நிலையிலேயே இந்த அசிங்கம் நிறைந்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சம்பவங்களுக்கு சிங்களப் பேரினவாதிகள் காரணமாக இருக்கலாமென நம்பப்படுகிறது. தம்மை சிங்கள தேசப்பற்றாளர்கள் எனக்கூறிக்கொள்ளும் சிலரே இவ்வாறான பாதகச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

முஸ்லிம்களின் கடைகளில் சிங்களவர்கள் பொருள்கள் வாங்குவதை நிறுத்துமாறும், முஸ்லிம்கள் கடைகளை மூடிவிட்டுச் செல்லுமாறும் சுவரொட்டிகள் ஒட்டப்படுவதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கையெடுக்க வேண்டுமென மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கோரிக்கை விடுத்துள்ளதுடன், இது ஏனைய பகுதிகளுக்கும் பரவும் அபாயமுள்ளதாகவும் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அங்கு முஸ்லிம்களின் 15 கடைகள் உள்ள நிலையில் இந்தத் துண்டுப் பிரசுரத்தினால் முஸ்லிம் வர்த்தகர்கள் அச்சமடைந்துள்ளனர். தம்புள்ள பள்ளிவாசலை மூடுவதற்கு எடுக்கப்பட்ட செயற்பாடுகள் விரிவடைந்து குருநாகல், அநுராதபுரம், தெஹிவளையெனப் பரந்து தற்போது காலி வரை வந்துள்ளது.

தம்புள்ள பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தியவர்கள் கைது செய்யப்படாமல் சுதந்திரமாக நடமாடும் நிலையில், பள்ளிவாசல்கள் குறித்த விவரம் புலனாய்வுப் பிரிவினரால் திரட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையிலே காலியில் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன. இது ஏனைய இடங்களுக்குப் பரவும் என்பதால் இதனைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இதற்கான அழுத்தத்தை அரசிலுள்ள முஸ்லிம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொடுக்க வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் பார்க்கும்போது 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற கறுப்பு ஜூலைக்கு முந்திய காலப்பகுதியைப் போன்றுள்ளது - என்றார். (ச-சி)

# மாலைதீவு வாசியின் சாவு; பெண்கள் இருவர் கைது

கொழும்பு,ஜூன்16

கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டலின் 18 ஆவது மாடியில் இருந்து விழுந்து உயிரிழந்த மாலை வாசியின் சாவு தொடர்பில் இலங்கையைச் சேர்ந்த பெண்கள் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் வாரியபொல மற்றும் பதுளை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என இனங்காணப்பட்டுள்ளனர்.

மாலைதீவு நபர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் 18ஆவது மாடியில் இருந்து விழுந்து உயிரிழந்திருந்தார். (ச)

# கண்காணிப்பு கமராக்கள் அதிகரிப்பு

கொழும்பு,ஜூன்16

கொழும்பில் கண்காணிப்புக் கமராக்களை பொருத்த வேண்டிய இடங்கள் தொடர்பில் தேவையான தகவல்கள் பெறப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்புக்குள் பிரவேசிக்கும் சந்திகளில் இதுவரையில் நூறுக்கும் மேற்பட்ட கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு கண் காணிப்புக் கமராக்களைப் பொருத்துவதனால் குற்றச்செயல்களில் ஈடுபடுவோரைக் கைதுசெய்ய முடியும் என்று பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

கண்காணிப்பு கமராக்களை தொடர்ந்தும் பொருத்த வேண்டிய இடங்கள் தொடர்பில் செயற்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# எரிபொருள் விலை வீழ்ச்சி நீடித்தால் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்16

எரிபொருள்களின் விலையைக் குறைக்குமாறு எதிர்க் கட்சிகள் அரசை தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் இவ்வேளையில், உலக சந்தையில் ஏற்பட்டுள்ள எரிபொருள்களின் விலை வீழ்ச்சியானது தொடர்ந்தும் அதேநிலையில் இருந்தால் அதன் பயனை நாட்டு மக்களுக்கு அரசு வழங்கும் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் ஊடகவியலாளரொருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலக சந்தையில் தற்போது ஏற்பட்டுள்ள விலைக் குறைப்பு நீண்ட கால நோக்குடையதாக அமைந்தால் இலங்கையிலும் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் நன்மை மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்படும். பெற்றோலிய வளத்துறை அமைச்சு இந்த விடயத்தை மிகவும் தெளிவாகக் கூறியுள்ளது.

அதேவேளை, தெற்காசிய சுதந்திர வர்த்தக வலய உடன்படிக்கையில் திருத்தத்தை மேற்கொண்டு இந்தியாவின் இறக்குமதிக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது என வெளியாகியுள்ள செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை. சார்க் நாடுகளுடன் மேற்கொள்ளப்படும் உடன்படிக்கையால் உள்ளூர் உற்பத்திகளுக்கு பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் அந்த உடன் படிக்கையை அரசு மீள்பரிசீலனைக்கு உட்படுத்தும் -என்றார். (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது நித்தியா — இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அதிக நேரம் காத்திருக்க நேரிடும் என நினைத்த விடயம் ஒன்று, சுலபமாக முடிவுக்கு வரலாம். உங்களின் எண்ணங்களை, கருத்துக்களை நெருக்கமான நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வீர்கள். கலகலப்பான அனுபவம் உண்டு.

**இடபம்:** மாமன், மைத்துனர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். வெளியூர்களில் வசிக்கும் சிலர், உங்களிடம் உதவி கேட்கலாம். பிள்ளைகளுக்கு நல்ல விடயங்களைச் சொல்லி உற்சாகப்படுத்துவீர்கள். உங்களின் திறமையான செயற்பாடுகளைப் பார்த்து, மற்றவர்கள் வியப்படைவர்.

**மிதுனம்:** பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். தொழில் ரீதியாக சிறு குழப்பங்களைச் சந்திக்கலாம். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து, பெரியளவில் பயம் கொள்வீர்கள். வயிறு தொடர்பான உபாதைகளைத் தவிர்க்க, உணவு விடயங்களில் கவனம் அவசியம். உறவினர்கள் மூலம் முக்கிய தகவல் ஒன்றைக்கேட்கலாம்.

**கடகம்:** சோதனைகளை எதிர்கொள்ளும் நாள். நண்பர்கள் சிலர், உங்கள் மூலம் சில வேலைகளை முடிக்க முற்படுவர். உத்தியோகத்தர்கள், கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். மாற்று மதத்தினர் வழியில், மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். உறவினர் ஒருவரின் வேலைக்காக நீங்கள் அலையலாம்.

**சிங்கம்:** எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். உத்தியோகத்தர்கள், நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். புதிய பொருள்கள் வாங்குவதில், சிலர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். செலவுகள் இருந்தாலும், அதற்கேற்ற பணவரவு உண்டு.

**கன்னி:** வழக்கு விவகாரங்களில், அனுகூலமான திருப்பங்களைக் காணலாம். எந்த விடயத்திலும் அவசரப்பட்டு இறங்குவதைத் தவிர்க்க வேண்டும். சிறிய விடயம் ஒன்றுக்காக, ஒருவருடன் பெரிய அளவில் வாக்குவாதம் செய்யலாம். நீண்டதூர பயணங்கள் செல்ல நேரிடலாம்.

**நாளை**

ஆனி 03 ஞாயிற்றுக்கிழமை 17.06.2012
திதி: திரயோதசி மா. 05.31 வரை
நட்சத்திரம்: கார்த்திகை மு.இ. 08.25 வரை
சுபநேரம்:08.53- 10.23 வரை
ராகு காலம்: 04.23- 05.53 வரை

**துலாம்:** மதிப்பு, மரியாதை மேம்படும். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். நாளை நடக்கும் என நினைத்த காரியம் ஒன்று, இன்றே நடக்கும். குறைந்த செலவில் வாங்க நினைத்த பொருள் ஒன்றை, அதிக செலவில் வாங்குவீர்கள். பொறுப்பான வேலைகளால் கோபம், பதற்றம் உண்டாகலாம்.

**விருச்சிகம்:** உங்களுக்குப் பிடித்த ஒன்று, மற்றவர்களுக்குப் பிடிக்காமல் போகலாம். பெற்றோர் வழியில் செலவுகள், சிரமங்களைச் சந்திக்கலாம். ஆரம்பித்த சில வேலைகளை இடைநடுவில் விட்டுவிட்டு, வேறு வேலைகளில் ஈடுபடலாம். அயலார் வீடுகளில் நடக்கும் முக்கிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம்.

**தனுசு:** பால்ய நண்பர்கள் சிலரைச் சந்திக்கலாம். விருப்பமான உணவுவகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். சகோதரர்கள் வழியில், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம்.

**மகரம்:** தொட்ட காரியங்கள் தடையின்றி துரிதமாக நடக்கும். சில விடயங்களில், பரிவு கருணையுடன் நடந்து கொள்வீர்கள். பழைய சம்பவங்களை அசைபோட்டுப் பார்ப்பீர்கள். உங்களுக்குப் பிடிக்காத சில காரியங்களைக் குடும்ப உறுப்பினர்கள் செய்யலாம்.

**கும்பம்:** சிலரிடம் கடனுதவி பெறலாம். மருத்துவ சிகிச்சைக்குச் செல்லும் ஒருவருக்கு துணையாகச் செல்லலாம். உறவினர்களுக்குத் தெரியாத விடயம் ஒன்றை நீங்கள் சொல்லலாம். உங்களின் நலனில் அக்கறை கொண்ட ஒருவரை அறிந்து கொள்வீர்கள். நீங்கள் விரும்பாத ஒருவரை முக்கியமான இடத்தில் சந்திக்கலாம்.

**மீனம்:** மருத்துவச் செலவுகள் நேரலாம். சக ஊழியர்களின் விமர்சனங்களுக்கு ஆள்படலாம். ஓய்வாக இருக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு ஏதாவது வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். மாற்று இனத்தவர்கள் தொடர்பான விடயங்களில், எச்சரிக்கை அவசியம். திட்டமிட்ட வேலை ஒன்று முடியாமல், நீண்ட நேரம் இழுத்தடிக்கலாம்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | 2 | 5 | | 8 | 4 | |
| 5 | | | | 7 | | | | 2 |
| 3 | 8 | 2 | | | 6 | 5 | 1 | |
| 4 | | | | | | | 8 | |
| | | 8 | | 6 | | 4 | | |
| | 1 | | | | | | | 5 |
| | 2 | 3 | 9 | | | 1 | 7 | 8 |
| 9 | | | | 8 | | | | 6 |
| | 7 | 5 | | 2 | 1 | 9 | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 2 | 9 | 4 | 7 | 1 | 5 | 3 |
| 1 | 9 | 3 | 8 | 2 | 5 | 7 | 6 | 4 |
| 5 | 4 | 7 | 3 | 1 | 6 | 2 | 9 | 8 |
| 7 | 1 | 4 | 6 | 5 | 3 | 9 | 8 | 2 |
| 3 | 8 | 9 | 2 | 7 | 4 | 5 | 1 | 6 |
| 6 | 2 | 5 | 1 | 9 | 8 | 3 | 4 | 7 |
| 2 | 3 | 6 | 5 | 8 | 1 | 4 | 7 | 9 |
| 4 | 5 | 8 | 7 | 3 | 9 | 6 | 2 | 1 |
| 9 | 7 | 1 | 4 | 6 | 2 | 8 | 3 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.





இந்தவார இதழில்...



....அண்மையில் மட்டக்களப்பில் உள்ள ஒரு பெண்கள் பாடசாலையின் அதிபர் அப்பாடசாலையின் மாணவிகள் ஒரு சரஸ்வதி சிலை வைக்க ஆதரவு வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டார். இந்த இடமாற்றம் தொடர்பாகக் கல்வி அமைச்சின் செயலாளருக்கோ, பாடசாலை நிர்வாகத்திற்கோ எதுவுமே தெரியாது. எங்கே அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறது என்பதைப் புரிய முடிகிறதல்லவா?
பெண்கள் தாங்கள் படிக்கும் பாடசாலையில் சரஸ்வதி சிலையை நிறுவ உரிமையில்லை. ஆனால் வீதி வீதியாகப் புத்தர் சிலைகளை நிறுவ முடியும். ஜனநாயகத்தின் பேரில் கொடி கட்டிப்பறக்கும் இரா ணுவ சர்வாதிகாரத்திற்கு வேறு உதாரணம் தேவை தானா?......

- வெளிவரும் புதிய ஆதாரங்கள்
- சமாதானத்தின் தூதுவர்களைக் கொல்லாதீர்

மயிலுக்கு தோகையில் எப்படி கண்போன்ற அமைப்பு வந்தது



இன்னும் பல...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலம் விழுங்கும் 'பேய்கள்'

புலோலி ஜெயம்

"ஆடி அடங்கும் வாழ்க்கையடா.. ஆறடி நிலமே சொந்தமடா.." என்று பாடினான் கவிஞன். ஆனால், ஈழத்தில் தமிழர்கள் இறந்தால் அவர்களை அடக்கம் செய்வதற்கு ஆறடி நிலம்கூட இனிமேல் இருக்குமா என்பது சந்தேகமே. அந்தளவுக்குத் தமிழர் தாயகத்தில் சுடுகாட்டைக்கூட விட்டு வைக்காது காணிகளை விழுங்கும் பேய்களாக உருவெடுத்துள்ளது மஹிந்த அரசு.

இன்று யுத்தம் முடிவடைந்து மூன்றாண்டுகள் கழிந்த நிலையிலும் மஹிந்த அரசின் பேரினவாத வெறி இன்னமும் அடங்கவில்லை. மாறாக அது விஸ்வரூபம் எடுத்து வருகிறது என்பதையே இந்தக் காணி அபகரிப்பு நடவடிக்கை எடுத்துக்காட்டுகிறது.

**சுடலையையும் சுருட்டும் இராணுவம்**

தமிழர் தாயகத்தின் இதயமான வட பகுதியில் காணிகளை விழுங்கும் பேய்களாக இராணுவத்தை ஏவி விட்டுள்ள மஹிந்த அரசு, அதன் மூலம் தமிழர்களின் தாயகத்தை அடிமைகள் வாழும் பூமியாக மாற்றியமைக்கும் நோக்கில் இனவெறி பிடித்து அலைகிறது.

"நாங்கள் போரில் வென்றுவிட்டோம். தமிழீழம் என்றொரு நாட்டைக் கைப்பற்றி விட்டோம். எனவே, தமிழர்கள் சிங்களவர்களுக்கு அடிமையாகவே வாழவேண்டும். சிங்களவர்கள் சொல்வதையே கேட்க வேண்டும்" என்ற ஆணவப் போக்கில் அரசு இன்று எக்காளமிடுகிறது.

தமிழர்களை அடிமைகளாக நடத்தவே அது விரும்புகிறது. பதவிக்காகவும் சுகபோகம் அனுபவிப்பதற்காகவும் தனது இனத்தைக் காட்டிக்கொடுத்து - அரசுடன் ஒட்டுண்ணிகள் போல் ஒட்டிக்கொண்டு - நாய்களைவிடக் கேவலமாக நக்கிப் பிழைக்கும் சில தமிழினத் துரோகிகளைப்போல் ஒட்டுமொத்தத் தமிழர்களும் தனது காலடியை நக்கிப் பிழைக்க வேண்டும் என்ற இறுமாப்பில் செயற்படுகிறது மஹிந்த அரசு.

தமிழர்களின் நியாயமான உரிமைகளுக்காக- எம் இனத்துக்குரிய நிலத்தைப் பாதுகாப்பதற்காக போராடிய எம் உறவுகளை சர்வதேச நாடுகளின் துணையோடு - ஐ.நா. போர் விதிமுறைகளையும் மீறி - ஈவிரக்கமின்றிக் கொன்றுகுவித்த மஹிந்த அரசு, இன்று தமிழர்களின் இருப்பிடங்களையும் அபகரித்து அவர்களை நாட்டை விட்டு விரட்டியடிக்கும் மிருகத்தனமான செயலில் ஈடுபட்டுள்ளது.

போரால் அனைத்தையும் இழந்து அநாதைகளாக வாழும் தமிழ் மக்களுக்கு தற்போது இருக்கும் ஒரே சொத்து அவர்களது காணிகளேயாகும். அதைக்கூட இனவெறி பிடித்த இரா ணுவம் பறிப்பதற்கு முயற்சிக்கிறது. இந்தக் கொடு மையை தமிழ் மக்கள் யாரிடம் போய்ச் சொல்வர்.

**வாய் திறக்க முடியாதநிலை**

இந்த அக்கிரமங்களுக்கு எதிராக வாய் திறக்க முடியாத நிலை இன்று தமிழருக்கு ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் தமிழர்களின் அசைக்க முடியாத மலையாக விருந்த பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் இயக்கம் அடியோடு வீழ்ந்ததே ஆகும்.

அன்று பிரபாகரனுக்கு பயந்திருந்தவர்கள் இன்று தமிழர்களைச் சீண்டிப் பார்க்கின்றனர்.

தம் இனத்தின் தாயகத்தை - தமக்குச் சொந்தமான நிலத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடிய விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் எனப் பொய் முத்திரை குத்திய சிங்களப் பேரினவாத அரசு, இன்று தமிழர்களின் காணியை அடாத்தாக ஆக்கிரமிப்பதை - அபகரிப்பதை நாம் என்னவென்று சொல்வது? இது அரச பயங்கரவாதம் இல்லையா?

அதேவேளை, வடக்கில் படைமுகாம்கள் அமைக்கவென சில காணிகளை இனங் கண்டுள்ளோம் எனக் கூறி காணி அபகரிக் கப்படுவது உண்மை என்பதை யாழ். மாவட்டக் கட்டளைத்தளபதி ஹத்துருசிங்கவே ஒப்புக்கொண்டுள்ளார்.

**ஆளுநர் சந்திரசிறியின் அசுரவேகம்**

எமது ஈழ உறவுகளின் நிலங்களை கொள்ளையடிக்கும் நடவடிக்கையில் வட மாகாண ஆளுநர் சந்திரசிறி இன்று வெளிப் படையாகவே களமிறங்கியுள்ளார்.

வடக்கில் அனைத்துப் பிரதேச சபைகளுக்கும் தாம் இனங்கண்டுள்ள காணிகள் குறித்த விவரங்களை அனுப்பி வைக்குமாறு விசேட அறிவுறுத்தல் விடுத்து ஆளுநர் கடிதங்களை அனுப்பியுள்ளார். பிரதேச சபைத் தலைவர்களை அழைத்தும் கூட்டம் நடத்தி மிரட்டியுள்ளார் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

காணிகளை அபகரிக்கும் முயற்சிக்குப் பின்னால் சிங்களக்குடியேற்றங்களுக்கான திட்டமிடலையே மஹிந்த அரசு மேற்கொண்டு வருகிறது. போருக்குப் பின்னர் கடந்த மூன்று ஆண்டு களாக இராணுவ மயமாக்கலை மேற்கொண்டு வந்த இலங்கை அரசு, அதனைத் தொடர்ந்து சிங்கள - பௌத்த மயமாக்கலையும் முடுக்கிவி டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது.

**எங்கும், எதிலும் பௌத்தம்**

வன்னியில் மஹிந்த ராஜபக்ஷ மாவத்தை, நாமல் ராஜபக்ஷ மாவத்தை என வீதிகளுக்கு பெயர் சூட்டப்படுகிறது. இரவோடு இரவாக புத்தர்சிலைகள் முளைக்கின்றன. தூங்கி எழுவதற்குள் பௌத்தமயம் தென்படுகிறது.

முல்லைத்தீவில் திருமுறிகண்டி என்ற இடத்தில் 4 ஆயிரம் ஏக்கர் பகுதியில் இராணுவக் குடியிருப்புகள் (போர்த் திட்ட வீடுகள்) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி இரணைமடுப் பகுதியில் விமானத்தளம் அமைப்பதற்கும் மன்னார் மாவட்ட முள்ளிக்குளம் என்ற பகுதியில் அங்குள்ள மக்கள் விரட்டியடிக்கப்பட்டு, அந்தப் பகுதியில் பெரிய அளவில் கடற் படைத்தளம் அமைக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணம் - வலிகாமம் பகுதியில் 23 கிராம சேவையாளர் பிரிவுகள் விடுவிக்கப்படா மல், இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றன. இதேபோல் ஆயிரக்கணக்கான வீடுகள், நிலங்கள் இராணுவத்தினரால் கபளீகரம் செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு என சகல பகுதிகளிலும் நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

**யாழில் 61 ஏக்கர் நிலம்**
**தென்மராட்சியில் 300 ஏக்கர்**

இந்த நிலையில் யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 61 ஏக்கர் காணியை இராணுவத் தேவைக்காக அபகரிக்கும் நடவடிக்கை வெளிப்படையாகவே முடுக்கி விடப்பட்டுள்ளது. அதேபோல், தென்மராட்சிப் பிரதேசத்திலும் ஏறத்தாள 300 ஏக்கர் நிலத்தையும் முள்ளிவாய்க்காலில் 60 ஏக்கர் நிலத்தையும் அபகரிப்பதற்கு இராணுவம் முயன்று வருகின்றது.

திருக்கேதீச்சரத்தில் இன்று பெரிய புத்தர் சிலை ஒன்றை சிங்கள இராணுவத்தினர் நிறுவி யுள்ளனர். அதேபோல், கிளிநொச்சியில் பிள்ளை யார் இருந்த இடத்தில் புதிதாக புத்தர் சிலை முளைத்துள்ளது. பிள்ளையாரின் தலை உருண்டது.

**கடவுள் மீதும் கை வைத்தது அரசு**

ஆள்களைத்தான் காணாமல் போகச் செய்துவந்த மஹிந்த அரசு இன்று பிள்ளையார் அப்பனையும் காணாமல் போகச் செய்கிறது.

அதுமட்டுமா, இந்துக் கோயில்களில் உள்ள விக்கிரகங்கள், வாகனங்கள் ஆகியவை திருடப்படும் சம்பவங்களின் பின்னணியிலும் சிங்கள பேரினவாதமே உள்ளது என்று கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் திருடப்படும் ஐம்பொன் சிலைகள், வாகனங்களின் தலைகள் என்பவை கூட தென்னிலங்கைக்கே கடத்தப்படுகின்றன. இந்த உண்மை அண்மையில் யாழ்ப்பாணத்தில் கைதான கொள்ளைக்கும்பலின் தகவல்களிலிருந்து தெரியவந்துள்ளது.

சிங்கள அரசின் ஒரே நோக்கம் தமிழர்களின் தனித்துவத்தை சிதைத்து - அவர்களின் வழித் தடத்தை அழித்து - முழு இலங்கையையுமே சிங்களமயப் படுத்துவதே ஆகும்.



இதற்காக உலகில் எந்த நாட்டிலும் நடக்காத அக்கிரமங் களையும் - அநியாயங்களையும் இன்று ஈழத் தமிழர்கள் மீது நடத்திக் கொண் டிருக்கிறது மஹிந்த அரசு.

இலங்கையில் தமிழர்களின் தாயகம் என்பது இருக்கக் கூடாது என்ற நோக்கத்தில் திட்டமிட்ட இராணுவ மயமாக்கலை மேற்கொண்டு பின்னர் சிங்களக் குடிப்பரம்பலை ஏற்படுத்த அது முன்முயற்சிகளை எடுத்துவருகிறது.

யாழ்ப்பாணத்தில் இன்று போதைப் பொருள் விற்பனை, விபசாரவிடுதிகள், மசாஜ் சென்டர்கள் என புதிது புதிதாக முளைக்கின்றன.

இந்தக் கலாசாரச் சீரழிவுகளை திட்டமிட்டு அரங்கேற்றும் சிங்கள அரசு, இன்று தமிழர்களின் காணிகளையும் அபகரித்து தனது சிங்கள பௌத்தத்தின் ஆதிக்கத்தை தமிழர் தாயகத்தில் நிலை நிறுத்த முயற்சிக்கிறது.

அதாவது இனிவரும் காலங்களில் பௌத்தம் இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் இருந்ததது என்றதொரு நிலையை உருவாக்கவே அது இந்தத் திட்டமிட்ட சிங்கள மய மாக்கலை மிக உக்கிரமாக முன்னெடுக்கிறது.

வடக்கு தமிழருக்கு மட்டும் சொந்தமானதல்ல என்று ஜனாதிபதி மஹிந்தவின் சகோதரரும் பாதுகாப்புச் செயலருமான கோத்தபாய உட்பட்ட தென்னிலங்கை இனவாதிகள் தெரிவித்துள்ள கருத்துகளும் இதையே எடுத்துக்காட்டுகின்றன.

**சர்வதேசத்தின் நடவடிக்கை போதாது**

ஆனால், மஹிந்த அரசின் இந்த தமிழின அழிப்பை - இராணுவ ஆக்கிரமிப்பை - தமிழர்களின் காணி அபகரிப்பை தடுத்து நிறுத்துவதற்கு சர்வதேசம் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் செய்யவில்லை என்பதே கவலைக்குரிய விடயம்.

ஏதோ தம் பங்குக்கு அவ்வப்போது சில கருத்துகளை வலியுறுத்திவிட்டு - அறிக்கையை வெளியிட்டு விட்டு தங்கள் பணி முடிந்து விட்டது என்றவாறு அவை செயற்படுகின்றன.

அதாவது ஈழத் தமிழர் பிரச்சினையில் சர்வதேசத்தின் நடவடிக்கைகள் போதுமானதாக அமையவில்லை என்பதே நிதர்சனம். அப்படி சர்வதேசம் ஏதாவது நடவடிக்கையை எடுத்தால் கூட ஈழத் தமிழர்களின் விரோதியான இந்தியா அதைத் தடுத்து - இலங்கை அரசைக் காப்பாற்றும் முயற்சியிலேயே ஈடுபட்டு வருகிறது.

**தூங்குகிறது தமிழ்க் கூட்டமைப்பு**

அதேபோல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் காணி அபகரிப்புக்கு எதிராக உடனடி நடவடிக்கைகள் எதையும் எடுக்காது தூங்கிக் கொண்டிருக்கின்றனர்.

*அதிவேகமாக இடம்பெறும் சிங்கள மயமாக்கலை உடன் தடுத்து நிறுத்தாவிடின் அடுத்த ஒரு தசாப்தத்துக்குள்ளேயே தமிழர்களின் தாயகபூமி என்கிற இடம் காணாமல் போய்விடும்.*

எனவே, சிங்களத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராக ஐ.நா.விடம் முறையிடுவோம் என்று கூட்டமைப்பு சொல்லிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. விரைந்து அதைச் செய்ய வேண்டும். அசுர வேகத்தில் அரங்கேறும் காணி அபகரிப்பை உடன் தடுத்து நிறுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் அவசரமாக முன்னெடுக்க வேண்டும்.

இவர்கள் நினைத்தால் வடக்குக் கிழக்கில் காணி அபகரிப்புக்கு எதிராக நாடாளுமன்றில் ஒரு பிரேரணையைக் கொண்டுவந்திருக்கலாம். அதைக் கூட இவர்கள் செய்வதற்குத் தயங்குவது ஏன்?

இதனால்தான் சிங்கள அரசு இன்று தமிழரைக் கேட்க, பார்க்க ஆட்கள் இல்லை என்ற நினைப்பில் தொடர்ந்தும் அடக்கியாள முயன்று வருகிறது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பமாவதற்கு இந்த காணிப்பகிர்வுச் சட்டம், தனிச் சிங்களமொழிச் சட்டம் போன்றவையே மூல காரணமாக அமைந்தன.

இதனால், தமிழர்கள் தங்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக காந்திய வழியைப் பின்பற்றி - வன்முறையற்ற போராட் டத்தில் குதித்தனர். ஆனால், சிங்களப் பேரின வாத அரசுகள் அதற்கு மதிப்பளிக்காது தமிழர்களை அடக்கி ஒடுக்குவதற்கு முயற்சித்தன. தமிழர்களுக்கான தீர்வை வழங்க அவை மறுத்தன.

இதனால், தமது உரிமைகளை வென்றெடுக்க தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

**மீண்டும் கிளர்ந்தெழுவர் தமிழர்**

எனவே, தற்போது போர் முடிவுக்கு வந்த நிலையில் தமிழர்கள் தமது உரிமைகளை ஜனநாயக வழியில் பெற்றுக் கொள்ள முடியாதபோது வன்முறைகளில் ஈடுபட்டே அந்த உரிமைகளைப் பெற வேண்டும் என்ற ஒரு நிலைக்கு மீண்டும் தள்ளப்படுவார்கள் - தள்ளப்படு கிறார்கள்.


"தமிழர்கள் இப்போது இல்லையென்ற அளவு பொறுமை காத்து வருகின்றனர். ஆனால், இந்தப் பேரினவாத அரசு அவர்களைச் சீண்டிவிட்டுப் போராட்டத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கின்றது" - என்று தெஹிவளை மாநகரசபை உறுப்பினர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.

மஹிந்த அரசின் இந்தக் காணி அபகரிப்பு, தமிழர்களின் வரலாற்றுச் சின்னங்கள் அழிப்பு, புத்தர் சிலை அமைப்பு போன்ற தமிழினத்துக்கு எதிரான அக்கிரமங்கள் தொடர்ந்து அரங்கேறி னால் மீண்டும் தமிழர்கள் அடக்குமுறைக்கு எதிராக நிச்சயம் கிளந்தெழுவார்கள். இது உறுதி.

எனவே, மீண்டும் ஒரு பிரபாகரனை உருவாக்குவதும், உருவாக்காமல் விடுவதும் சிங்கள அரசின் கைகளிலேயே தங்கியுள்ளது யதார்த்தமான உண்மை.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்பாளின்
# தர்த்திருவிழா சிறப்பு மலர் - 2012

டன் ஈழநாடு வந்தாகக் கூறப்படுகின்றது. வட கண்ணகை அம்மன் ஆலயத்திலும் பத்தாவது பளையுடன் இணைந்த புராதன ஆலயமாக வும் கி.பி 2ஆம் நுற்றாண்டில் ஜம்புகத்துறையில் படைந்தது. இதனை உறுதிசெய்யும் வகையில் கமுடிகிறது.

ரம்பரையினர் பக்தியுடன் பூசித்த கோயிலாக பயம் எனப்படும் புராதன ஆலயம் அமைந்த ந்தர் என்பவரின் தாயினுடைய (கண்ணகை) ம்பாள் பணித்துள்ளார். பெருநாவல் மரத்தின்

ளனர் மீண்டும் பழைய இடத்திலேயே வைத்து புராதன விக்கிரகத்தை நிலையாக தற்போது வர் திரும்பச் செங்கற்களினால் புனரமைப்புச் ஷேகம் 1938 ஆம் ஆண்டு ஆனி மாதம் 13 ஆம் க்கட்டட வேலைகளைச் செய்தார்.

ார். இவரது முயற்சியினால் நிருத்த மண்டபம், ம் என்பன அடியார்களின் நிதி உதவியுடன் சய்துவந்தார்.

பை ஒன்றை அமைந்து எழில் மிகு கட்டட ப்வங்களாக பிள்ளையார், பாலையடி அம்மன்

### அம்பிகையைச் சரண் அடைந்தால் யாவும் நிறைவேறும்

ஈழவள நாட்டின் தென்மராட்சிப் பகுதியில் வரணியில் குடிகொண்டிருக்கும் தென்மைமிக்க வரலாற்றுப் புகழ்மிக்க சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் அடியார்களின் துயர் தீர்த்த வரலாறு நிறையவே உண்டு. அம்பிகை என்ற அடிப்படையில் ஆறாத்துயர் கொண்டு பல இடம் சென்றும் மாறாப் பிணிகள் நீங்க அம்பிகையே நீயே சரணம் என்று சரண் அடைந்தவர் பற்பலர்.

சோலையின் நடுவே எழிலுரு காட்சி கொண்டு நாற்புறமும் வழிபடு அடியார்களைக்கொண்ட கிராமங்களை உடைத்தாய சிறப்பம்சங்களைக்கொண்டு நல்லாட்சி செய்கின்ற அம்மையவளின் மகோற்சவ காலத்தில் எமது சிரம் தாழ்ந்த நல்லாசி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். அடியார்களில் எல்லாம் நிறைந்து அள்ளி அள்ளிக்கொடுக்கின்ற அம்மையின் கருணைதான் என்னே! அம்மையைப் போற்றித் துதித்து அல்லல் அகன்றிட என்றென்றும் வழிபாடு செய்வோம் வாரீர்.

யாவும் அன்பு மயம்
பரிபாலன சபையினர்
சிட்டிவேரம் கண்ணகை அம்மன்
ஆலயம்



### நீதிக் குரலான சிலம்பொலி முழங்க
### சிட்டிவேரத்தில் தேரேறி வருகிறாள்

அறத்தைக் காத்து அதர்மத்தை அழிக்கும் தெய்வமாம் எங்கள் கண்ணகைத் தாய்க்கு இன்று அற்புதமான தேர்த்திருவிழா நடைபெறுகின்றது.

எல்லா உலகங்களையும் படைத்துக் காத்து வரும் பராசக்தியானவள் தன் அடியவர்கள் தன்னை வழிபட்டு மேன்மை அடைவதற்காகப் பல்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு உருவங்களுடன் கோயில் கொண்டு விளங்குகின்றாள். அந்த வகையில் ஈழமணித்திருநாட்டில் சிறப்புப் பெற்ற ஆலயங்கள் வரிசையில் சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயம் பல வரலாற்றுச் சிறப்புக்களோடு விளங்கி, வேண்டும் வரமனைத்தையும் அன்னை வழங்கிக்கொண்டிருக்கின்றாள்.

நீதிக்குரலான சிலம்பொலி மட்டும் தர்மத்தின் குரலாக எங்குமே ஒலித்துக் கொண்டிருக்கின்றபடியால் காலச்சூழ்நிலையில் பல மாற்றங்கள் ஏற்பட அவள் வழிகாட்டி வருகின்றாள். அவளைப் பணிவோம் அவளருள் பெறுவோம்.

வர்ணனைக் கலாநிதி
மதுரகவி.காரை
எம்.பி.அருளானந்தன் J.P.
பணிப்பாளர், சைவத்தமிழ்
பண்பாட்டுக் கழகம்.

அம்பாள் கபே
சிட்டிவேரம் அம்பாள்
பருத்தித்துறை வீதி,
வரணி
T.P : 077 5591705

நவியினால் தங்க
ுவித சேதாரமும்
ரிசோதித்துத்
படி சான்றிதழ்
ருக்கின்றார்கள்.
ாட்டு நாணய மாற்றும் சேவை
க்கு வெளிநாட்டு கரன்ஸிகள்
க் ஆகியவற்றை மாற்றும் சேவை.
ணயமாற்று சேவை
ney Exchange (Pvt) LTD
No: Ecd/ In/Aut/ Mc/164)
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 6972

சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No: 222 6972, Fax. No: 222 8869
இணை நிறுவனங்கள்
சிவா நகைமாடம்
இல.14, கண்டி வீதி, நவீன சந்தை, சாவகச்சேரி.
தொ.பே: 021 4922398
சாரங்கா ஜுவல்லறி
இல.55, செட்டித்தெரு, கொழும்பு - 11,
TEL: 2434971. FAX: 0112434071

விசுவமடுவில்
அபி கனி புத்தக நிலையம்
சிட்டிவேரம் கண்ணகை அம்மன் அருட் கடாச்சம் எல்லோர்க்கும் கிடைக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்
கல்வி உலகின் தேவை உணர்ந்து சேவைகளாற்ற முன் வந்துள்ளோம் தரம் - 01- A/L வரைக்குமான சகல பாடப்பயிற்சிப் புத்தகங்களும், பாடசாலை உபகரணங்கள், விண்ணப்பப்படிவங்கள் அனைத்திற்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
அபி கனி புத்தக நிலையம்
கண்டிக்குளம் சந்தி,
077 5144093 முல்லை வீதி, விசுவமடு

காயத்திரி ரெக்ஸ்
இல. 277, பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.
சாறிவகைகள், பஞ்சாபி,
சோளிகிற், ஸ்கேட் &
பிளவுஸ், சிறுவர்களுக்கு ஏற்ற
ரெடிமேட் ஆடைகளின்
மகத்தான தெரிவுக்கு

விதுர்சன் ஹாட்வெயார்
கொடிகாமம் வீதி, வரணி
077 5298249
கட்டடப் பொருள்களுக்கும்,
பெயின்ட் வகைகளுக்கும்
நாடவேண்டிய இடம்.

மாரின் அங்காடி
லை வீதி, நெல்லியடி.
பொருள்கள், விவசாயப்
ள்கள், மாபிள் வகைகள்.
P..021 2263027

“மாதுஜா” வெல்டிங்
வேக் சொப்
பருத்தித்துறை வீதி, எருவன்,
கொடிகாமம்.
T.P..0770344258

நகைத் தேரிவுக்கு நாட வேண்டிய
இடம்:
சுஜீவன் ஜுவல்லறி
A-9, வீதி, கொடிகாமம்.
T.P.0771742428

நீபன் பல்பொருள் வாணிபம்
NEEBAN MULTI SHOP
அன்பளிப்பு, அழகுசாதன,
வார்ப்பு, பிளாஸ்ரிக்பொருள்கள்,
பாட்டா வகைகள் பெற்றுக்
கொள்ளலாம்.
280, பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

யசோ ரெக்ஸ்
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
YASO TEX
Main Street, Nelliyadi, Karaveddy. Tel: 021 2264997

து விதமான பொருள்களையும்
இடத்தில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்
சுப்பர் மாக்கற்
துறை வீதி, கொடிகாமம்.
T.P..0774018366


அபி நெற் டொற் கொம்
சீடி, DVD வகை, கொம்பியூட்டர் உதிரிப்பாகங்களையும் மொபைல்களின் உதிரிப் பாகங்களையும், நெற் ஸ்கைப், போட்டோக்கொப்பிப் பிரதிகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
சந்தையின் பின்பக்கம்,
கொடிகாமம்.
T.P..0774582129

கணேசன் மோட்டோர்ஸ்
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர் Baja
இல.03.பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.
T.P. 0777049564

Mathu Cream House
&
Malti spot
Cream House
Director
Sanguvely North, Manipay
T.P.0774206465
e.mail-mathuice@hotmail.com
Reg.No:vs/br/320

செல்லமுத்தூஸ்
புடவை மாளிகை
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி
021-2263 238

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிட்டிவேரம் கண்ணகை



## ஆலயக் குருவின் ஆசிச்செய்தி

அண்டமும் பிண்டமும் அத்துவித வஸ்துவின் திருக்கரத்தில் தாங்கிய அக்னி பஞ்சகிருத்திய சங்கர்ரத்தை குறித்துக்காட்டும் ஞானம் தேர் எனின் மிகையாகா! சாற்றிடும் அங்கியிலே சங்காரம் என்பது இதையே! முப்புரங்களையும்.

தாரகாக்கன் (விஞ்ஞானகலர் - ஆணவம்)
கமலகாக்கன் (பிரளயாகலர் - கன்மம்)
வித்தியுன்மாலி (சகலர் - மாயை) அழிக்க

பந்தரகலை அச்சாய் (கர்ப்பக்கிரக அகல அளவு) தட்டுக்கள் 14 உலகமாய், ஆசனம் ஆகாசமாய், கொடிஞ்சி உதய அஸ்தமன மலைகளாய், கொடிகள் புண்ணிய நதிகள் , குளங்களாய், விதானம் நட்சத்திரங்களாய், மேல்விரி மோட்சலோகமாய், சட்டங்கள், யாகங்களாய், திரைச்சீலை ஏழு சமுத்திரமாய், கலன்கள், கர்மேந்திரிய ஞானேந்திரியங்களாய், முளைகள் 64 கலைகளாய், மணிகள் வேத, உபாகம, தர்ம நூல்களாய், படிகள் வாயுக்களாய், வில் மகாமேருவாய், வில்நாண் வாசுகியாகவும், வில்லின் மணி சரஸ்வதியாய், அம்பு விஷ்ணுவாய், அம்பு இறகு வாயு தேவனாய், அம்பின் கூர் அக்னி தேவனாய், நால் வேதங்களும் குதிரைகளாய் இழுக்க பிரமதேவர் சாரதியாய் அமர்ந்துவரும் தேரில் ஆரோகணித்த இறையை நாம் மனக்கண்ணில் நிறுத்தி தென்மராட்சியில் வரணிப்பதியில் பெருஞ்சோலையின் மத்தியில் இருந்து அருளாட்சி புரிகின்ற அன்னையின் பெருந்திருவிழாவில் இன்று சனிக்கிழமை 16.06.2012 ரதோற்சவம் நடைபெறுகின்றது.

இந்தத் தேர்த்திருவிழாவை தரிசிக்கின்ற அடியவர்களிற்கு அன்னையின் அருட்பார்வையால் அவர்களின் வினைகள் அழிந்துவிடும். அடியவர்கள் எல்லோரும் சகல ஜீவராசிகளும் நல்வாழ்வு வாழ அன்னையின் திருவருள் வேண்டிப் பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகின்றேன்.

'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.'

சிவஸ்ரீ இ. குமாரசுவாமிக்குருக்கள்.

(C735) (6,14,10)

## சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம் வரணி ஆலய வரலாறு

சிவபூமியாகிய ஈழத்திருநாட்டின் வட பாகமாகிய யாழ்ப்பாணத்தில் பலவளங்களும் பொருந்திய தென்மராட்சியில் வரணியம்பதியில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. மருத முல்லை நிலத்தால் சூழப்பட்ட வந்தாரை வாழவைக்கும் வரணியின் நடுநாயகமாக புகழ்பெற்ற வரலாற்றுத் தொன்மைமிக்க சக்தி ஆலயமாக மிளிர்கின்றது. சிட்டிவேரம் கண்ணகை அம்மன் என்பதே புராதன தோம்புகளினூடாக அறியமுடிகிறது. ஆனால் காலஓட்டத்தில் இது மருவி சுட்டிபுரம் என அழைக்கப்படுகிறது.

தமிழகத்தின் சோழநாட்டிலே பிறந்த கண்ணகி பாண்டி நாட்டிலே நீதிகேட்டு சீற்றம்தணிய கையில் சிலம்பு [...] பகுதியில் ஜம்புகத்துறை வந்து பத்து இடங்களில் உறைந்ததாகவும் அதில் ஐந்தாவது இடமாக சிட்டிவேரம் [...] இடமாக வற்றாப்பளையிலும் அமர்ந்துள்ளார். இதன் அடிப்படையில் சிட்டிவேரம் ஆலயம் வற்றாப்[...] விளங்குகின்றது. இன்னொருவகையிலே ஈழத்தில் கண்ணகி வழிபாட்டை கஜபாகுமன்னன் ஏற்படுத்தினான் என[...] வந்து இறங்கி கோயில் அமைத்தான் என்றும் இவ்வகையில் சுட்டி புரம் கண்ணகை அம்மன் வழிபாடும் சிறப்[...] வரணி ஊடாக மிகப் பழைய காலத்தில் இராஜதெரு ஒன்று சென்றதற்கான தடயங்கள் இன்னும் அவதானிக்[...]

இவ்வாலயம் தொடர்பான கர்கை பரம்பரையான வரலாறும் உண்டு. ஆதி காலத்தில் ஞானியார் பர[...] விளங்கியது. இவர்கள் மூதாதையர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தற்போது சின்னம்மன் ஆல[...] இடத்திலேயே வழிபாடு செய்துவந்தனர். இப் பரம்பரையில் வந்த கரம்பைக் குறிச்சியைச் சேர்ந்த திரு. க[...] கனவிலே அம்பாள் தோன்றி தன்னை வருங்காலங்களில் சோலையின் நடுவேவைத்து வழிபாடு செய்யுமாறு அ[...] கீழ் வைத்து பூசித்தனர்.

பின்னர் மண்ணால் ஒரு ஆலயம் அமைத்து விக்கிரகத்தை வில்லுவண்டியில் ஏற்றிவந்து பூசைமுடிந்த பின்[...] வந்தனர். சில காலம் தொடர்ந்த பின்னர் செங்கல்லால் கட்டடம் அமைத்து அம்பாள் அனுக்கிரகத்தின் படி [...] ஆலயம் உள்ள இடத்தில் வைத்து வழிபாடாற்றத் தொடங்கினர். பின்னர் கி.பி. 1812 இல் விநாயகர் குமரர் என்ப[...] செய்தார் . 1938 இல் கிட்டினர் விநாயகர் என்பவர் இவ்வாலயத்தை கற்களினால் ஆக்கி முதலாவது கும்பாபி[...] நாள் நடைபெற்றது. பின்னர் வரணி இயற்றாலையைச் சேர்ந்த வேதாரணியர் சிதம்பரநாதர் என்பவர் மிகுதி[...]

இதன் பின்னர் 1983 இல் ஆலயத்தை சட்டநாதர் குலநாயகம் (விதானையார்) ஆலயத்தைப் பரிபாலித்துவந்த[...] தம்ப மண்டபம், மடப்பள்ளி களஞ்சியம், தண்ணீர்த்தாங்கி, புதிய வசந்த மண்டபம், வெளிமண்டப[...] பூர்த்தியாக்கப்பட்டது. இவரின் பின்னர் இவரது சகோதரர் ச. அன்னலட்சுமி பொறுப்பேற்று பரிபாலனம் செ[...]

2003 ஆம் ஆண்டில் இவ்வாலயத்தின் உபயகாரர்கள் (14) பதினான்கு பேரும் ஒன்று கூடி பரிபாலனச[...] வேலைகளைச் செய்து 2006 இல் கும்பாபிஷேகம் நிறைவேற்றியது. மூல மூர்த்தியாக அம்பாளும் பரிவார தெ[...] (தலவிருட்சம்) முருகன், வைரவர், முனிஸ்வரன், சண்டேஸ்வரி ஆகியோரும் வீற்றிருந்து நல்லாட்சி புரிந்து நல்லாசியும் அருளும் வாரி வழங்கி மக்களைத் தன்பால் ஈர்த்துக் கொண்டிருக்கிறார் இவ்வாலயத்தில் நித்திய மூன்றுகாலப் பூசைகளும் நைமித்தியங்களாக அலங்கார உற்சவம் வைகாசி மாத விசாக பட்ச திங்களில் ஆரம்பமாகி 12 தினங்களும் அடுத்து தேர், தீர்த்தமும் இடம்பெறும்.


**Arul Video & Photo Studio**
**அருள் வீடியோ போட்டோ ஸ்ரூடியோ**





வைபவங்கள், ஏனைய
தேவைகளுக்கு
ஏற்ற வகையில் படங்கள்
செய்து தரப்படும்.
அத்துடன்
ஐந்து நிமிடங்களில் பாஸ்போட் படம் கொடுக்கப்படும்.



Point Pedro Road, Varani.
பருத்தித்துறை வீதி, வரணி.

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பானங்கள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள
**அம்பிகா**
**கிறீம் ஹவுஸ்**
மலைவேம்படி,
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

அதி நவீன க[...]
நகைகள் எத[...]
இன்றி பா[...]
தர முறைப்[...]
வழங்க காத்தி[...]
யாழ்.நகரில்... வெளி[...]
நியாயமான பெறுமதி[...]
மற்றும் ரவலேர்ஸ் [...]
சாரங்கா நா[...]
Sharanga Mo[...]
(Permit [...]
157/1, கஸ்தூரியார் வீதி, [...]

**வதனி நகை மாடம்**
தங்கப் பவுண் நகை வியாபாரம்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம். 22 கரட் தங்க
நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்
துடன் செய்து கொடுக்கப்படும்.
கண்டி வீதி, கொடிகாமம்.
தொ.பே.0778002724

வில்[...]
பிரத[...]
கட்டட[...]
பொரு[...]
T[...]

மலிவான தரமான புடைவைத்
தெரிவுக்கு நம்பிக்கையான
**Arun Textile**
No.3,A-9 Road,
Kodikamam.
Tel.021 7900402

அனை[...]
ஒ[...]
சிவா[...]
பருத்தித்[...]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸி.எஸ்.காந்தி

# போர்க்குற்றவாளி பட்டியலில் ஜோர்ஜ் புஷ், டொனி பிளேயர்

ஈராக் மீதான படை யெடுப்பு, போர் அனர்த்தங்கள், அழி வுகள், பல்லாயிரக் கணக்கானோரின் உயிரிழப்பு ஆகியவை தொடர்பான போர்க்குற்ற வழக்கில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயர் ஆகியோர் போர்க் குற்றவாளிகளாக இனங் காணப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் புஷ் நிர்வாகத்திலிருந்த மற்றும் ஏழுபேரும் போர்க்குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக் கப்பட்டுள்ளனர். மலேசிய தலைநகரான கோலாலம்பூரில் இயங்கும் போர் குற்றவியல் விசாரணை நீதிமன்றம் இவர்களைப் போர்க்குற்றவாளிகள் என இனங்கண்டு தீர்ப்பளித்துள்ளது.

இவ்வருடம் மே இரண்டாம் வாரத்தில் இந்தத்தீர்ப்பு அளிக்கப்பட்டது. ஏழு உறுப்பினர்களைக் கொண்ட இந்த போர்க் குற்றவியல் விசாரணை நீதிமன்றம், 2007 ஆம் ஆண்டு, அப்போதைய மலேசியப் பிரதமர் மஹாதிர் மொஹமத்தால் நிறுவப்பட்டது.

### சித்திரவதைகள்

ஈராக் போரின்போது இடம் பெற்ற சித்திரவதைகள், படுகொலைகள், துஷ்பிரயோகங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவை சம்பந்தமான நேரடி சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. நேரில் கண்ட சாட்சியங்களின் வாக்கு மூலங்களும் ஐந்து நாள்கள்வரை பதிவு செய்யப்பட்டன.

விசாரணை முடிவில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ், அவரது துணை ஜனாதிபதி டிக் சென்னி, பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பெட் ஆகியோரும் , ஐந்து சிரேஷ்ட அதிகாரிகளும் போர்க் குற்றவாளிகள் என கோலாலம்பூர் போாக் குற்றவியல் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் டொனி பிளேயரும் போர்க் குற்றவாளி என இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணை ஆவணங்கள் அனைத்தும் ஹேக்கில் இயங்கும் சர்வதேச குற்றவியல் விசாரணை நீதிமன்றத்துக்கும், ஐ.நா பாதுகாப்புச் சபைக்கும் அனுப்பி வைக்கப்படும் என இந்த நீதிமன்ற வட்டாரம் தெரிவித்தது. இந்த நீதிமன்றத்துக்குத் தண்டனை விதிக்கும் அதிகாரம் கிடையாது. இது நூரம் பேர்க் போர்க் குற்றவியல் விசாரணை நீதிமன்றத்தை முன்மாதிரியாகக் கொண்டு நிறுவப்பட்டதாகும்.

### பொறுப்பாளர்கள்

கோலாலம்பூர் போர்க்குற்றவியல் விசாரணை நீதிமன்றத்தில் ஈராக் மீதான அமெரிக்காவின் படையெடுப்பு சம்பந்தமான விசாரணை நீதியரசர் டான் ஸ்ரீலமின் மொஹமத் யூனுஸ் தலைமையில் நடைபெற்றது. அவர் தீர்ப்பை வாசிக்கும் போது,'' ஈராக்கில் இடம்பெற்ற சித்திரவதைக் குற்றங்களுக்கு , நூரம் பேர்க் சட்ட 6 ஆம் விதிக்கிணங்க, எட்டு குற்றவாளிகளுமே கூட்டாகவோ, தனிப்பட்ட ரீதியிலோ பொறுப்பாளர் களாகுகின்றனர்'' என்றார்.

''அமெரிக்கா சர்வதேச சட்டத்துக்கு உடன்பட்டது. அதுபோல நூரம் பேர்க் சட்ட விதிகளுக்கும் கட்டுப்பட்டது. போர் உட்பட அசாதாரணமான சூழ்நிலையில், உறுதிப்பாடின்றியும், பகிரங்கமாகவும் அது சித்திரவதையை மேற்கொள்ளுமானால், அச்செயல் மன்னிக்கவும், அனுமதிக்கவும் முடியாத ஒரு செயலாகும்'' என்றும் நீதியரசர் சுட்டிக்காட்டினார்.

''சாட்சியமளித்தோரில் அநேகர் சட்டவிதிகளுக்கு மாறாக, தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோராவர். இவர்கள் அவ்வவ் போது குரூர சித்திரவதைகளுக்குட்படுத்தப்பட்டவர்கள். பலர் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர். தக்க காரணங்களின்றி, தான்தோன்றித்தனமாக இவர்களைத் தடுத்து வைத்துக் கொடுமைப்படுத்தியோரும், அவர்களது அரசுகளும் பாதிக்கப்பட்ட இவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டுமென, ஐந்து நீதிபதிகளைக் கொண்ட இந்த அமர்வு கோருகின்றது'' என்றும் நீதியரசர் தீர்ப்பின்போது குறிப்பிட்டார்.

இந்த நீதிமன்றத்தால் இனங் காணப்பட்டுள்ள போர்க்குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட தகவல்கள், போர்க் குற்றங்கள் , மனித உரிமை மீறல்கள், சட்டவிரோத குறுக்கீடுகள் ஆகியவை அடங்கிய ஆவணங்கள் போர்குற்றங்கள் மீதான ஆணைக்குழுவிடமும், சர்வதேச போர்க் குற்றவியல் விசாரணை நீதிமன்ற வழக்குத் தொடுநரிடமும் அதிவிரைவில் கையளிக்கப்படும் என்றும் நீதியரசர் ஸ்ரீ லமின் மொஹமத் யூனுஸ் தெரிவித்துக்கொண்டார்.


### அமெரிக்காவின் அழுத்தம்

மறைந்த முன்னாள் சிலியின் சர்வாதிகாரி அகுஸ்ட்டோ பினோசெட், பிரிட்டனில் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். அதே வேளை முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிக்கும், அவரது பரிவாரங்களுக்கும் எதிரான போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளை, அமெரிக்காவின் அழுத்தத்தால், கனடா, ஸ்பெயின், ஜேர்மன்ஆகிய நாடுகளின் அரசுகள் கைவிட்டுவிட்டன. இது ஒரு பாரபட்சமான செயல். நீதித்துறையில், இக்களங்கம் துடைத்தெறியப்பட வேண்டிய தொன்றே என்றும் பேராசிரியர் குர்தியால் குறிப்பிட்டார்.

ஏழு உறுப்பினர்களைக் கொண்ட கோலாலம்பூர் போர்க் குற்றவியல் விசாரணை நீதிமன்றத்தை 2007 ஆம் ஆண்டு, அப்போதைய மலேசியப் பிரதமர் மஹாதிர் மொஹமத்தே நிறுவினார். வயது முதிர்ந்த நிலையிலும் அவர் தற்போதைய விசாரணையிலும் கலந்து கொண்டார்.

சாட்சியமளித்தவர்களில் அப்பாஸ் அப்டியுமொருவர். இவர் ஒரு பொறியியலாளர். ஈராக்கின் பளுஜா நகரைச் சேர்ந்தவர். தடுப்பு காவலில் இவர் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, இவரது விரல் நகங்கள் பிடுங்கப்பட்டுள்ளன. அலி ஷலால் என்பவர் நிர்வாணமாக்கப்பட்டு, அவரது உடலில் மின்சாரக் கம்பிகளால் அதிர்ச்சி ஊட்டப்பட்டுள்ளது. மாஸிம் பெக் என்பவர் தலைக்கீழாகத் தொங்க விடப்பட்டு சித்திரவதைக் குட்படுத்தப்பட்டுள்ளார்.

இவர்களால் அளிக்கப்பட்ட சாட்சியங்களையும், முன்னாள்



மலேசியப் பிரதமர் மஹாதிர் வெகு உன்னிப்பாக அவதானித்தார். நீதிமன்ற விசாரணை முடிவில் தாம் வெளியேறும்போது, ''புஷ்ஷூம் அவரது பரிவாரங்களும் பயங்கர கொலைஞர்கள். வகைதொகையின்றி, மக்களைக் கொன்று குவித்துள்ளார்கள். இன்று பெரும் சக்தி படைத்த நாடுகள் கூட, இத்தகைய கொலைஞர்களை விட்டு வைக்கின்றன. இது மனித குலத்தை வஞ்சிக்கும் ஒரு நடவடிக்கையாகும்'' என்றார்.

2003 ஆம் ஆண்டு, ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்தது. இது கூட்டுப்படையெடுப்பு. இதனால் ஈராக்கில் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மீதான வழக்கு, கோலாலம்பூர் போர்க் குற்றவியல் விசாரணை நீதிமன்றத்தில், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிகள் தரப்புக்காக, நீதிமன்றத்தால் ஒரு சட்டத்தரணி நியமிக்கப்பட்டார். எதிரிகள் இன்றியே, அவர்களுக்காக வாதாடுவதற்கான அதிகாரம் இச்சட்டதரணிக்கு அளிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பும் அளிக்கப்பட்டது.போர்க் குற்றச்சாட்டுகள் 'சுமத்தப்பட்டோருக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. உங்களுக்காக நீங்கள் சட்டதரணிகளை நியமித்துக் கொள்ளலாம். இல்லையேல் பிரதிநிதிகளை அனுப்பி வைக்கலாம் என இவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். இச்சமயத்தில் இந்த நீதிமன்ற நிறுவுநரான, முன்னாள் மலேசியப் பிரதமர் மஹாதிர் முன்னறிவித்தல் ஒன்றை விடுத்தார்.

### முகமூடி கிழிப்பு

குற்றவாளிகளின் முகமூடி கிழிப்பு, ஏனைய தலைவர்களுக்கும் ஒரு படிப்பினையாக இருக்கும். வரலாற்றில், குற்றவாளிகள் என்ற முத்திரை பொறிப்புடன் சங்கமிக்க விரும்பமாட்டார்கள். அஞ்சுவார்கள்.போர்க் குற்றவாளிகள் எனத் தீர்க்கப்படுவோர், வரலாற்று நூல்களில் ''போர்க் குற்றவாளிகள்'' என்றே சுட்டிக்காட்டப்படுவர். கோலாலம்பூர் நீதிமன்ற விசாரணை முன்னெடுப்புகள் நேர்மையானவையாக இருக்கும். சதாம் ஹூஸைனுக்குத் தூக்குத் தண்டனை விதித்த 'கங்காரு' நீதிமன்றத்தைப் போல் இந்த நீதிமன்றம் இயங்காது என்று மஹாதிர் குறிப்பிட்டிருந்தார்.

இவர் 2007 ஆம் ஆண்டு ஏழு உறுப்பினர்களைக் கொண்ட கோலாலம்பூர் போர்க் குற்றவியல் விசாரணை நீதிமன்றத்தை நிறுவினார். எனினும் 2003 ஆம் ஆண்டே இதன் அவசியத்தை இவர் வலியுறுத்தியுள்ளார். அவ்வாண்டு, மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் அணிசேரா நாடுகளின் உச்சிமாநாடு நடைபெற்றது.

இந்த உச்சி மாநாட்டில், அப்போதைய பிரதமரான மஹாதிர் உரையாற்றுகையில், ''போர் சட்டப் பூர்வமாக நிராகரிக்கப்பட வேண்டியதொன்று. ஒரு நாட்டைச் சீரழிக்கும் கலவரங்களை அடக்க நேரிட்டால், அந்நிய படைகளின் திடீர் பிரவேசம் முறையற்றது. அந்நாட்டில், ஐ.நாவின் கட்டுபாட்டின் கீழ் பல்தேசிய படைகளே நிலை கொள்ளவேண்டும். ஒரு தனிநாடு 'உலக பொலிஸ் காரனாக' செயல்பட அனுமதிக்கப்படமாட்டாது. இந்த நிலைப்பாட்டில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை என்ன?எப்போது எடுக்கப்படவேண்டும்? என்பவற்றைக் குறைந்தபட்சம் அனைத்துத் தரப்புகளுமே கூடிதீர்மானிக்க வேண்டும்'' எனக் கோரிக்கை விடுத்தார்.

### கனவு நனவாகியது

2003 ஆம் வருடத்திய இவரது கனவு 2007 ஆம் ஆண்டு நனவாகியது. இவரால் நிறுவப்பட்ட கோலாலம்பூர் போர்க் குற்றவியல் நீதிமன்றம், கடந்த வருட (2011) நவம்பரில், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபுள்யூ.புஷ்,அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயர் ஆகிய இருவரையும் போர்க் குற்றவாளிகள் என இனங்கண்டது. ஈராக் மீது இவர்கள் மேற்கொண்ட கூட்டுப்படையெடுப்பே அனர்த்தங்களுக்கும் பேரழிவுகளுக்கும் காரணமாயிற்று என்றும் இது சுட்டிக்காட்டியது.

### நாடாப்பதிவுகள் அழிப்பு

அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறை முகவர் நிறுவனத்தின் முன்னாள் அதிகாரியொருவர், பி.பி.சிக்கு சமீபத்தில் பேட்டியளித்துள்ளார். அதில் அவர், ''தடுப்புக் கைதிகள் சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட சம்பவங்கள், நாடாக்களில் பதிவு செய்யப்பட்டிருந்தன. அவற்றை முற்றும் முழுதுமாக அழித்துவிடுமாறு நானே உத்தரவிட்டிருந்தேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவரது பெயர் ஜோர்ஜ் ரொட்ரிகஸ் ஆகும். இவர் அமெரிக்கப் புலனாய்வுத்துறையின் தேசிய இரகசிய சேவைப் பிரிவின் பணிப்பாளராக இருந்தவர்.

### ஆளில்லா விமானத் தாக்குதல்

ஒபாமா நிர்வாகம் தீவிரவாதிகளின் இலக்குகள் மீது, ஆளில்லா விமானத்தாக்குதலை மேற்கொண்டு வருகின்றது. இந்தத் தீவிரவாதிகள் எளிதில் பிடிக்க முடியாதவர்கள். அல்லது விசாரணைக்குட்படுத்த முடியாதவர்கள்.

இந்தத் தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் எல்லைப் பிராந்தியங்களில் பதுங்கியிருக்கிறார்கள். இந்த எல்லைப் பகுதிகள் அடுக்கு மலைகளையும், அடர்ந்த வனாந்திரங்களையும் கொண்டவை. ஆங்காங்கு மலைவாழ் பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அந்த அப்பாவி மக்களுடன் இந்த தீவிரவாதிகளும் இரண்டறக் கலந்திருக்கிறார்கள்.

அம்மக்கள் மத்தியில் பரவியுள்ளார்கள். அதனால் ஆளில்லா விமானத் தாக்குதல்களால் தீவிரவாதிகள் மாத்திரமல்ல, பழங்குடியின அப்பாவிகள், பெண்கள், பிள்ளைகள் ஆகியோரும் மடிந்து வருகிறார்கள்.

வடஅத்திலாந்திக் உடன்படிக்கை நிறுவனத்தின் (நேட்டோ) குண்டுத் தாக்குதல் சம்பந்தமான அறிக்கையொன்றை சமீபத்தில் மனித உரிமைகள் மையமொன்று வெளியிட்டிருந்தது. அதில் லிபியா மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல் களில், உயிர் நீத்த அப்பாவிகள் குறித்த விவரங்கள் அடங்கியிருந்தன. இவை வெளிவராத விடயங்கள். மூடு மந்திரமாக புதைக்கப்பட்டவை. இவற்றை இந்த மையம் பகிரங்கப்படுத்தியிருந்தது.

பொது மக்களை பாதுகாக்கும் பொருட்டு,லிபியாவில் விமானப் பறப்புத் தடைமண்டலம் பிரகடனப்படுத்தப்பட்டது.இதனை ஐ.நா பாதுகாப்புச் சபையும் அங்கீகரித்திருந்தது. எனினும் இந்த மண்டலத்தில் நேட்டோ படைகள் எட்டுத் தடவைகள் விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. இவற்றில் 72 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இவர்களில் 20 பெண்கள், 24 பிள்ளைகள் ஆகியோரும் அடங்குவர். அநேகர் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்க, பிரிட்டிஷ், பிரான்ஸ் விமானங்களே இந்த நேட்டோ தாக்குதல்களை நடத்தியுள்ளன.

ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் மீது அமெரிக்கா மேற்கொண்ட படையெடுப்புகளால், பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் மடிந்துள்ளார்கள். அகதிகள் பிரச்சினை பூதாகரமாக உருவெடுத்துள்ளது.

முன்னாள் ஐ.நா. உதவிச் செயலாளர் நாயகம் டெனிஸ் ஹலிடேயும் கோலாலம்பூர் போர்க்குற்ற விசாரணையின் போது சமுகமளித்திருந்தார். இதில் அவர் கருத்து வெளியிடுகையில் அமெரிக்காவின் மேலாதிக்கத்தைச் சாடினார்.

''ஆப்கானிஸ்தான் மீதும் ஈராக் மீதும் தான் படையெடுப்பதற்கு முன்னரே அமெரிக்கா, சர்வதேச அமைப்புகளை பலவீனப்படுத்தி விட்டது. புஷ் நிர்வாகத்தின் போது ஐ.நா பெரிதும் பலவீனப்பட்டிருந்தது. ஐ.நா பாதுகாப்புச் சபையையும் இந்த நாடுகள் அவற்றின் சுய நலன்களுக்காகவே பயன்படுத்துகின்றன. நிச்சயமாக அது ஒரு நேர்மையற்ற அமைப்பாகி விட்டது. '' என ஹலிடே சுட்டிக்காட்டினார்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# 148 பேர் கொண்ட இலங்கையர் குழு நாடு புகுவதை தடுத்தது கனடா

## அந்த நாட்டு இணையத்தளம் தகவல்

தமது நாட்டில் சட்ட விரோதமாக அடைக்கலம் கோரவிருந்த மற்றும் ஒரு இலங்கையர் குழுவினர், கனடாவுக்குள் வருவதை கனடா தடுத்துள்ளதாக கனேடிய இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

148 பேரைக்கொண்ட இந்த இலங்கையர்கள் கனடாவுக்குச் செல்லும் வழியில் அண்மையில் மேற்கு ஆபிரிக்க நாடான பெனினில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்று அனைவரும் உள்ளடங்கியிருந்த இந்த இலங்கையர்கள் நேற்று முன்தினம் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டனர்.

இந்தநிலையில் இவர்களை பெனின் நாட்டில் வைத்து கைதுசெய்ய கனடாவின் புலனாய்வுப் பிரிவினரே முக்கிய பங்கை வகித்தனர் என்று, அந்த நாட்டின் குடிவரவுத்துறை அமைச்சர் ஜேசன் கென்னே தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 492 மற்றும் 76 என்ற தொகையின் அடிப்படையில் இலங்கைத் தமிழர்கள் கனடாவில் அடைக்கலம் கோரியுள்ளனர்.

இவர்களின் விடயங்களை மிகவும் கவனமாகக் கையாண்டு வருகின்ற நிலையிலேயே பெனினில் வைத்து 148 இலங்கையர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில் அவர்களை இலங்கைக்கு திருப்பியனுப்பியதன் மூலம் தமது நாட்டுக்கு அவர்கள் வருவதை கனடா தடுத்துள்ளதாக கனேடிய இணையத் தளம் குறிப்பிட்டுள்ளது. (வ)

# வடமராட்சி இந்து ஆரம்பப் பாடசாலையில் அடுத்த ஆண்டுக்கு மாணவர் அனுமதி

வடமராட்சி, ஜூன் 16

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பருத்தித்துறை வடமராட்சி இந்து ஆரம்பப் பாடசாலையில் அடுத்த 2013 ஆம் ஆண்டு முதல் முதலாம் தரத்துக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். இதற்கான விண்ணப்பங்கள் பாடசாலை நிர்வாகத்தால் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து இதன் ஆரம்பப் பிரிவை மூடுவதெனத் தீர்மானிக்கப்பட்டு இவ்வாண்டு 2012 முதலாம்தர வகுப்புக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

இந்தக் கல்லூரி சுற்றுச்சூழல்களில் வசிக்கும் பெற்றோர்கள் ஆரம்பப் பிரிவை மூடாது அதனைத் தனியானதொரு ஆரம்பப் பாடசாலையாக மாற்றி இயங்க வைக்கவேண்டும். இதனால் இந்தக் கல்லூரியைச் சூழவுள்ள ஆரம்பப்பிரிவு மாணவர்கள் கல்வியைத் தொடர வாய்ப்பு ஏற்படும். ஆரம்பப் பாட சாலை இல்லை எனில் இந்தப் பகுதிச் சிறார் களான மாணவர்கள், பெற்றோர்கள் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டிவரும். எனவே ஆரம்பப்பிரிவு பாடசாலையை ஆரம்ப பாடசாலையாக புதிதாக ஆரம்பிக்குமாறு கல்வியமைச்சர் உள்ளிட்ட பல்வேறுதரப்பினரையும்வேண்டியிருந்தனர்.

இந்தக்கோரிக்கை ஏற்கப்பட்டதைத் தொடர்ந்து வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு, ஆரம்பப் பாடசாலையாக கடந்தவாரம் முதல் கல்வித் திணைக்களத்தால் மாற்றப்பட்டுள்ளது.

இந்தப் புதிய ஆரம்பப் பாடசாலையில் அடுத்த ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படும் முதலாம் தர வகுப்புக்கு மாணவர்கள் இருபாலாரும் அனுமதிக்கப்படவுள்ளனர். (வ-8)

## சொற்பொழிவு

வடமராட்சி, ஜூன் 16

யாழ். காங்கேசன்துறை வீதியில் உள்ள பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்வருடாந்தப் பெருந்திரு விழாக்காலத்தில் தினமும் மாலை 6மணிக்கு 'பெரிய புராணம்' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

ஆன்மிகச்சொற்பொழிவாளரும், பண்டிதரும், சைவப் புலவருமான பொன்.சுகந்தன் இத்தொடர் சொற்பொழிவை நிகழ்த்துவார். இக்கோயில் பெருந்திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.(ந-8)

## சமய சந்நிதிகளில்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் ஆரம்பமாகி கொடியேற்ற நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம் பெறும். எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 7 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும். (ந)

* * *

அளவெட்டி வடக்கு, தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த பெருந்திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 26 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுபெறும். (ந)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 16

நல்லூர் மூத்த விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 24 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும். (ந-16)

* * *

கொழும்புத்துறை,ஜூன் 16

சுண்டுக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு இடம்பெற்று 23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணைப் பெருவிழா நடைபெறும்.மறுநாள் 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 6.15 மணிக்கு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள 125 ஆவது ஆண்டு நிறைவு யுபிலி ஆண்டை ஆரம்பித்து வைக்கும் யுபிலிப் பிரகடனத்தை அன்றையதினம் ஆயர் அறிவிப்பார். (ந-135)

# மரண அறிவித்தல்

## கந்தையா திருலோகநாதன்



புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மணியகார புதுவீதியை வசிப்பிடமாகவும், யாழ். ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரீசக்தி ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான கந்தையா திருலோகநாதன் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும்,காலஞ் சென்றவர்களான வே. ஐயாத்துரை (முன்னாள் பாணந்துறை வர்த்தகர்) -மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், திருச்செந்தூரன் (ஆஸ்திரேலியா), சஞ்சீவன் (ஸ்ரீலங்கா ரெலிக்கொம் - பொறியியலாளர்), வைத்திய கலாநிதி யனோஜினி (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), நெமேந்திரா (வர்த்தகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுபசாந்தினி (ஆஸ்திரேலியா), கற்கதாரணி (ஸ்ரீலங்கா ரெலிகொம் - பொறியியலாளர்), வைத்திய கலாநிதி லக்ஸ்மன் (அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை), ரம்மியா ஆகியோரின் அன்பு மாமனும், நிலவன், அருணன், நிலானி, விசாலி ஆகியோரின் அன்புப் பேரனும், புஸ்பவதி ஆறுமுகம், அருணகிரிநாதன், சரோஜினிதேவி ஏரம்பமூர்த்தி, கருணாவதி இராமலிங்கம், பவானி மகாதேவன், செல்வகலா சர்வலோகநாதன், வைத்தீஸ்வரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும், மகேந்திரலட்சுமி இலகநாதன், தனலட்சுமி பவாசண்முகம், தனபாக்கியலட்சுமி சோமசுந்தரம், கோமளாதேவி சிவபாலன், செல்வராணி கருணைதாஸ், சத்தியபாமா தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.06.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மணியகார புது வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(19390 (45.6.9)

## சஞ்சிகை வெளியீடு

வடமராட்சி, ஜூன்16

பருத்தித்துறை கத்தோலிக்க கலை இலக்கிய மன்றத்தின் 7 ஆவது ஆண்டு விழாவை யொட்டி 'பூவமுதம்' என்னும் வருடாந்த சஞ்சிகை வெளியிடப் பட்டுள்ளது.

பருத்தித்துறை சென். தோமஸ் றோ.க. பெண்கள் பாட சாலையில் மன்றக் காப்பாளர் அருட் திரு யோ.யோ. மவுலிஸ் அடிகள் தலைமையில் அண்மையில் ஆண்டு விழாவும் நூல் வெளியீடும் இடம்பெற்றன.

சமயத்துக்கும் சமூகத்துக்கும் பணிசெய்து சமூக மேன்மை, ஒருமைப்பாட்டை வளர்க்கும் நோக்கில் அருட்திரு ப. இருதயதாஸ் அடிகளாரினால் இக் கலை இலக்கிய மன்றம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட புதிய குரு அருட்திரு பெ.சதீஸ்குமார் அடிகள் மன்றக் காப்பாளரிடமிருந்து முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார். (ந-135)

## பிரத்தியேக வகுப்புக்கள்
(கணிதம், ஆங்கிலம்)



★ பாடசாலை மாணவர்கள், O/L, A/L மாணவர்களுக்கு:
English Text book & Grammar
★ தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்:
Spoken English with Grammar
★ தரம் 6-11 வரையான மாணவர்களுக்கு:- கணிதம் என்பன உங்கள் இல்லங்களுக்கு வந்து கற்பிக்கப்படும். தனி / குழு வகுப்புக்கள். தொடர்புகளுக்கு: 0756584630
(புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி பிரதேசங்கள் சிறந்தது)
(19391) (6,9,10)

## மணமகள் தேவை


யாழ் R.C கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1982இல் பிறந்த பிரான்சில் P.R உள்ள 5'-5" உயரம், நட்சத்திரம் அவிட்டம், பாவம்-19 உடைய மணமகனுக்கு மணமகள் தேவை. இந்து மதத்தைச் சேர்ந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு:
இல.43, 5 ஏக்கர் திட்டம்,
கல்மடு நகர், கிளிநொச்சி.
0719615780
(19264) (6,9,10)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 1985 * 06 * 10

உதிர்வு 2011 * 06 * 16



## செல்வன் ருபி யோண்சன் பற்றிக்

[ கட்டடக்கலை மாணவன், ஜேர்மனி ]

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் - உம் நினைவு
என்றென்றும் எம் மனதில் நிறைந்திருக்கும்
காலங்கள் விடைபெறலாம் ஆனாலும்
கண்முன்னே நிழலாடும் உம் நினைவுகள்
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் எம் உயிர் உள்ள வரை
உம் நினைவில் வாழும்......

50/15, செட்டித்தெரு,
நல்லூர்

அம்மம்மா
செல்லத்துரை மல்லிகாதேவி

(19386)(6-8-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையருக்கு மலேசியாவில் சிறை

மலேசிய கடைத் தொகுதி ஒன்றில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட இலங்கையர் ஒருவருக்கு 800 மலேசிய ரூபாக்களை அபராதமாகச் செலுத்த வேண்டும் என்றும் அவ்வாறு செலுத்தாத பட்சத்தில் ஒரு மாத சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோலாலம்பூர் நீதிமன்றமே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இவர் கடந்த 3ஆம் திகதி கடைத் தொகுதி ஒன்றில் சேட் மற்றும் காற்சட்டைகளைத் திருடியதாக நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

## ஆபரண உற்பத்தித் தொழிலாளர்களின் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம், ஜூன்16

ஆபரணத்தொழில் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தும் ஆரம்பப்படிமுறையாக நவீனதொழில்நுட்ப இயந்திரம் பொருத்தும் கருவிகளை இலவசமாக வழங்குவதற்காக தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதைத் தொடர்ந்து நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆபரண உற்பத்தித் தொழிலாளர்கள் தமது விவரங்களை நல்லூர் பிரதேச செயலகத்தில் அல்லது தமது பகுதி கிராம அலுவலர்களிடம் பதிவு செய்யுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (வ-7)

## இலங்கையருக்கான சவூதி அரேபியாவில் சட்டமூலம்

ஐக்கிய அரபு இராச்சியத்தில்பணியாற்றும்இலங்கை உள்ளிட்ட நாடுகளின் உரிமைகள் மற்றும் வரப்பிரசாதங்களை அதிகரிப்பதற்கான சட்ட மூலம் ஒன்று அந்த நாட்டின் அமைச்சரவை அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பல்வேறு தரப்பில் இருந்தும் வரவேற்புக் கிடைத்துள்ளதாக ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன.

ஏற்கனவே இந்தச் சட்டமூலம் குறித்து அபுதாபியில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் கருத்து வெளியிட்டிருந்தனர். இந்தச் சட்டமூலத்தின் மூலம், ஐக்கிய அரபு நாடுகளில் பணியாற்றுகின்ற ஒரு லட்சத்துக்கும் அதிக மான இலங்கையர்கள் பயன்பெறுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பணியாளர்கள் அனுபவிக்கின்ற சித்திரவதைகள், அதிக வேலைப்பளு, குறைந்த வருமானம், துன்புறுத்தல்கள், துஷ்பிரயோகங்கள் போன்றவற்றில் இருந்து இந்தச் சட்டமூலத்தின் மூலம் பாதுகாப்பு கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# ஈழத்தமிழர் உரிமையை வலியுறுத்தி கனடாவில் கையெழுத்து வேட்டை

### அந்நாட்டின் தமிழர் தேசிய அவை மும்முரம்

**ஈழமண்ணில் போர்க்குற்றம் நடத்தியவர்கள் தண்டிக்கப்பட்டு, ஈழத்தில் வாழும் தமிழ் மக்களிடமும் புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியிலும் பொதுவாக்கெடுப்பை நடத்தி, ஈழமக்கள் தாங்கள் விரும்பும் ஆட்சியை அமைப்பதற்கான உரிமையை சர்வதேசம் வழங்கவேண்டும்.**

ஈழ மக்களுக்கான அரசியல் தீர்வை நிர்ணயிக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீதான சுயாதீன உலகப் போர்க் குற்ற விசாரணையையும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையையும் வலியுறுத்திக் கையெழுத்துத் திரட்டல் நிகழ்வை கனேடியத் தமிழர் தேசிய அவை மேற்கொண்டுள்ளது.

கையெழுத்துக்கள், கனடா வாழ் தமிழ் மக்களிடமும் பல்லின மக்களிடமும் சேகரிக்கக் கனேடியத் தமிழர் தேசிய அவை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதுடன் அனைத்து மக்களவைகளுடனும் மற்றைய அமைப்புக்களுடனும் இணைந்து சர்வதேச ரீதியில் இந்தக் கையெழுத்துத் திரட்டல் நடத்தப்படவுள்ளது.

இவ்வாறு சேகரிக்கப்படும் கையெழுத்துக்கள் அனைத்தும் தத்தம் நாட்டு அரசுக்கும், ஐக்கிய நாடுகள் சபைக்கும் கையளிக்கப்படுவதுடன் அனைத்து நாட்டுத் தூதரகங்களுக்கும் கையெழுத்துப் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

ஈழமண்ணில் போர்க் குற்றம் நடத்தியவர்கள் தண்டிக்கப்பட்டு, ஈழத்தில் வாழும் தமிழ் மக்களிடமும் புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியிலும் பொதுவாக்கெடுப்பை நடத்தி, ஈழமக்கள் தாங்கள் விரும்பும் ஆட்சியை அமைப்பதற்கான உரிமையை சர்வதேசம் வழங்கவேண்டும் என்றுகனேடியத்தமிழர்தேசிய அவை வேண்டி நிற்கிறது.

ஒவ்வொருவரும் தவறாது இந்தக் கையெழுத்துத் திரட்டல் வேலைத்திட்டத்தில் பங்கேற்று அதற்கு தங்களாலான முழு ஒத்துழைப்பையும் வழங்குமாறு கனேடியத் தமிழர் தேசிய அவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## கனடா ஈழத் தமிழ்ப் பெண்கள் மேம்பாட்டு அமைப்பினர் நடத்திய 'தாய்மை' கருத்தரங்கமும் கலந்துரையாடலும்



ஈழத்துப் பெண்கள், குழந்தைகள் நலன் காப்பதற்காகத் 'தாய்மை' ஆரம்பகட்ட கருத்தரங்கும் கலந்துரையாடலும் கனடா, மார்க்கம் நகரசபை மண்டபத்தில் கடந்த 9ஆம் திகதி மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச் சுடரை மார்க்கம் நகரசபை உறுப்பினர் லோகன் கணபதிப்பிள்ளை, மார்க்கம் கல்விச் சபை உறுப்பினர் செல்வி ஜெனிற்றா நாதன், சமூக ஆர்வலர் சண் தயாபரன் ஆகியோர் ஏற்றி வைத்துச் சிறப்பித்தனர்.

நிகழ்வில் கனடா நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி ராதிகா சிற்சபைஈசனும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

செல்வி ராதிகா சிற்சபைஈசன் மற்றும் லோகன் கணபதிப்பிள்ளை இருவரும் கருத்துத் தெரிவிக்கும் போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதோடு மட்டுமல்லாமல், கனேடிய பிரதான ஊடகங்களையும் உள்வாங்கி, ஈழத்துப் பெண்களின் அவலங்களைப் புள்ளி விவரங்களுடன் சமர்ப்பித்து, சர்வதேச மயப்படுத்தி, அவர்களுக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க கனடா தமிழ்ப் பெண்கள் மேம்பாட்டு அமைப்பு தொடர்ந்து உழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர். அதற்குப் பக்கபலமாகத் தாமும் இருப்போம் என்றும் தெரிவித்தனர். (ந)

## பெண் கைதிகளுக்கு தொழிற்பயிற்சித் திட்டம்

வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள சிறைச்சாலைகளைச் சேர்ந்த பெண் கைதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கும் விசேட திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.

அந்தந்த பிரதேசங்களுக்கு ஏற்ற வகையில் கைதி களுக்கான தொழில் பயிற்சிகளை வழங்குமாறு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இதற்கமைய தையல், அழகியற்கலை, பனைசார் கைவினைப் பொருள்கள் உற்பத்தி, பேக்கரி உற்பத்தி உள்ளிட்ட பயிற்சிகள் கைதிகளுக்கு வழங்கப்படுவதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எஸ்.சதீஸ்குமார் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் சுமார் நான்காயிரம் பெண் கைதிகள் இருக்கின்றனர் என்றும் ஏற்கனவே பல சிறைச்சாலைகளில் கைதிகளுக்கான பயிற்சித் திட்டங்கள்வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

### சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு அனுப்புவோர் இலங்கையிலிருந்து நாடு கடத்தப்படுவர்

ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவதற்காக வெளிநாடுகளைச் சேர்ந்த சுமார் 100 பேர் விடுதிகளிலும், வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இலங்கையைக் கேந்திரமாகக் கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவதற்காக பாகிஸ்தான் முகவர்களினால் இவர்கள் இலங்கையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆள்கடத்தல் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள பாகிஸ்தானைச் சேர்ந்த இம்ரான் ஹூசைனிடம் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகளிலிருந்து இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கல்கிஸை பிரதேசத்தில் உள்ள சில விடுதிகள் சோதனையிடப்பட்டன. எனினும் சுற்றிவளைப்பை முன்கூட்டியே அறிந்துகொண்ட வெளிநாட்டவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். நாட்டின் பல இடங்களில் இவ்வாறு வெளிநாட்டவர்கள் தங்கியிருக்கின்றனர். அவர்களைக் கைது செய்வதற்கான தேடுதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆள்கடத்தல் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தான் நபர், விமான நிலையத்தில் பலரின் உதவியையும் பெற்றுவந்துள்ளார். விமான நிலையத்தின் ஊடாக ஒருவரை அனுப்பிவைப்பதற்கு அவர் 200 அமெரிக்க டொலர்களையும் லஞ்சமாக வழங்கியுள்ளார்.

இதனைத் தவிர, ஆஸ்திரேலியாவுக்கு ஒருவரை அனுப்பிவைப்பதற்காக 20 ஆயிரம் அமெரிக்க டொலர்களை அறவிட்டுள்ளார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தற்போது நடத்தப்பட்டுள்ள விசாரணைகளுக்கமைய நாட்டில் தங்கவைக்கப்பட்டுள்ள ஏனையோரைக் கைதுசெய்து நாடுகடத்தவுள்ளதுடன், முகவராகச் செயற்பட்ட பாகிஸ்தான் பிரஜை கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டு அவரும் நாடுகடத்தப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஆள்கடத்தலின் சூத்திரதாரி ஆஸியிலிருந்து தப்பினார்

இலங்கைத் தமிழர்களை ஆஸ்திரேலியாவுக்குப் படகு மூலம் அனுப்பி வைக்கும் சர்வதேச ஆள்கடத்தல் வர்த்தகத்தை வழி நடத்திவந்த கப்டன் இமாட் என்பவர் ஆஸ்திரேலியாவில் இருந்து தப்பிச் சென்றுவிட்டார் என்று ஆஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையர் உள்ளிட்ட ஏனைய நாடுகளின் அகதிகளை இந்தோனேசியாவில் இருந்து படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைக்கும் திட்டத்தின் சூத்திரதாரி இவர் என்று ஆஸ்திரேலியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரைக் கைதுசெய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் அகதிகளின் ஆபத்தான கடல் பயணத்தைத் தடுப்பதற்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் ஆஸ்திரேலியப் பொலிஸார் கூறினர். (வ)

## சுவிஸில் தஞ்சமடைந்த தமிழர் நிலை குறித்து கருத்தாடல்

### நாடு கடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில்

சர்வதேச அகதிகள் தினத்தை மையப்படுத்தி, சுவிஸில் அண்மைய காலங்களில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழர்களின் நிலைகுறித்த கருத்தாடல் நிகழ்வொன்று, நாடு கடந்த தமிழீழ அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுவிஸ் அரசின் அகதிகள் விவகாரத் திணைக்கள உயரதிகாரியான உர்சுலா கெய்ட் கலந்து கொண்டு, அரசியல் தஞ்சம் கோரும் ஈழத்தமிழ் அகதிகள் குறித்த, சுவிஸ் அரசின் நிலைப்பாடு தொடர்பில் விளக்கமளிக்கவுள்ளார். மேலும் வெளிநாட்டவர்கள் விவகாரங்களுக்கான அமைப்பின் பிரதிநிதி எமின் சரிசலன் கலந்து கொண்டு அகதிகள் தொடர்பில் விளக்கமளிக்கவுள்ளார்.

இதேவேளை நாடு கடந்த தமிழீழ அரசின் அகதிகள் விவகாரத்துறை அமைச்சர் முத்துக்குமாரசாமி ரட்ணா மற்றும் நா.க.த. அரசின் அகதிகள் விவகாரங்களுக்கான சர்வதேச சட்டவாளர் டேவிட் மத்தாஸ் கலந்து கொண்டு ஈழத் தமிழர்களின் நிலைப்பாடு குறித்து விளக்கமளிக்கவுள்ளனர். சுவிஸில் அகதித் தஞ்சம் கோரி பல்வேறு நிலைகளில் உள்ள அனைத்து தமிழர்களையும் மேற்படி கருத்தாடலில் கலந்து கொள்ளுமாறு நாடுகடந்த தமிழீழ அரசின் ஜெனிவா செயலகம் அழைப்பு விடுத்துள்ளது. (வ)

## விவசாய ஓய்வூதியம் வழங்கக்கோரிக்கை

இடையில் கைவிடப்பட்ட விவசாயிகளுக்கான ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு இலங்கை விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர் சங்கம் கோரியுள்ளது.

அதன் பிரதான செயலாளர் நிஷ்ஷங்க பாலசூரிய நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாதவிடத்து, விவசாயிகளுடன் இணைந்து போராட்டம் நடத்த இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கடலுக்கு கீழ் வெடிப்பு

கொழும்புதுறை முகத்தை அகலிக்கும் நடவடிக்கைகளுக்காக, கடலுக்கு கீழ் நிலத்தில் வெடிப்பை ஏற்படுத்தும் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுகிறது.

இதனால் கொழும்பு நகரின் கட்டடங்கள் சில சமயங்களில் அதிர்வை உணரலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் இது குறித்து அச்சப்படத் தேவை இல்லை என சுரங்க தொழில் பணிப்பாளர் அனில் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையிலேயே கொழும்பு நகரில் நேற்றுக் காலை நில அதிர்வு உணரப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## படகுகள் காணாமல் போயுள்ளன

அகதிகளை ஏற்றி வரும் சில படகுகள் இடைநடுவில் காணாமல் போய்விடுவதாக ஆஸ்திரேலியாவின் அகதிகள் தொடர்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் 50 பேர் வரையில் ஏற்றி வந்த இரண்டு படகுகள் காணாமல் போய் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் குடியுரிமை வழங்குவதாக உறுதியளித்து, இலங்கை அகதிகளை ஆள்கடத்தல்காரர்கள் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்புகின்றனர்.

இவ்வாறு அகதிகளை ஏற்றி வரும் சில படகுகள் இடைநடுவில் காணாமல் போய்விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலங்களில் இலங்கை மற்றும் தென்னிந்திய பகுதியில் இருந்து வரும் அகதிகள் இதனை தமக்கு தெரிவித்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டமாணிக்கற்கை (LL.B - U.K)
## யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக

- இலங்கை மற்றும் சர்வதேச அங்கீகாரம்.
- இலங்கை, பிரித்தானிய சட்ட பாட விதானங்களை உள்ளடக்கியது.
- LAW கற்கை நெறி முடியும் வரை Legal English, IT & Management Skills போன்றன இலவசமாக கற்பிக்கப்படுகின்றது.
- முதல் 100 மாணவர்களுக்கு விசேட சலுகைக் கட்டணம், இலகு தவணைக் கட்டண முறை.
- கல்வி வங்கிக் கடன் வசதி.

**நாளை நீங்களும் சட்டத்தரணியாகலாம்**

வழிகாட்டிக் கருத்தரங்கும் பதிவுகளும்
திகதி: 17.06.2012 (ஞாயிறு)
நேரம்: 11.00 AM - 4.00 PM




**T: 077 59 49 272**

இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி (பட்டப்படிப்புகள்பிரிவு)
போதனா வைத்தியசாலை முன்பாக
இல . 464, ஆஸ்பத்திரி வீதி , யாழ்ப்பாணம் .
(சி/829)


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 05★05★1938 மறைவு 18★05★2012

அமரர்
**கந்தசாமிபத்தர் காமாட்சியம்மா**

கடந்த (18.05.2012) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் கந்தசாமி பத்தர் காமாட்சியம்மா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும், மதிய போசன நிகழ்வும் நாளை (17.06.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் .

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு ஓடோடி வந்து சகல வழிகளிலும் உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக தயவு கூர்ந்து ஏற்றுக்கொள்ளவும்.

601 கே.கே. எஸ். றோட்,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(19442)(14-8-)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி கனகரத்தினம்

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் புவனேஸ்வரி கடந்த (12.06.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் -வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கனகரத்தினத்தின் (முன்னைனாள் இ.போ.ச.பொறிவலர்) அன்பு மனைவியும், புவிகரன் (இ.போ.ச. பொறிவலர் - கோண்டாவில் சாலை), புவிசங்கர் (பிரான்ஸ்), சுஜாதா (சுவிஸ்), யசிந்தா (GAQ மாணவி, பேராதனை) ஆகியோரின் அன்புத் தாயும், ரஜனி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், பிரதேசசெயலகம் - சாவகச்சேரி), அகலிகா (பிரான்ஸ்), காலஞ்சென்ற இரவி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், வினுஜன் (சுவிஸ்), தனுஜன் (சுவிஸ்) , தக்ஷயன் ஆகியேரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் பரமேஸ்வரி, ஞானேஸ்வரி (கனடா), இராஜேஸ்வரி, நாகேஸ்வரி, பரமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.06.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.
(14745)(2-6-9)
தகவல்:
குடும்பத்தினர்.

## குடிசைவீடு எரிந்து நாசம்

யாழ்ப்பாணம்,ஜூன்16

எழுதுமட்டுவாளில் நேற்று மாலை 5 மணி அளவில் இடம்பெற்ற தீவிபத்தில் குடிசை வீடொன்று முற்றாக எரிந்து நாசமாகியது.

எழுதுமட்டுவாள் விழுவளை அம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள வீடே தீயில் எரிந்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் வீட்டின் பின்புறத்தில் குப்பைகளைக் கொழுத்தியவேளையே இந்த அசம்பாவிதம் இடம் பெற்றது. இதில் வீட்டுப் பொருள்கள் எரிந்து நாசமாகின.


### காணி விற்பனைக்கு

கோண்டாவில் ,இருபாலை வீதியில் பழனி ஆண்டவர் கோயில் முன்பாகச் செல்லும் பாதையில் அங்கிருந்து 200 M தூரத்தில் 12 அடி பாதை, கிணற்று பங்குடன் கூடிய 10 ¼ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு விலை பேசித் தீர்க்கலாம் தரகர் தேவை இல்லை

தொடர்புகளுக்கு : 055 5715633
077 9225704
(19429)( 8-14)

### தவறிவிட்டது

வேலுப்பிள்ளை குமரகுரு என்பவருடைய வாகன அனுமதிப்பத்திரம் (A008905455) யாழ்ப்பாணத்திற்க்கும் மானிப்பாய்க்கும் இடையே தவறிவிட்டது

தொடர்பு: 0774749255
(19436 (8-14)

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள NISSAN EX Saloon, (H - XXXX) இலக்கமுடைய கார் உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு :
0776510188, 077 9947442
(19445)(8-14)

### தவறிவிட்டது

திருமதி வேழினி பாலேந்திரா என்பவரின் தேசிய அடையாள அட்டை (755451525V) ,சாரதி அனுமதிப் பத்திரம் போன்ற பல முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் வவுனியா பஸ்ஸில் கிளிநொச்சி டிப்போ சந்திக்கும் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்வரும் தொலை பேசி இலக்கத்துடன் தொடட்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்

தொடர்பு: 0771891453
287, இருபாலை றோட்,
கோண்டாவில்
(19439)(8-14)

### விற்பனைக்கு

MAKENDRA MAXITRAK
உடன் விற்பனைக்குண்டு
தொடர்பு : 077 1040986
(19441)(8-14)

### சிறு நீரகம் தேவை

13 வயதுடைய சிறுவனுக்கு B+, O+ பொசிட்டிவ் சிறுநீரகம் (30 வயதுக்குள்) உடனடியாகத் தேவை

தொடர்பு
077 4474847, 077 5243254,
075 2644838
(சி/695)

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வேம்படி, சென்றல் பாடசாலைகளுக்கு அருகில் முதலாம் குறுக்குத் தெருவில் வீட்டுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 077 6917030
(19426)(2-6-9)

### வீடு வாடகைக்கு

கொக்குவில் மேற்கில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0758348395 (19427)(2-6-9)

### இறைச்சிக் கோழி

15 நாள்கள் நிரம்பிய ஊர்க்குஞ்சு 150/= ஒரு வாரம் நிரம்பிய (கிரிராஜ்) ஊர்க்குஞ்சு 100/= புறொயிலர் குஞ்சு விற்பனைக்கு உண்டு.

K.S சிவகுமாரன் பாம்
கல்வியங்காடு, 0776845519
(19389) (6,9,10)

### விற்பனைக்கு

ஐஸ்கிறீம் அடிக்கும் இயந்திரம் பாத் கொம்பிறேசருடன் விற்பனைக்குண்டு.
T.P : 077 5294086, 077 0254520
(19425)(6-8-9)

### தேவை

கொக்க கோலா விநியோகப் பகுதி ஒன்றிற்கு
- Cash Collector
- Delivery boy
- Clerk (கணினி அனுபவமுள்ள) ஆள்கள் தேவை.

சிவா பிறதர்ஸ்
205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
021 222 5688
(சி/729)(6-8-9)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடியில் 27★10★1938
இறைவன் அடியில் 17★05★2012

அமரர்
**சிவலிங்கம் நடராஜா**
( ஓய்வு பெற்ற தபால் அதிபர்)

எங்கள் குடும்பத்தின் தன்னிகரில்லாத் தலைவனே தந்தைக்கு
இலக்கணமாய் தரணியிலே வாழ்ந்தவரே அன்பும் பண்பும்
நிறைந்த மேலோனே பார் புகழ நாம் வாழ நல்வழி
காட்டினீரே தங்கள் நினைவுகளை நெஞ்சில் சுமந்தபடி
நாமிருப்போம் இத் தரணியிலே.

கடந்த 17.05.2012 வியாழக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (16.06.2012) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அழகுமாளிகை,
சங்கானை வடக்கு, பண்டத்தரிப்பு
குடும்பத்தினர்.
(19446)(8-14)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி - 2012

மட்டுவில் வடக்கு கண்ணகை சன சமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கண்ணகை விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் யாழ். மாவட்ட ரீதியான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி - 2012

இடம்: மட்டுவில் வடக்கு கண்ணகை விளையாட்டுக்கழக மைதானம்
காலம்: 17.06.2012 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி

மோதும் கழகங்கள்:
மயிலங்காடு ஞானகலா விளையாட்டுக்கழகம் எதிர்
கோண்டாவில் கலைவாணி விளையாட்டுக் கழகம்

தலைவர்:
சி. சஞ்சீவன் அவர்கள்
(கண்ணகை விளையாட்டுக்கழக தலைவர்)
P. சத்திவேல் அவர்கள்
(விளையாட்டு உத்தியோகத்தர் தென்மராட்சி)
சிறப்பு விருந்தினர்
A.G. றோசைறோ அவர்கள்
(வேள்விசன் மாவட்ட முகாமையாளர்)

S. சிவசுப்பிரமணியம் அவர்கள்
(கிராம சேவையாளர் J/313 மட்டுவில் வடக்கு
லெப்டினன்ட் R.S.K. ராஜபக்ச அவர்கள்
(Bcoy கொமாண்டர்)
A. மகேச்சுரன் அவர்கள்
(தலைவர் கண்ணகை சனசமூக நிலையம்)
N. ஜெயகுமாரன் அவர்கள்
அதிபர் யா/ மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம்.

அனுசரணை: ராஜா பல் பொருள் வாணிபம், பன்றித்தலைச்சி அம்மன் கோயிலடி மட்டுவில் வடக்கு.
(14746) (45.6.0)


## MULTIMEDIA DIRECT SCHOLARSHIP
## மல்டிமீடியா நேரடி ஸ்கொலர்ஷிப்

ISO 9001 : 2008 Certified Institution

அனைத்து துறைகளிலும் வேலைவாய்ப்பை அதிகரித்துவரும் கிராபிக்ஸ், அனிமேஷன் மற்றும் மல்டிமீடியா கல்விக்கான தரமான சிறப்பு பயிற்சிகளுக்கான கட்டணச்சலுகையை அருகிலுள்ள எமது பயிற்சி நிலையங்களில் இன்றே பெற்றிடுங்கள்.




**WIN UP TO 60% DIRECT OFFER**

- Digital Publishing
- Audio Video Editing
- Graphics Design
- 2D & 3D Animation
- Web Design & Development
- Visual & Special Effects
- Web & Cartoon Animation
- 3D Studio Max
- Auto CAD
- Mastering Multimedia
- Maya Animation

CSC ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

யாழ்.நகர் 2G, ஸ்ரான்லி வீதி, 021-2225677
சாவகச்சேரி கட்டுக்காணி வீதி 021-2270267
நெல்லியடி கொடிகாமம் வீதி 021-2262399
கிளிநொச்சி 45, அம்மன் கோவில் வீதி, ஆனந்தபுரம், 021-2285644
(சி/726)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




*வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரியை வீழ்த்தி மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலய அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.* (ந-86)

# வூஷூ பயிற்சி முகாம் இன்று

## புதியவர்களும் பங்கேற்கலாம்


சீனாவின் பழம்பெரும் தற்காப்புக் கலையான வூஷூ பயிற்சி முகாம் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடக்கவுள்ளதாக யாழ். மாவட்ட வூஷூ சங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து வரும் தேசிய பயிற்றுநரால் இந்தப் பயிற்சி முகாம் நடத்தப்படவுள்ளது. கொழும்பில் நடைபெற உள்ள தேசிய பயிற்சி முகாமுக்கான தெரிவும் இதில் இடம்பெறவுள்ளது.

கடந்த மாதம் நடத்தப்பட்ட பயிற்சி முகாமில் பங்கு கொண்டவர்களும் புதியவர்களும் இந்தப் பயிற்சி முகாமில் பங்கேற்க முடியும்.

ஆண், பெண் இருபாலாருக்குமான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் மாவட்ட அணித் தெரிவும் இடம்பெற உள்ளதால் ஆர்வமுள்ள அனைவரையும் இன்று காலை 8.30 மணிக்கு இந்துக் கல்லூரிக்கு சமூகமளிக்குமாறு யாழ். மாவட்ட வூஷூ சங்கம் அறிவித்துள்ளது.

மாவட்ட அணியில் இடம்பெறும் வீரர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுவோர் கொழும்பில் நடைபெற உள்ள இலங்கை அணிக்கான பயிற்சியில் உள்வாங்கப்படுவர். சீனாவில் இருந்து வரும் பயிற்சியாளர்களால் கொழும்பில் இலங்கை அணிக்கான பயிற்சிகள் வழங்கப்படும். (உ)



மாவட்ட அணியில் இடம்பெறும் வீரர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப் படுவோர் கொழும்பில் நடைபெற உள்ள இலங்கை அணிக்கான பயிற்சியில் உள்வாங்கப் படுவர்.

**குமாரையா ஞாபகார்த்த உதைபந்தாட்டம்:**

# முதலாவது அரையிறுதி ஆட்டம் இன்று

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரனையுடன் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் அமரர் ஈ.கே.குமாரையா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் பி.ப 4 மணிக்கு நடைபெறும் இன்றைய ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியும் ஊரெழு றோயல் அணியும் மோதிக்கொள்ளவுள்ளன.

ஊரெழு றோயல் அணியினர் ஏற்கனவே யாழ். ஐக்கிய விளையாட்டுக் கழகம் மற்றும் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் என்பற்றை வென்றும் யாழ்.பல்கலைக் கழக அணியினரிடம் மூன்றாம் சமநிலை உடைப்பு உதையில் தோற்றும் அரையிறுதிக்குள் நுழைந்திருக்கிறார்கள்.

**இந்த அரையிறுதி ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியும் ஊரெழு றோயல் அணியும் மோதிக்கொள்ளவுள்ளன.**

ஆனைக்கோட்டை யூனியன் அணியினர் முதல் சுற்றில் உரும்பிராய் சென்.மைக்கல்ஸ் அணியையும் இரண்டாம் சுற்றில் அரியாலை ஐக்கியம் வி.க. மூன்றாம் சுற்றில் மயிலங்காடு ஞான முருகன் அணியை வென்று அரையிறுதிக்குள் நுழைந்திருக்கின்றார்கள். இந்த இரு அணிகளும் மோதும் இன்றைய அரையிறுதிப் போட்டி விறுவிறுப்பானதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (130)

# இன்றைய ஆட்டங்கள்

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தின் 93 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படுகின்ற அணிக்கு ஏழு பேர் கொண்டதும் 8 பந்துப் பரிமாற்றங்கள் கொண்டதுமான கிரிக்கெட் சுற்றுத் தொடரின் ''பி'' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் இன்று காலை 8.30 மணிக்கு ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுத்தொடரில் யாழ்.மாவட்டம் முழுவதிலிருந்தும் 41 அணிகள் விளையாடுகின்றன. ஏற்கனவே நடைபெற்ற ''ஏ'' பிரிவு ஆட்டங்களின் அடிப்படையில் மல்லாகம் ஸ்ரீ முருகன் அணி, கரவெட்டி ஞானம்ஸ் அணி, அளவெட்டி மத்தி விளை யாட்டுக் கழகம் என்பன காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன.

இந்தச் சுற்றுத் தொடரில் வெல்லும் அணிக்கு ரூபா 25,000 பணப் பரிசிலும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படவுள்ளதோடு இரண்டாம் இடம் பெறும் அணிக்கு ரூபா 15,000 பணப் பரிசிலும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-130)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 16

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 64 ஆவது நிறைவை முன்னிட்டு கைதடி குமரன் விளையாட்டுக்கழகத்தின் 30ஆவது ஆண்டு நிறைவை ஒட்டியும் வடமாகாண ரீதியிலான மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

7 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத் தில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் கிளிநொச்சி மருத நிலா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து [illegible] ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ந-23)

# வவுனியா மாவட்ட மட்ட தடகளப் போட்டி முடிவுகள்

வவுனியா, ஜூன் 16

வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான தடகளப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

15 வயதுப் பிரிவு

100 மீற்றர்

வி.சிவரஞ்சினி (வ/சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை), பி.கிருஷாந்தினி (ஓமந்தை மத்திய கல்லூரி), என்.புகழநந்தினி (ஓமந்தை மத்திய கல்லூரி).

200 மீற்றர்

வி.சிவரஞ்சினி (வ/சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை), பி.கிருஷாந்தினி (ஓமந்தை மத்திய கல்லூரி), வை.சரண்யா (ஓமந்தை மத்திய கல்லூரி).

400 மீற்றர்

வை.சரண்யா (ஓமந்தை மத்திய கல்லூரி), கே.ஹம்சா (கிடாய்சூரி அ.த.க. பாடசாலை), ஜே.பிரசன்னா(செட்டிக்குளம் மகா வித்தியாலயம்).

உயரம் பாய்தல்

ஆர்.கீர்த்தனா (இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), பி.கீர்த்தனா (செக்கட்டிப்புலவு அ.த.க.பாடசாலை), ஆர்.கீர்த்தனா (சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்), கே.சுஜிதா (கிடாய்சூரி அ.த.க.பாடசாலை), வை.சரண்யா (ஓமந்தை மத்திய கல்லூரி).

நீளம் பாய்தல்

எஸ்.டிலக்ஷி(செக்கட்டிப்புலவு அ.த.க.பாடசாலை), எம்.சௌமியா (அல் அக்ஷா மகாவித்தியாலயம்), என்.புகழநந்தினி (ஓமந்தை மத்திய கல்லூரி).

குண்டு எறிதல்

எம்.கேதீஸ்வரன் (தவசிக்குளம் அ.த.க.பாடசாலை), எ.எல்.டில்ருக்ஷி (அலகல்ல மகா வித்தியாலயம்), என்.ரூசினி (மாதர் பணிக்கர் மருதங்குளம் அ.த.க.பாடசாலை).

தட்டெறிதல்

எம்.நிவேதிகா (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), ரி.நுகா (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), எம்.கேதீஸ்வரி(தவசிக்குளம் அ.த.க.பாடசாலை).

100 மீற்றர்

பி.ஜெயந்தினி (கணேஸ்வரா மகா வித்தியாலயம்), ரி.நாகமயில் (பூம்புகார் கண்ணகி ம.வி.), கே.மாருதி (இறம்பைக்குளம் ம.கல்லூரி)

ஈட்டி எறிதல்

பி.தர்சிகா (சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), வி.மேனகா(செட்டிக்குளம் மகாவித்தியாலயம்), எ.எஸ்.டில்ருக்ஷி(அழகல்ல மகாவித்தியாலயம்).

17 வயதுப்பிரிவு

100 மீற்றர்

பி.ஜெயந்தினி (கணேஸ்வரா மகாவித்தியாலயம்), வி.ஜெனித்தா (சைவப் பிரகாச மகளிர் கல்லூரி), ஆர்.கிருஷாந்தினி (சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை).

400 மீற்றர்

ஆர்.கிருஷாந்தினி(சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை), வி.ஜெனிதா (சைவப் பிரகாச மகளிர் கல்லூரி), ரி.நாகமயில் (பூம்புகார் கண்ணகி ம.வித்தியாலயம்).

800 மீற்றர்

கே.நேர்மதி (பூவரசங்குளம் மகாவித்தியாலயம்), எச்.டி.ஷதூரிகா (மடுகந்தை மகாவித்தியாலயம்), ஆர்.கிருசாந்தினி(சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை).

1500 மீற்றர்

கே.நேர்மதி (பூவரசங்குளம் மகாவித்தியாலயம்), பி.டினோஜா (மாதர் பணிக்கர் மருதங்குளம் அ.த.க.பாடசாலை), எச்.டி.ஷதூரிகா(மடுகந்த மகாவித்தியாலயம்).

100 மீற்றர் தடைதாண்டல்

ரி.துஷ்யந்தினி (புதுக்குளம் மகாவித்தியாலயம்), ஜெ.துஷானி (இறம்பைக்குளம் உயர் மகளிர் பாடசாலை), எஸ்.தர்மேந்திரி (புதுக்குளம் மகாவித்தியாலயம்).

400 மீற்றர் தடைதாண்டல்

ரி.துஷாந்தினி (புதுக்குளம் மகாவித்தியாலயம்), எஸ்.தர்மேந்திரி (புதுக்குளம் மகாவித்தியாலயம்), ரி.தர்சிகா(சின்னடப்பன் பாரதி வித்தி)

நீளம் பாய்தல்

கே.தனுசிகா (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்) ரி.நாகமயில் (பூம்புகார் கண்ணகி வித்தியாலயம்), ஆ.நதீஷா (வீரபுரம் மணி வாசகர் வித்தியாலயம்)

உயரம் பாய்தல்

எஸ்.நிலாந்தனா (தரணிக்குளம் அ.த.க.பாடசாலை), ஆர்.நதீஷா (வீரபுரம் மாணிக்கவாசகர் வித்தியாலம்), எஸ்.ஆதித்தியா (கல்மடு மகாவித்தியாலயம்), எம்.ஜெனிசிகா (கோவில் புதுக்குளம் தமிழ் வித்தியாலயம்).

குண்டெறிதல்

என்.ரிஷாந்தினி (கனகராஜன் குளம் ம.வி), எஸ்.சியாமளா(சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை), எம்.மேனகா (பூவரசங்குளம் மகாவித்தியாலயம்).

தட்டெறிதல்

என்.ரிஷாந்தினி (கனகராஜன் குளம் ம.வித்தியாலயம்), எம்.மேனகா (பூவரசங்குளம் மகாவித்தியாலயம்), எஸ்.கஜரூபி (தரணிக்குளம் கணேஷா வித்தியாலயம்).

ஈட்டி எறிதல்

எம்.மேனகா (பூவரசங்குளம் மகாவித்தியாலயம்), எம்.ஆர்.விஜயசிங்க (ஸ்ரீசுமண மகாவித்தியாலம்), என்.ரிஷாந்தினி(கனகராயன் குளம் மகா வித்தியாலயம்).

19 வயது பிரிவு

100 மீற்றர்

ஜெ.றொஜிற்றோ (இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), எஸ்.சிவரூபி (மாதர் பணிக்கர் மருதங்குளம் அ.த.க.வித்தியாலயம்), என்.டினோ (வீரபுரம் மணிக்கவாசகர் வித்தியாலயம்).

200 மீற்றர்

எம்.சர்மிகாதேவி (சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), ரி.கலைமகள் (சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), எஸ்.சிவரூபி(மாதர் பணிக்கர் மருதங்குளம் அ.த.க.பாடசாலை)

400 மீற்றர்

எம்.சர்மிகாதேவி (சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), ரி.சுதனலோஜினி (கல்மடு மகாவித்தியாலயம்) எஸ்.சிந்துஜா (கல்மடு மகாவித்தியாலயம்.

800 மீற்றர்

ஆர்.சாளினி (புதுக்குளம் மகாவித்தியாலயம், ரி.சுதன லோஜினி(கல்மடு மகாவித்தியாலயம்), வி.அன்ஜினிறோசினி (சைவப்பிரகாச மகளிர் கல்லூரி).

1500 மீற்றர்

ஆர்.சாளினி (புதுக்குளம் மகாவித்தியாலயம், ரி.சுதன லோஜினி(கல்மடு மகா வித்தியாலயம்), ஆர்.கிருஷாந்தினி (நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்). (ந-400)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


பந்தாடும் இத்தாலி
பந்தைத் தேடும் அயர்லாந்து

**பின் களத்திலேயே படுத்துக் கிடந்த அயர்லாந்து வீரர்கள் கையைத் தவிர உடலின் அத்தனை பாகங்களையும் போட்டு தடுத்துவிட்டனர்.**

# நடப்புச் சம்பியன் அசத்தல் வெற்றி

ஐரோப்பிய கிண்ண கால்பந்து தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் ஸ்பெயின் 4-0 என்ற கோல் கணக்கில் அயர்லாந்தை வீழ்த்தி காலிறுதியை நோக்கி முன்னேறி வருகிறது.

ஐரோப்பிய கிண்ண கால்பந்து தொடரில் க்டான்ஸ்க் நடந்த 'சி' பிரிவு ஆட்டத்தில் நடப்பு சம்பியன் ஸ்பெயின், தடுப்பாட்டத்துக்கு பெயர்போன அயர்லாந்து அணியை சந்தித்தது. இத்தாலிக்கு எதிரான கடந்த ஆட்டத்தில் ஸ்பெயினுக்காக களம் இறங்கிய பார்சிலோனா மத்திய வரிசை வீரர் செஸ்க் பெப்ரிகாஸ் இந்த ஆட்டத்தில் முதல் 11 பேர் அணியில் இறக்கப்படவில்லை. செல்சி 'ஸ்டிரைக்கர்' பெர்னான்டோ டார்ரஸ் அவருக்கு பதிலாக களம் இறங்கினார். ராபி கீயேன் தலைமையிலான அயர்லாந்து அணியில் பெரிய மாற்றம் எதுவும் இல்லை. வழக்கம் போல் ஜியோவானி தரபட்டனியின் அணி களம் இறங்கியது.

ஆட்டம் தொடங்கிய 4 ஆவது நிமிடத்தில் ஸ்பெயினின் பெர்னான்டோ டார்ரஸ் மின்னல்வேக கோல் அடித்து அயர்லாந்துக்கு அதிர்ச்சி அளித்தார். இதனைத் தொடர்ந்து ஸ்பெயின் தொடர்ச்சியாக பல வாய்ப்புகளை உருவாக்கியது. ஆனால் பின் களத்திலேயே படுத்துக் கிடந்த அயர்லாந்து வீரர்கள் கையைத் தவிர உடலின் அத்தனை பாகங்களையும் போட்டு தடுத்துவிட்டனர். முதல் பாதி ஆட்டத்தில் ஸ்பெயின் 1-0 என்று முன்னிலை பெற்றது. பெரும்பாலும் பந்தை எதிர் அணி வீரர்களுக்கு விட்டுக் கொடுக்காமல் ஆடும் ஸ்பெயின் இந்த ஆட்டத்தில் முதல்பாதியில் மட்டும் 72 சதவீத நேரம் பந்தை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. பந்தை கொடுத்தாத்தானே விளையாட முடியும் என்பது அயர்லாந்து அணி வீரர்களின் புலம்பல்.

பிற்பாதியில் 49 ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் 2 ஆவது கோலை அடித்தது. ஆன்டரஸ் இனியஸ்டா கொடுத்த 'பாஸை' பெற்ற டேவிட் சில்வா மூன்று அயர்லாந்து தடுப்பாட்ட வீரர்களுக்கு 'டிமிக்கி' கொடுத்து விட்டு மிக அருமையாக கோலாக்கினார். ஸ்பெயின் இரு கோல்கள் முன்னிலை பெற்றது. பிற்பாதியிலும் ஸ்பெயினின் ஆதிக்கமே கடைசி வரை தொடர்ந்தது. அயர்லாந்து வீரர்கள் ராபிகீயேன், காக்ஸ் இருவரும் அவ்வப்போது ஸ்பெயின் 'பெனால்டி ஏரியா' வரை வந்து பார்த்துவிட்டு உடனே திரும்பி விடுவர். ஆட்டத்தின் 69 ஆவது நிமிடத்தில் நடு களத்தில் இருந்த சேவி டார்ரசுக்கு ஒரு அற்புதமான 'பாஸை' கொடுத்தார். இதனையும் டார்ரஸ் மிக நேர்த்தியாகக் கோலாக மாற்றினார். தொடர்ந்து டார்ரசுக்கு மாற்று ஆட்டக்காரராக வந்த செஸ்க் பெப்ரிகாசும் தன் பங்குக்கு ஒரு கோல் அடித்தார். ஆட்ட நேர இறுதியில் ஸ்பெயின் 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 3 புள்ளிகளை தனதாக்கியது. இந்த வெற்றியை தொடர்ந்து ஸ்பெயினின் காலிறுதி சுற்றுக்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது.

இந்தப் பிரிவில் குரோஷியா மற்றும் ஸ்பெயின் அணிகள் தலா 4 புள்ளிகளை பெற்றுள்ளன. இத்தாலி 2 புள்ளிகளையும் பெற்றுள்ளது. அயர்லாந்து புள்ளி எதுவும் எடுக்காமல் டப்ளினுக்கு விமானம் பிடிக்க தயாராக உள்ளது. அடுத்த ஆட்டத்தில் ஸ்பெயின், குரோஷியாவையும் அயர்லாந்து, இத்தாலியையும் எதிர்த்து விளையாட வேண்டும். [5]



# குஷியில் குரோஷியா இக்கட்டில் இத்தாலி

ஐரோப்பிய கால்பந்து தொடரில் இத்தாலி, குரோஷியா அணிகளுக்கிடையே நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. இதன் மூலம் குரோஷிய அணி காலிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

ஐரோப்பிய கிண்ண கால்பந்து தொடரில் 'சி' பிரிவு ஆட்டத்தில் இத்தாலி அணி குரோஷியாவை சந்தித்தது. ஏற்கனவே நடந்த முதல் ஆட்டத்தில் இத்தாலி, ஸ்பெயினிடம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்ததால் 1 புள்ளியை பெற்றிருந்தது. குரோஷியா, அயர்லாந்து அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி 3 புள்ளிகளை ஈட்டியிருந்தது. இந்த ஆட்டம் 1968 ஆம் ஆண்டு சம்பியன் இத்தாலிக்கு மிக முக்கியமான ஆட்டம்.

முதல்பாதியில் இரு அணிகளுக்கும் வாய்ப்பு கிடைத்தாலும் இத்தாலியே முதல் கோல் அடித்தது. ஆட்டத்தின் 39 ஆவது நிமிடத்தில் ஜுவான்டஸ் மிட்பீல்டர் அன்ட்ரூ பிர்லோ 'ப்ரீகிக்' மூலம் இந்தக் கோலை அடித்தார்.

பிற்பாதியில் 60 ஆவது நிமிடத்தில் மரியோ பெலிட்டலி அடித்த அட்டகாசமான பந்து குரோஷியா கோல் கம்பத்திற்கு சற்று மேலே சென்றது. இதனால் 2 ஆவது கோல் விழுவதில் இருந்து குரோஷியா தப்பியது. ஆயினும் விடாமல் போராடிய குரோஷியா 72 ஆவது நிமிடத்தில் பதில் கோல் திருப்பியது. இவான் ஸ்டிரினிக் 'கிராஸ்' செய்த பந்தை மரியோ மான்ட்சூகிக் கோலுக்குள் அடித்தார். இறுதியில் ஆட்டம் 11 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. இத்தாலி தான் விளையாடிய இரண்டு ஆட்டங்களையும் சமநிலையில் முடித்ததால் 2 புள்ளிகளைப் பெற்றுள்ளது. குரோஷியா 2 ஆட்டங்களில் விளையாடி ஒரு வெற்றி ஒரு சமநிலையுடன் 4 புள்ளிகளை பெற்றுள்ளது. அடுத்த ஆட்டத்தில் இத்தாலி, அயர்லாந்தையும் குரோஷியா நடப்பு சம்பியன் ஸ்பெயின் அணியையும் எதிர்கொள்ள வேண்டும். [5]

# காலை வாரிய இந்தியா

ஸ்ரீலங்கா பிரிமியர் லீக் [எஸ்.எல்.பி.எல்.] தொடரில் இந்திய வீரர்களை விளையாட அனுமதிக்குமாறு ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை விடுத்த கோரிக்கையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மீண்டும் நிராகரித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இந்தத் தொடரை நடத்த ஸ்ரீலங்கா கிரிக்கெட் திட்டமிட்டுள்ளது. எஸ்.எல்.பி.எல். தொடரில் விளையாட தனது வீரர்களை அனுமதித்தால், ஏனைய நாடுகளால் ஏற்பாடு செய்யப்படும் 'ரி-20' தொடரிலும் விளையாட அவர்களை அனுமதிக்க வேண்டியிருக்கும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கருதுகிறது.

அத்துடன், இந்திய கிரிக்கெட் அணி எதிர்வரும் மாதங்களில் இறுக்கமான சுற்றுலா அட்டவணையை கொண்டுள்ளது. இலங்கையில் ஒரு நாள் மற்றும் 'ரி-20' சுற்றுத் தொடரில் இந்திய அணி பங்குபற்றவுள்ளது. அதன்பின் சொந்த மண்ணில் நியூஸிலாந்துடன் இரு டெஸ்ட் ஆட்டங்களில் பங்குபற்றவுள்ளது.

"அவர்கள் [ஸ்ரீலங்கா கிரிக்கெட்] எம்மை அணுகினார்கள். ஆனால் எம்மால் எமது வீரர்களை அனுப்ப முடியாதிருக்கும்" என்று இந்திய கிரிக்கெட் சபை அதிகாரியொருவர் கூறியுள்ளார்.


தேசிய அணியில் இடம்பெறாத இந்திய வீரர்களை எஸ்.எல்.பி.எல். தொடரில் சேர்த்துக்கொள்ளும் நம்பிக்கையுடன் ஸ்ரீலங்கா கிரிக்கெட் உள்ளது. எனினும் இந்தத் திட்டத்தையும் ஏற்றுக்கொள்ள இந்திய கிரிக்கெட் சபை தயங்குகிறது. எனினும் இந்த முறை திட்டமிட்டபடி இந்தச் சுற்றுத் தொடரை முன்னெடுக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் அதிகாரியொருவர் கூறினார்.

கடந்த வருடம் இந்தத் தொடரை ஆரம்பிப்பதற்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் திட்டமிட்டது. எனினும், இந்திய வீரர்கள் பங்குபற்றாத நிலையில் அந்தத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டது. எஸ்.எல்.பி.எல். தொடரின் பின்னால் ஐ.பி.எல். முன்னாள் தலைவர் லலித் மோடி இருப்பதாக சந்தேகித்தமையும் இந்த தொடருக்கு ஆதரவளிக்க இந்திய கிரிக்கெட் சபை மறுத்தமைக்கான காரணமாகும். [5]

# ரஜினியின் ரசிகன் சனத்

நான் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் ரசிகன் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் சனத் ஜெயசூர்யா தெரிவித்துள்ளார்.

டெல்லியில் 'டான்ஸ் ரியாலிட்டி ஷோ' ஒன்று நடைபெற உள்ளது. இதில், சினிமா உள்ளிட்ட பல துறைகளிலும் உள்ள பிரபலங்கள் கலந்து கொள்கின்றனர். இலங்கை முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜெயசூர்யாவும் இதில் பங்கேற்கிறார்.



டெல்லி சென்றுள்ள அவர் நடன பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். ஓய்வுக்கு இடையே பேட்டியளித்த ஜெயசூர்யா கூறுகையில், ரஜினிகாந்த் ரசிகர்களில் நானும் ஒருவன். அவர் நடித்துள்ள சில படங்களைப் பார்த்திருக்கிறேன். அவரது நடிப்பும், ஸ்டைலும் எனக்குப் பிடிக்கும். இந்தி சினிமா உலகில் மாதுரி தீட்சித்தை எனக்கு மிகவும் பிடிக்கும்.

இந்தி சினிமாவை பார்க்காத போதும் மாதுரி நடித்த ஒரு படத்தை மட்டும் பார்த்திருக்கிறேன். அவர் சிறந்த முறையில் நடனமாடுவார்.

எனக்கு நடனம் ஆடவே தெரியாது. இப்போதுதான் நடனம் ஆட பயிற்சி எடுக்கிறேன். நடனம் என்பது கடினமான மற்றும் வித்தியாசமான பணியாகும். ரியாலிட்டி ஷோவில் என்னால் இயன்ற அளவுக்கு சிறப்பாக ஆட முயற்சி செய்வேன் என்றும் பயிற்சி வகுப்பை நல்லமுறையில் பயன்படுத்தி வருகிறேன் எனவும் தெரிவித்தார். [5]


ஆக்ரோஷ ஆட்டத்தில் குரேஷியா - இத்தாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேறியது ஜேர்மனி வெளியேறியது நெதர்லாந்து

யூரோ கிண்ண உதைபந்துத் தொடரின் காலிறுதிக்கு, முதல் அணியாக முன்னேறியது ஜேர்மனி. நெதர்லாந்து தொடரில் இருந்து வெளியேறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகள் பங்கேற்கும் யூரோ கிண்ண உதைபந்துத் தொடர் போலந்து மற்றும் உக்ரைனில் நடைபெறுகிறது. இதில் 'குரூப் ஒப் டெத்' என்றழைக்கப்படும் 'பி' பிரிவு லீக்கில் ஜேர்மனி, நெதர்லாந்து அணிகள் மோதின. நெதர்லாந்து அணியில் வான் பெரிஸ் நீக்கப்பட்டு, ஹன்டெல்லர் சேர்க்கப்பட்டார். ஜேர்மனி அணியில் மாற்றம் எதுவும் செய்யப் படவில்லை.

ஆட்டத்தின் தொடக்கத்தில் இருந்தே ஜேர்மனி வீரர்கள் அசத்தினர். 24 ஆவது நிமிடத்தில் ஸ்கீவன்ஸ் டீகர் அடித்த பந்தைப் பெற்ற கோமஸ், அப்படியே கோலாக மாற்ற, ஜேர்மனி அணி முன்னிலை பெற்றது. மீண்டும் இதே கூட்டணி கலக்கியது. இந்த முறை ஸ்கீவன்ஸ்டீகரிடம் இருந்து பந்தைப் பெற்ற கோமஸ் இன்னொரு கோல் அடித்தார். இது இந்தத் தொடரில் இவரது 3 ஆவது கோல். முதல் பாதியில் ஜேர்மனி அணி 2-0 என்று முன்னிலை பெற்றது.





**பதில் கோல்**

இரண்டாவது பாதியில் நெதர்லாந்து வீரர்கள் ஹம்மல், ஸ்னைடர், அர்ஜென் ராபென் ஆகியோர் அடுத்தடுத்து தாக்குதல் தொடுத்தனர். இதற்கு 73 ஆவது நிமிடம் பலன் கிடைத்தது. ஸ்னைடர் கொடுத்த 'பாஸை' பெற்ற ராபின் வான் பெரிஸ், சற்றும் தாமதிக்காமல் கோல் அடித்தார்.

மேலும் ஒரு கோல் அடித்து சமன் செய்ய முயற்சித்த நெதர்லாந்து வீரர்களின் முயற்சிக்கு, ஜேர்மனி அணியினரின் தற்காப்பு ஆட்டம் தடையாக அமைந்தது. முடிவில் ஜேர்மனி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

**மீண்டும் மோசம்**

கடந்த 1988 இல் யூரோ கிண்ணத் தொடரில் கிண்ணம் வென்ற பின்னர், நெதர்லாந்து அணி பெரும்பாலும் முதல் சுற்றில் வெளியேறுவதை வழக்கமாகக் கொண்டுள்ளது. இந்த முறையும் டென்மார்க், ஜேர்மனிக்கு எதிராகத் தோல்வி அடைந்த இந்த அணி, ஏறக்குறைய லீக் சுற்றுடன் வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. லீக் சுற்றுடன் நெதர்லாந்து வெளியேறினாலும், பயிற்சியாளர் பதவியில் பர்ட் வான் மொர்விஜ்க் பதவியில் நீடிப்பார் எனத் தெரிகிறது.

இதுகுறித்து நெதர்லாந்து உதைபந்து அமைப்பின் தலைவர் பெர்ட் வான் ஓஸ்டீவன் கூறுகையில், முக்கிய தொடர்களில் அரையிறுதிக்குத் தகுதி பெற வேண்டும் என்பது தான் எங்களது இலக்கு. இதன் மூலம் சர்வதேச தரவரிசையில் முதல் நான்கு இடத்துக்குள் வந்துவிடலாம். சமீபத்திய தொடர்களில் பெரும்பாலும், இது சரியாக நடந்தது. இப்போது, யூரோ கிண்ணத் தொடரில் லீக் தொடருடன் வெளியேறுவதால், பெரியளவில் எந்தப் பாதிப்பும் வரப்போவதில்லை. இதனால், பயிற்சியாளர் பதவி விலகத் தேவையில்லை என்றார்.

(ங-5)


**தேவை**

தையல் நிலையத்தில் பணிபுரியக்கூடிய அனுபவம் உள்ளவர்களும், தையல் பழக விரும்புபவர்களும் தேவை.

தொடர்பு : 021 2270119

(சி/9326)(6-8-14)

**வெளிவந்து விற்பனையாகிறது**

G.C.E. (A/L) மாணவர்களுக்கான தவணை வினாத்தாள்களும், இறுதி மாதிரி வினாத்தாள்களும் விளக்கமான விடைகளுடன்

தொண்டமனாறு தணு வெளியீடு

பூபாலசிங்கம் புத்தகசாலை

பஸ் நிலையம், யாழ்ப்பாணம்

(சி/731)(6-8-9) வேம்படி சந்தி, யாழ்ப்பாணம்

**BIT Degree** தொடர்ந்து 10 வருடங்களாக BIT பட்டக்கற்கை நெறியில் முன்னணியில்...

Earn IT Degree from University of Colombo

By R.Kumaran-B.Sc. TP: 0776577359

புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

74. சபாபதி லேன், யாழ்ப்பாணம்
பல்கலைக்கழக வீதியிலிருந்து 200 m

MIS BIT Academy

**மாதம் 50,000 ரூபா வருமானத்துடன்...**



**ஹோட்டல் பயிற்சிநெறி & தொழில்வாய்ப்பு**

உணவு, தங்குமிட வசதி இலவசம்!

SkillsMalaysia City & Guilds UEL University of East London aets

பயிற்சிநெறி முடிவில்
University of East London, Skills Malaysia Invite City & Guilds (UK), AETS (Australia) சான்றிதழ்களுடன்.

மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்ரேலியா, சீனாவில் வேலைவாய்ப்பு! (With Work Permit)

- 9ம் வகுப்பு வரையில் படித்த, 18-45 வயதுக்கு இடைப்பட்ட எவரும் இணையலாம்.
- கணவன், மனைவி ஒன்றாகச் செல்ல முடியும்.
- விண்ணப்பித்து ஒரு மாதத்தில் விசாவுடன் பயணம்.
- நேரடியாக மலேசியாவுக்கு அழைத்துச்செல்லப்பட்டு, பயிற்சிநெறி முடியும் வரையில் தொடர்பிலிருப்போம்.

1ம் அணி ஜூலையில் பயணம்!

முதல் 10 பேருக்கு விமானப் பயணச்சீட்டு முற்றிலும் இலவசம்

மலேசிய பிரதிநிதி Ryanஐ நேரில் சந்தித்து அனுமதி பெறுங்கள்

ஜூன் 15, 16 தம்பா ஹொட்டேல், வவுனியா

ஜூன் 17, 18 ஞானம்ஸ் ஹொட்டேல், யாழ்ப்பாணம்
காலை 10 மணி - கருத்தரங்கு
11.00 - 3.00 மணி - Interview & Spot Admission

மட்டு, திருமலை, கொழும்பு விண்ணப்பதாரிகள் வவுனியா கருத்தரங்கில் பங்குபெற்றலாம்!

பெற்றோர் / பாதுகாவலருடன் கலந்துகொள்ளவும்

MEDIA

சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டல் பிரிவு
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 8060 நேரடி: 0773 616 798

6 Month Rapid Diploma In English Grammar & Skill Practice Listening, Speaking, Reading, & Writing

College of Informatics Studies CIS (Affiliated with IIS)

Instructor & Triner:- Mr.S.Maheswaran

Start on 16th June 2012 at 3.00 p.m

K.K.S Road, Inuvil 0777677711

for Students & Employees

(சி/703)

புலமைப்பரிசில் மாணவர்களுக்கான CD விற்பனையாகிறது

சுற்றாடல், கணிதம், தமிழ், பொதுஅறிவு, பாடங்களை உள்ளடக்கிய CD

தெளிவு 2012 வழிகாட்டி

பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ் நிலையம், யாழ்ப்பாணம் வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம்

(சி/732)(6-8-14)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன

| Batch I: 17.06.2012 | Batch II:17.06.2012 | Batch III :18.06.2012 |
|---|---|---|
| 09.00 - 12.00 | 03.00 - 5.00 | 09.00 - 12.00 |

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

Spoken English with Grammar [Quick Learning Course] 1 ½ Months

Diploma In English 2 ½ Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

எமது கல்லூரியினால் நடாத்தப்படும் சர்வதேசப் பரீட்சைகள்

A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)
We guarantee minimum band 5.0 Upwards 2 ½ Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
No.30 1/5, W.A. Silva Mawatha (Above Hotel Cloves), Colombo -06. Tel :0112500207
No.15 2/1, Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna. Tel :021-2224550
No.3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavapuliyankulam, Vavuniya. Tel :024-3245287
Wesley High School Road (Opposit Methodist Church), Kalmunai. Tel :067-2226000
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

**Architectural CAD Centre**
கட்டட பட வரைதல் பயிற்சி

Advance Dip.in Engineering Drawing &
Auto CAD
2D-Drawing & 3D-Modeling

Lecturer By: [D/A]
Cert. in 2D-Drawing & 3D-Modeling in Auto CAD
Open University of Sri Lanka-Nugegoda
Cert. in Auto CAD (2D & 3D Drawing)-(1st Class)
University of Colombo- Sri Lanka 0776873032
Cert. in Auto CAD (2D-3D) (1st Class-Batch Top)
Inf.Tech.Park- Ministry of Rehabilitation.
Dip. in Eng. Drawing & Auto CAD (1st Class)
IIS- International University – Dublin 0719978819

Personal-Group Classes (Colombo-Vavuniya-Jaffna)

OFFER
LAPTOP
TOSHIBA 1ST & 2ND GENE.
FROM Rs56,000
DELL 2ND GENERATION
FROM Rs72,000
குறிப்பு/ கணினி திருத்தம்
சனிக்கிழமைகளில் திருத்தத்திற்காக எமது நிறுவனத்திற்கு எடுத்துவரப்படும் கணினிகளிற்கு 50% கழிவு வழங்கப்படும்

STP Your Partner in IT Solution
149, Kasthuriar Road, Jaffna
Authorized Dealer for TOSHIBA & DELL Hotline: 0212222674


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 17★05★1946 உதிர்வு 17★05★2012

திருமதி
**ஆரோக்கியநாதன் புஸ்பராணி**

உணர்வாலும் உயிராலும்
உளமெங்கும் நிறைந்தீர்
நாம் வாழ நல்வாழ்வை
நமக்காக அளித்தீர்
எம்மோடு நீர் வாழ்ந்து
எமையாக்கி வைத்தீர்!

இதயத்தை இரத்தக் கடலாக்கி
கண்களை கவலைக்குளமாக்கி – உம்
உதயத்தை எமை இழக்க வைத்தீர்
உயிர் முழுதும் உருகுதம்மா
உங்கள் உயிரோவியம் தேடி!

27/9 முதலாம் ஒழுங்கை
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம் [19424][6-8-9]

குடும்பத்தினர்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கம் என்பது
தன்னைத்தானே
சரியாக மதிப்பிட்டுக்
கொள்வதாகும்.
-ஸ்பர்ஜியன்-

வார வசந்தம் 01

உதயன் 16 ஜூன் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

# சிறந்த தலைமைத்துவங்கள்

## சமூக அசைவுக்குப் பங்காற்றும்

■ நடேசு தயாளன்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

ஒருவர் சிறந்த தலைமைத்துவப் பண்பினை வளர்க்க வேண்டுமானால் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**1.நேர்மைத் தன்மை**

தலைவர்களானவர் உயர் ஒழுக்கமுடையவர்களாக விளங்க வேண்டும். இதன் மூலமே ஏனையோரிடையே நம்பிக்கையினைப் பெற்றுக் கொள்ள முடியும். சூழல் நிலைமைகளில் தலைமைத்துவமானது தனது செயல்களுக்காக தானே பொறுப்பேற்கக் கூடியதாக இருக்க வேண்டும். அதாவது தவறுகள் ஏற்படும் நிலைமைகளில் அதனை ஏனையவர்கள் மீது ஊடு கடத்துதலினைத் தவிர்க்க வேண்டும். தனது குழுவினரால் ஆற்றப்படும் தவறான செயல்களுக்கும் தானே பொறுப்பேற்க முன்வர வேண்டும்.

**2. பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட வேண்டும்**

தலைமைத்துவமானது கடினமாக சேவையாற்றுவதுடன் உறுதியான ஒழுங்கு விதிகளையும் பின்பற்றுவதற்குத் தன்னைத் தயார்ப்படுத்த வேண்டும்.

**3. தைரியமாகச் செயற்படும் இயல்பு**

தலைமைத்துவத்தின் பின்னால் ஏனையவர்கள் அணிதிரண்டு செயற்படும்போது தலைமை தாங்குபவர் தைரியமானவராக விளங்குதல் அவசியமாகும். இடர்களை எதிர்கொள்ளும்போது தலைமைத்துவத்தினை வளர்க்க முற்படுபவர் தான் சார்ந்த விடயத்தில் சரியான முறையில் உரத்துக் குரல் கொடுக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

**4.இலக்கினை அடைவதில் கவனமுடையவராக விளங்க வேண்டும்.**

தலைமை தாங்குபவர்கள் தமது இலக்கினை முதன்மைப்படுத்தியவர்களாகவும் அதனை அடைவதற்கான முயற்சியில் ஈடுபடுபவர்களாகவும் இருக்க வேண்டும். அத்தோடு அணியினருக்காக தன்னை அர்ப்பணித்து நிறுவனத்தின் இலக்கினை அடைய வேண்டும்.

**5. அணி அங்கத்தினரின் அபிவிருத்தி**

ஒருவரினால் தனித்து நிறுவனத்தின் இலக்கினை அடைந்து கொள்ள முடியாது என்பதால் தலைமைத்துவ இயல்பினை வளர்க்க விரும்புபவர்கள் தனது அணியினரது ஆற்றல் அபிவிருத்தியில் கூடுதல் கவனம் செலுத்துதல் அவசியமாகும்.

**6. முன்னுரிமைப்படுத்தல்**

சிறந்த தலைமைத்துவ இயல்பினரானவர் தனது விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் இடம்பெற வேண்டிய பல விடயங்களில் எதனை முதலில் நிறைவேற்ற வேண்டுமோ அதற்கு முன்னுரிமை வழங்குதல் அவசியமாகும். உயர்ந்த சாத்தியமான வழிமுறையூடாக முன்னுரிமை அடிப்படையில் செயற்பட வேண்டும்.

**7. வீண் பெருமை கொள்ளலைத் தவிர்த்தல்**

தலைமைத்துவத்தில் ஈடுபடுவதனூடாக கிடைக்கின்ற பெருமையினை தனக்குரியதாக ஆக்கிப் பெருமை தேடுதலில் இருந்து விடுபட்டு அனைவரதும் கூட்டு முயற்சியினூடாகவே இலக்கு அடையப்பட்டது என்ற மனப்பாங்கினை வளர்க்க வேண்டும்.

தலைமைத்துவ இயல்பினை வளர்த்தல் என்பது நீண்ட காலச் செயலொழுங்காகும். சிலர் இத்தகைய ஆற்றல்களோடு பிறக்கின்றார்கள். அத்தகையவர்கள் தலைமைத்துவத்தை வேகமாக வளர்த்துக் கொள்கிறார்கள். தலைமைத்துவம் என்பது ஒழுங்கமைக்கப்பட்ட நடத்தையினூடாக திறனாகக் கட்டியெழுப்பப்படக் கூடியது. எனவே தலைமைத்துவ இயல்பு என்பது எல்லோருக்கும் சாத்தியமானதே. இப்பொழுது கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தித் தலைமைத்துவ



இயல்பினைக் கட்டியெழுப்புவதனூடாகச் சிறந்த தலைவர்களாக மிளிர முடியும்.

வெற்றிகரமான தலைமைத்துவமானது பின்வரும் இயல்புடையதாக விளங்குமென (KOUZES & POSNER) (1987) குறிப்பிடுகின்றார்.

1. செயற்பாடுகளைச் சவால்களாக்குதல்
2. தன்னைப் பின்பற்றுவோருக்கு அல்லது சேர்ந்தியங்குவோருக்கு நோக்கத்தினைத் தெளிவாக்கல்.
3. சேர்ந்தியங்குபவர்களுக்கு சந்தர்ப்பங்களையும் வாய்ப்புக்களையும் வழங்குதல்.
4. ஏனையோருக்கு முன்மாதிரியாகச் செயற்படல்.
5. கிடைக்கின்ற பெருமைகளை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளல்.

பாடசாலை என்ற சமூக நிறுவனத்தில் தலைமைத்துவம் என்ற விடயத்தினை நோக்கின் தலைமைத்துவ வகிபாகமானது அதிபரின் செயலாற்றலாகவேயுள்ளது. பாடசாலைக் கட்டமைப்பில் அதிபரானவர் முதல்தர முகாமையாளராக விளங்குகின்றார். சிறந்த தலைவர்களானவர்கள் எப்போதும் சிறந்த முன்மாதிரியாக விளங்குவார். அதிபரானவர் நேர் மனப்பாங்கு உடையவராக தனது நாளாந்தச் செயற்பாடுகளில் இருக்க வேண்டும். சிறந்த தலைமைத்துவம் மிக்க அதிபரானவர் தனது வகிபாகத்தில் சமநிலையுடையவராக இருக்க வேண்டும் என்பதோடு சிறந்த பங்குபற்று தலை வழங்குபவராகவும் இருக்க வேண்டும். வினைத்திறனான பாடசாலைத் தலைமைத்துவமானது ஆசிரியர்களுக்கு, பெற்றோர்களுக்கு மாணவர்களுக்கு உதவுமொன்றாக விளங்க வேண்டும். சிறந்த தலைமைத்துவமானது சஞ்சலமான சந்தர்ப்பங்களிலும் சலனமின்றிச் செயற்படக் கூடியதாக இருக்க வேண்டும். தனது நாளாந்தச் செயலொழுங்கில் செயற்படுவதற்கு முன்னர் சிந்திப்பவராகவும் தேவையான சந்தர்ப்பங்களில் இடைவெளிகளை நிரப்புபவராகவும் இருக்க வேண்டும்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாடசாலை அதிபர்களது செயற்பாடுகளானது மாணவர்களது ஒழுக்கம் தொடர்பிலான தலைமைத்துவத்தினை வழங்குவதாயுள்ளது. ஆசிரியர்களானவர்கள் தலைமைத்துவமானது எதனை எதிர்பார்க்கின்றது என்பது தொடர்பிலான தெளிவு பெற்றவர்களாக விளங்க வேண்டும் என்பது அவசியமானதாகும். அப்பொழுதுதான் தலைமைத்துவம் தம்மை எவ்வாறு கையாளும் என்பது தொடர்பான விழிப்புணர்வுடையவர்களாக ஆசிரியர்கள் விளங்குவார்கள்.

வினைத்திறனான பாடசாலைத் தலைமைத்துவமானது ஆற்றலுடைய ஆசிரியர்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும். இங்கு பாடசாலைக்குப் பொருத்தமான ஆளணியினரைத் திரட்டுவதில் அதிக கவனம் செலுத்துவதாக இருக்கும். தவறான பொருத்தமற்ற ஆளணியினர் பாடசாலையில் இணைவார்களாயின் பாடசாலைச் செயற்பாடுகளில் இடையூறுகள் உண்டாகும். பொருத்தமான ஆளணியினர் கிடைப்பார்களாயின் தலைமைத்துவத்தின் செயற்பாடுகள் இலகுபடுத்தப்படும்.

> பாடசாலைக் கட்டமைப்பில் அதிபரானவர் முதல்தர முகாமையாளராக விளங்குகின்றார். சிறந்த தலைவர்களானவர்கள் எப்போதும் சிறந்த முன்மாதிரியாக விளங்குவர். அதிபரானவர் நேர் மனப்பாங்கு உடையவராக தனது நாளாந்தச் செயற்பாடுகளில் இருக்கவேண்டும்.

சிறந்த பாடசாலைத் தலைமைத்துவமானது பெற்றோர் சமூகம் தொடர்பான, சிறப்பான தொடர்புகளைக் கொண்டிருக்கும். இதற்காக நம்பகமான பெற்றோர், சமூகத் தொடர்புகள் கட்டியெழுப்பப்படும். வினைத்திறனான கல்வி முகாமைத்துவமானது, கற்றல், கற்பித்தலில் மேம்பாட்டினை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கும். அனைத்து விதமான கல்வித்துறைசார் மறுசீரமைப்புக்களும் கற்றல் கற்பித்தலினை முன்னேற்றுவதற்கான முன் முயற்சிகளைக் கொண்டிருக்கும் எனினும் இந்த இலக்கினை எவ்வாறு அடைந்து கொள்ளுதல் என்பதிலேயே வேறுபாடுகள் உள்ளன. இந்த நிலையிலேயே தலைமைத்துவ வகிபாகமானது முக்கியத்துவம் உடையதாக மாறியுள்ளது.

வகுப்பறைக்குப் பொருத்தமான தலைமைத்துவத்தை வழங்காத ஆசிரியர், ஆசிரியருக்குப் பொருத்தமான தலைமைத்துவத்தை வழங்காத அதிபர், அதிபருக்கு பொருத்தமான தலைமைத்துவத்தை வழங்காத கல்வி நிர்வாகிகள், கல்வி நிர்வாகத்திற்குப் பொருத்தமான தலைமைத்துவத்தை வழங்காத கட்டமைப்புக்கள் கல்வியின் பண்புத்தர விருத்தியின் வீழ்ச்சிக்குப் பங்காற்றும் அலகுகளாகவே கொள்ளப்படவேண்டும்.

இங்கு பொருத்தமற்ற தலைமைத்துவங்களால் ஏனையவர்கள் குற்றவாளிகளாக்கப்படும் நிலை தவிர்க்கப்பட வேண்டும். தமது விருப்பு வெறுப்புக்கேற்ப குற்றச்சாட்டுக்களை, காழ்ப்புணர்ச்சிகளை வெளிப்படுத்தும் தலைமைத்துவ இயல்புள்ளவர்கள் புறக்கணிக்கப்படுதல் அவசியமாகும். தலைமைத்துவத் திறன்கள், ஆற்றல்கள் உள்ளவர்கள் இனங்காணப்பட வேண்டும். தலைமைத்துவம் தொடர்பான புதிய எண்ணக்கருக்கள் சிந்தனைகள் உள்வாங்கப்பட வேண்டும். மாற்றங்களுக்குத் தங்களைப் பொருத்திக் கொள்ளச் செய்வதில் ஒவ்வொருவரது கவனமும் திசைதிருப்பப்படவேண்டும். எந்தத் தடைகளையும் சவாலாக ஏற்று வெற்றி கொள்வதில் தம்மை அர்ப்பணிப்புள்ளவர்களாக மாற்றுவதோடு தெளிவான தூர நோக்குடையவர்களாகவும் தம்மை மாற்றுதல் தலைமைத்துவ இயல்பின் விருத்திக்கு உதவுவதாக அமையும் என்பதோடு சிறந்த தலைமைத்துவங்கள் உருவாக்கப்படுமிடத்து சமூகத்தின் மேல் நோக்கிய அசைவுக்கு அது பங்காற்றுவதாகவும் இருக்கும். ✱


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைரேகைகளின் பலன்கள் 12

**புத்திரேகைகள் குறித்த விவரங்கள் மேலும் தொடர்கின்றன.**


புத்திரேகை எந்தக் கிரகச் சார்பில் வளைந்திருக்கிறதோ அந்தக் கிரக ஆட்சியல் செல்லும்.

11. புத்திரேகை வில்போல் வளைந்திருந்தால் கற்பனா சக்திமிகுந்தவர்களாகவும், அதே சமயம் அனுபவசித்திக்கான வழியில் பாடுபடுபவராகவும் இருப்பர்.




12. புத்திரேகை சிறுத்திருந்தால் எதிலும் மனமற்றவர் என்பதைக் குறிக்கும். மனோ தர்மம் ஒரு முடிவிலிருப்பதால், அந்தக் கால அளவில் ஆயுள் முடிவையும் குறிக்கும். புத்திரேகையின் இறுதி சனிமேட்டை நோக்கித் திரும்பியிருப்பதால், ஆரோக்கியத்தைக் கெடுத்து நோய்க்குட்படுத்தி முடிவைக் கொடுக்கும்.

13. புத்திரேகை மேல் நோக்கி சனி மேட்டில் குஞ்சம் போல் இறுதியும் தோன்றுமாயின், மனோதர்மம் படிப்படியாக ஒடுங்கி தேகத்தில் ஒரு அதிர்ச்சியையுண்டாக்கி பக்கவாத நோயைக் கொடுக்கும்.








14. புத்திரேகை சூரிய மேட்டை நோக்கித் திரும்பியிருந்தால், அந்தக் கிரகத்துக்குள்ள நன்மைகள் உண்டாகும். புத்திரேகை சுபாவமான பாதையின்றும் விலகிக் கிரகச் சார்பில் செல்வதனால் அது பலக்குறைவே.

15. புத்திரேகை இருதய ரேகையைத் தொட்டுக் கொண்டிருக்குமாயின், ஒருவர் தம் தீர்மானத்துக்கு மிஞ்சிய உணர்வைக் குறிப்பதாகும். அதாவது குற்றமென்று அறிந்திருந்தும், அதைச் செய்து அதன் பலனை அனுபவித்தல், தன்னடக்கத்தையிழந்து இச்சை வழிப்பட்டு ஆவேசத்தால் ஒரு காரியத்தில் புகுவதாகும். இது மனத்தின் பலவீனத்தைக் குறிக்கும்.




16. புத்திரேகை இருதய ரேகையைக் கடந்து சூரிய மேட்டுக்குச் செல்லுமாயின், இருதயம் ஒருவிதச் சிக்கலுக்குட்பட்டும், மனம் சமாதானமற்ற நிலைமையிலும் திகைப்பைக் கொடுக்கும்.

இது ரேகையின் சந்திப்பில் ஒரு நட்சத்திரக்குறி காணப்படின் அந்தக் கால அளவு கடுமையான ஆபத்தைக் குறிக்கும்.

17. புத்திரேகை புதன் மேட்டை நோக்கித் திரும்பியிருந்தால் பணம் சம்பாதிப்பதில் புத்திக் கூர்மையைக் காட்டும். சம்பாதிப்பதில், நியாயம் அநியாயம் பார்க்க மாட்டார். பொருள் சேகரிப்பதே பிரதானமாயிருப்பர்.

18. புதன் மேட்டில் மூன்று அல்லது நான்கு சிறு ரேகைகள் காணப்படுவதோடு புத்திரேகையின் இறுதி செவ்வாய் மேட்டை நோக்கித் திரும்பியிருந்தால் வைத்தியத் தொழிலில் பிரசித்தி பெறுவர். இதனால் பெருமிதமாய்ப் பொருளும் சேகரிப்பர்.

19. புத்திரேகை செவ்வாய் மேட்டில் நேரே சென்றிருந்தால், நல்ல விவேகமுள்ளவர் என்பதைக் குறிக்கும். செவ்வாய் மேடின்றித் தணிந்தால் அதைரியப்படுவர். செவ்வாய் மேட்டுக்குள்ள அரிய குணங்களெல்லாம் கால அளவில் அமையும்.

(தொடரும்)

# மீனவர் பிரச்சினைக்கு வழிதான் என்ன?

குருஸ், தமிழகத்திலிருந்து

மீனவர் பிரச்சினை என்பது கடலும் கடல் சார்ந்ததுமாகப் பார்க்கப்படாமல், நாடும் நாடுகள் கடந்ததுமாகப் பார்க்கப்படுகிறது. எனவேதான் அது தீர்க்க முடியாத சிக்கலாகவும் இருக்கிறது. மொழியால், இனத்தால், நிலப்பரப்பால் வேறுபட்டு இருந்தாலும், இலங்கை மீனவர்களும், தமிழக மீனவர்களும் அடிப்படையில் மீனவர்கள்தான். அவர்களுக்கு கடல் பற்றிய புரிதல் உண்டு. மீன் பிடித் தொழிலில் உள்ள நுட்பங்கள், கஷ்ட நஷ்டங்கள் குறித்த அறிதல் உண்டு.



மொழியால், இனத்தால், நிலப்பரப்பால் வேறுபட்டு இருந்தாலும், இலங்கை மீனவர்களும், தமிழக மீனவர்களும் அடிப்படையில் மீனவர்கள்தான்.

கச்சதீவு அந்தோணியார் கோயில் திருவிழாவில் தமிழக மீனவர்களும் இலங்கை மீனவர்களும் கட்டித் தழுவி அன்பு பாராட்டும் காட்சிகளைக் காணலாம். ஆனால் இந்த மீனவர்களின் வாழ்க்கையையே அறியாத சிங்களக் கடற்படை, இந்தியக் கடலோரக் காவல்படை அதிகாரிகள், இருநாட்டு அரசுகள் தான் பிரச்சினையை மேலும் சிக்கலாக்குகின்றன. வடமேற்கு இலங்கைக்கும் கச்சதீவுக்கும் இடைப்பட்ட பூங்கொடித் தீவு, நெடுந்தீவு போன்ற பகுதிகளில்தான் மீன்வளம் அதிகம். தமிழக கடல் எல்லைக்குள் நீர்ப்பரப்பு உண்டே தவிர மீன்வளம் இல்லை. மீன் பிடிக்க வேண்டும் என்றால், கச்சதீவைத் தாண்டுவதைத் தவிர, தமிழக மீனவர்களுக்கு வேறு வழி இல்லை.

கடல் பரப்பை எல்லை போட்டுப் பிரிப்பதை விட , மீன் வளத்தை எப்படி இரு நாட்டு மீனவர்களும் பங்கிட்டுக்கொள்வது என்பதுதான் முக்கியம். இராமேஸ்வரத்தில் நாட்டுப் படகு மீனவர்களுக்கும் விசைப் படகு மீனவர்களுக்கும் இடையில் எந்தெந்த நாள்களில் மீன் பிடிக்கச் செல்லலாம் என்ற ஒப்பந்தம் இருக்கிறது. அதைப் போல இலங்கை மீனவர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் இடையில் புரிதலும் ஒப்பந்தமும் ஏற்பட வேண்டியது அவசியம்.

ஆனால் விடுதலைப் புலிகள் இருந்த காலம் வரை தமிழக மீனவர்களைக் கடற்புலிகளாகவே கருதி தாக்குதல் தொடுத்தது இலங்கை அரசு. இப்போது புலிகள் இல்லாத காலத்திலும் அவர்களுக்குப் புலி அச்சம் போகவில்லை. [illegible] களைக் கண்மூடித்தனமாகத் தாக்குவதும் சுட்டுத்தள்ளுவதும் எந்தத் தார்மீக நெறிகளிலும் இல்லை. மீன் என்பது எப்போதும் வலையில் வந்து விழாது. இரவில் வலை போட்டுக் கண் அசந்துவிடுவார்கள் மீனவர்கள். காலையில் படகு இந்திய எல்லையைத் தாண்டிவிடும். படகு திசைமாறிப் போவது என்பது காற்று, தட்ப வெப்ப நிலை, நீரோட்டங்கள் எல்லாவற்றையும் பொறுத்தது.

இதையெல்லாம் புரிந்து கொள்ள வேண்டும் என்றால், ஒருவர் மீனவர் வாழ்க்கையைப் பற்றி புரிந்தவராக இருக்க வேண்டும் என்பதைத்தான் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

ஆனால், இதையெல்லாம் புரிந்து கொள்ளாதவர்கள்தான் அதிகாரிகளாகவும் அரசியல்வாதிகளாகவும் இருக்கிறார்கள். ஏதோ சிங்களக் கடற்படை மட்டும் தான் அநியாயம் செய்கிறது என்று இல்லை. இந்தியக் கடற்படை செய்யும் அட்டூழியம் அதைவிட அதிகம்.

கொலை செய்வது இல்லையே தவிர, மீனவர்களைத் தாக்குவது, மீன்பிடிப் பொருள்களைச் சேதப்படுத்துவது என எல்லா அட்டூழியங்களையும் இந்தியக் கடற்படையும் செய்கிறது. ஒரு தமிழக மீனவருக்கு எப்படி சிங்களம் பேசும் இலங்கைக் கடற்படை அதிகாரி அந்நியரோ, அதே போலத் தமிழ் தெரியாத வட மாநில இந்தியக் கடலோரப் படை அதிகாரியும் அந்நியராகத்தான் இருக்கிறார்.

சமீபத்தில் கச்சதீவைச் சுற்றிலும் எண்ணெய் வளங்கள் இருப்பதாக கண்டுபிடித்து உள்ளனர். ஏற்கனவே எண்ணெய் அரசியலால் அரபு நாடுகள் என்னென்ன பிரச்சினைகளைச் சந்திக்கின்றன என்பது நமக்குத் தெரியும். கச்சதீவிலும் அப்படி ஒரு ஆதிக்கப் போட்டி வரும்.

அந்தப் போட்டி எத்தகைய அழிவைக் கொடுக்கப்போகிறதோ தெரியவில்லை. அதற்கு முன், தமிழக மீனவர்கள் இலங்கை மீனவர்கள், இந்திய அரசு, இலங்கை அரசு என நான்கு தரப்பினரும் அமர்ந்து பேசி புரிதலுக்கு வருவதுதான் ஒரே தீர்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபத்த நாயனார்



ஆயினும் தமது தலை மீன் அளிக்கும் சீலத்தில் தவறாதிருந்தார். இத்தகைய அதிபத்தரின் தலையாய அன்பெனும் ஆரமுதம் அருந்தத் திருவுளம் பற்றினர் ஆலமுண்ட பெருமான்.

அதிபத்த நாயனார் விக்கிரகம் ஒரு நாள் ஒரு மீனுக்குப் பதிலாக மீனுறுப்பெல்லாம் அமைந்த

அதிபத்த நாயனார் 63 நாயன்மார்களுள் ஒருவர். சோழ நாட்டின் துறைமுகமான நாகபட்டினம் நகரில் நுழைபாடியிலே பரதவர் வாழ்ந்தனர். அந்த பரதவர் குலத்து தலைவரரக இருந்தவர் அதிபத்தர். அவர் சிவபெருமானிடத்தே மிகுந்த பக்தியுடையவர். நாள்தோறும் பிடிபடும் மீன்களுள் தலையாய ஒரு மீனை சிவனுக்கு என்று கடலில் விடுவது அவர்தம் வழக்கம்.

ஒரு நாளில் ஒரு மீனே பிடிபடினும் அம்மீனைச் சிவனடிக்கென்று விடுவதை அவர் விடாது செய்து வந்தார். இப்படி அநேக நாள்கள் ஒரு மீனே பிடிபட அவரை வறுமை பீடித்தது. சுற்றத்தவர் உணவின்றி வருந்தினர். அப்பொழுதும் தாம் வருந்தாது தம் பணியினை மகிழ்வோடு செய்து வந்தார். இப்படியே தொடர்ந்து நாளெல்லாம் நிகழ்ந்தால் அவரும் பசியால் தளர்ந்தார்.

அற்புதப் படைப்பொன்று பிடிபட்டது. அது மணிகள் பதித்த பொன்மீன். அம்மீன் கடலில் உதிக்கும் சூரியன்போல் கரையில் இழுத்த வலையிலே ஒளிர்ந்தது. வலைஞர் அதிசயமிகுதியோடு மீன் ஒன்று பிடித்தோம் என்று அதிபத்தரிடம் கூறினார். அதிபத்தர் உலகம் யாவும் பெறும் என்று மதிக்கத்தக்க அம்மீனைப் பார்த்து மகிழ்ந்தார்.

இப்பொன்மீன் என்னை ஆளுடைய நாயகனின் பொற்கழல் சேர்க என்று அலைமீது விட்டார். பொருளை முதலெனக் கொள்ளும் இவ்வுலகிலே பொருள் பற்றை முற்றும் துறந்த அதிபத்தரின் முன் இறைவன் ஆகாயத்திலே தோன்றினார். அதிபத்தர் சிரங்குவித்து வணங்கி நின்றார். அவரைச் சிவலோகத்திற் சிறப்புற்றிருக்கும் வண்ணம் அருளினார் சிவபெருமான்.



கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ''மழலையர் நேரம்'' நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களின் இசையும் அசைவும் மற்றும் குழுப்பாடல் நிகழ்வுகள் நடைபெற்றன.

# லியொனார்டோ டாவின்சி



லியொனார்டோ டா வின்சி ஒரு புகழ் பெற்ற இத்தாலிய மறுமலர்ச்சிக் கட்டடக் கலைஞரும், கண்டுபிடிப்பாளரும், பொறியியலாளரும், சிற்பியும், ஓவியரும் ஆவார். ஒரு பல்துறை மேதையாகக் கருதப்பட்டவர்.


குறிப்பாக இவரது, சிறப்பான ஓவியங்களுக்காகப் பரவலாக அறியப்பட்டவர். ''கடைசி விருந்து'' ''மோனா லிசா'' போன்ற ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவை. உரிய காலத்துக்கு மிக முன்னதாகவே செய்யப்பட்ட பல கண்டுபடிப்புக்கள் தொடர்பிலும் இவர் பெயர் பெற்றவர். எனினும் இவரது காலத்தில் இவை எதுவும் வெளியிடப்படவில்லை.

அத்துடன் இவர், உடற்கூற்றியல், ஒளியியல் மற்றும் குடிசார் பொறியியல் துறைகளின் வளர்ச்சியிலும் பெரும்பங்கு ஆற்றியுள்ளார்.

# புத்திசாலி ரம்பி!

ஆலந்தூரில் ரம்பி என்றொரு சிறுவன் இருந்தான். அவன் மிகவும் புத்திசாலி; தைரியசாலியும்கூட. ஒரு நாள் அவன் பாடசாலை விடுமுறைக்கு பக்கத்து ஊரில் இருக்கும் தன் பாட்டி வீட்டிற்கு செல்ல ஆசைப்பட்டான். அவன் தந்தை அவனை தனியாக பாட்டியின் ஊருக்கு அனுப்பி வைக்க ஆசைப்பட்டார். ஆனால், ரம்பியின் அம்மாவுக்கு அது சிறிதும் பிடிக்கவில்லை. என் பிள்ளையைத் தனியே அனுப்பமாட்டேன், என்று கூறி அடம் பிடித்தாள்.

என் மகன் தைரியக்காரன். அவன் எந்த எதிர்ப்பையும் சமாளித்துவிடும் திறமை படைத்தவன். வீணாக பயப்படாதே, என்று தைரியம் கூறினார் தந்தை. மகனுக்கு கட்டுச் சோறு கட்டிக் கொடுத்து பக்கத்தூருக்கு அனுப்பி வைத்தனர். ரம்பியும் வெகு பத்திரமாக தன் பாட்டி வீட்டுக்கு போய் சேர்ந்தான். பாட்டி பேரனை இரண்டு மூன்று நாள்கள் தன் வீட்டில் வைத்திருந்தாள்.



பிறகு அவனை பெற்றோரிடம் திருப்பி அனுப்பி வைத்தாள். திரும்பிச் செல்லும் தன் பேரனுக்கு காதில் ஒரு தங்க கடுக்கனைப் போட்டுவிட்டாள். பேரனும் பாட்டியிடம் சொல்லிக் கொண்டு தன் பெற்றோரிடம் புறப்பட்டான். பாதி தூரம் நடந்து வந்ததும் அவனுக்குத் தண்ணீர் தாகம் எடுத்தது. தூரத்தில் ஒரு சிறிய கிணறு தெரிந்தது. உடனே அந்தக் கிணற்றிலிருந்து எப்படி நீர் இறைப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தான்.


அந்த நேரத்தில் அந்த வழியாக ஒரு முரடன் வந்தான். அவன் ஒரு திருடன். அவன் தனியாக வந்த ரம்பியைப் பார்த்தான். அவன் காதில் தங்கக் கடுக்கன் இருப்பதையும் பார்த்தான். உடனே அதை அபகரிக்க முடிவு செய்தான். தன் காதில் இருக்கும் கடுக்கனையே திருடன் விடாமல் பார்ப்பதை ரம்பி கவனித்தான். தன்னை அடித்துப் போட்டுவிட்டோ அல்லது கொன்று விட்டோ தனது காதுக் கடுக்கனை திருடன் கொண்டு போய்விடுவான் என்று ரம்பிக்கு நன்கு புரிந்தது. மறு நிமிடம் ஏதோ யோசித்தான். மிகுந்த பயத்துடன் அழுவது போல அழத் தொடங்கினான். சிறுவன் கிணற்றருகில் நின்றதையும், கிணற்றை எட்டிப் பார்த்ததையும், பின்பு திடீரென அழுவதையும் பார்த்த திருடன் ஒரு நிமிடம் விழித்தான். தம்பி ஏன் இப்போது நீ அழுகிறாய்? என்று கேட்டான்.

அண்ணே! என் பாட்டி எனக்கு இந்த ஒரு பவுண் தங்க கடுக்கனையும், ஐந்து பவுண் சங்கிலியையும் போட்டு விட்டார். நான் தண்ணீர் தாகம் எடுத்ததால் இந்த கிணற்றடிக்கு வந்தேன். கிணற்றில் நீர் இருக்கிறதா என எட்டிப் பார்த்தேன். அப்போது என் சங்கிலி கழன்று கிணற்றுக்குள் விழுந்துவிட்டது. அதனை எடுக்காமல் வீட்டிற்கு திரும்பினால் என் அப்பா என்னைக் கொன்றே விடுவார், என்று கூறி அழுதான். இதைக் கேட்ட திருடனின் மனம் ஏதோ திட்டம் இட்டது. ஒரு பவுண் கடுக்கனை விட ஐந்து பவுண் சங்கிலி மிகவும் விலையுயர்ந்ததல்லவா? எனவே, அதனை கிணற்றுக்குள் இறங்கி தேடி எடுக்க திருடன் முடிவு செய்தான். தம்பி! நீ அழாதே! இதோ கிணற்றுக்குள் இறங்கி உன் சங்கிலியை எடுத்து வருகிறேன், என்று கூறினான்.

மறுநிமிடம் கிணற்றுக்குள் இறங்கினான். இதைக்கண்டதும், சிறுவன் அந்த இடத்தை விட்டு சிட்டாக பறந்தோடி விட்டான். திருடன் கிணற்றுக்குள் சங்கிலியை தேடோ தேடெனத் தேடிக் கொண்டிருந்தான். அதற்குள் ரம்பி தன் ஊருக்குள் ஓடி வந்துவிட்டான். தன் வீட்டிற்குச் சென்று பெற்றோரிடம் நடந்ததைக் கூறினான். பெற்றோர் அவனது சாமர்த்தியத்தைப் பெரிதும் புகழ்ந்தனர். ஆபத்து நேரத்தில் பயந்து நடுங்கி அழாமல் சாமர்த்தியமாகவும், தைரியமாகவும், செயல்பட்ட ரம்பியை ஊரே புகழ்ந்தது.

சிறுவர்களே! எதிர்பாராமல் நமக்கு ஆபத்து வருவது இயற்கை. ஆனால், அந்த ஆபத்து நேரத்தில் அஞ்சாமல் அதை எதிர்க்கொண்டு சமாளித்து வெல்ல வேண்டும். அதுதான் நல்ல திறமை. அதை விட்டு விட்டு பயந்து நடுங்கி அழக் கூடாது. புரிகிறதா?


# தோமஸ் அல்வா எடிசன்



தோமஸ் அல்வா எடிசன் ஒரு அமெரிக்கக்கண்டுபிடிப்பாளரும், தொழிலதிபரும் ஆவார். இவர் பல முக்கியமான சாதனங்களை உருவாக்கினார். ''மென்லோ பூங்காவின் மந்திரவாதி'' பெரும்படித் தயாரிப்புக் கொள்கையைக் கண்டு பிடிப்புக்களின் உருவாக்கத்துக்குப் பயன்படுத்திய முதல் கண்டுபிடிப்பாளர்களுள் ஒருவர். 1880 இல் எடிசன் அறிவியல் சார்ந்த பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தார். இது 1900 ஆவது ஆண்டில் அறிவியல் முன்னேற்றத்துக்கான அமெரிக்கக் கழகத்தின் பத்திரிகை ஆனது.

தனது பெயரில், சாதனை அளவான 1093 உரிமங்களைப் பதிவு செய்த எடிசன், பெரிமளவு கண்டுபிடிப்புக்களைச் செய்தவர்களுள் ஒருவராகக் கருதப்படுகிறார். இவற்றுள் பெரும்பாலானவை இவரால் புதிதாக உண்டுபண்ணப்பட்டவை அல்லது முன்னைய உரிமங்களில் ஏற்படுத்திய சீரமைப்புக்களாகும். இவையும் பெரும்பாலும் இவரது பெருமளவிலான ஊழியர்களால் செய்யப்பட்டவை. இக்கண்டு பிடிப்புக்களுக்கான பெருமையில் மற்றவர்களுக்குரிய பங்கைக் கொடுக்காதமைக்காக எடிசன் அடிக்கடி விமர்சிக்கப்பட்டார். இருந்தாலும், எடிசன் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி உள்ளிட்ட பல நாடுகளில் உரிமங்களைப் பெற்றார். எடிசன் நம்பிக்கை நிதியம் எனப் பொதுவாக அறியப்பட்ட, ஒன்பது முதன்மையான திரைப்படக் கலையகங்களின் கூட்டமைப்பான அசையும் பட உரிமக் கம்பனியையும் ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிப்பிக்குள் முத்து உருவாகும் விந்தை!



அருணா தர்மலிங்கம்
வந்தாறுமூலை

முத்து (Pearl) என்றதும் எமக்கு முதலில் ஞாபகத்துக்கு வருவது அரச பரம்பரையினரையே. ஏனெனில் புராதன காலத்தில் வாழ்ந்த சாதாரண மக்கள் முத்தை தமது அணிகலன்களிலொன்றாகத் தெரிவு செய்ய முடியாத நிலைமை நீடித்தது. இதன் பெறுமதி உச்சக்கட்டத்தில் இருந்தமையினால் மகாராணி, இளவரசி, சீமாட்டி போன்றவர்களே முத்துக்கள் பதித்த நகைகளை அணிந்து வந்தனர் என்பது கண்கூடு.

விலையுயர்ந்த இந்த முத்துக்களை முத்துக்குளித்தல் மூலமே பெற வேண்டியுள்ளது.

ஏலவே ஆதியில் முத்துக்குளித்த நடைமுறை, முத்துக்களின் தாற்பரியம், முத்து கிடைக்கும் பிரதேசங்கள், செயற்கை முத்துக்களின் பரிணாமம் என்பன பற்றி விரிவாக ஆராய்வது இங்கு உசிதம் ஆகும்.

கடலில் காணப்படும் முத்து சிப்பியினுள் மிகச் சிறிய திண்மப் பொருளொன்று எதேச்சையாகப் புகுந்து கொண்டால் உயிருள்ள அச்சிப்பி தன் தோல் அடுக்காகிய எப்பிதீலியம் என்னும் படலத்தால் அதை நன்கு பொதிகிறது. நாளடைவில் அச்சிப்பியில் சுரக்கும் திரவம் மெல்லிய அடுக்குகளாக அதன் மீது படிந்து உலக மாந்தர் அனைவரும் விரும்பும் முத்தாகப் பரிணமிக்கின்றது.

முத்தில் காணப்படும் பிரதான மூலப் பொருள்களாவன ஆகனைட்டு தான்கியோலின் நீர் என்பனவாகும்.

முத்துக்கள் உருவாகும் போது மெல்லிய அடுக்குகள் பொதியப்படுவதனால் அது ஒளியை உட்பிரவேசிக்கவும் (Transparent)பிரதிபலிக்கவும் ஏற்ற தன்மை உடையதாகக் காணப்படுகின்றது. இத னால் சாதாரண முத்துக்கள் கூட பார்ப்பதற்கு மிகவும் பிரகாசமாகவும் அழகாகவும் தோன்றுகின்றன.

இந்த உலகில் கறுப்பு நிற முத்துக்களும் மிக அருமையாகக் காணப்படுகின்றன. இவ்வகையான முத்துக்களுக்கு வரவேற்பு அதிகம். முட்டை வடிவிலான முத்துக்கள் பொதுவாகக் காணப்பட்டாலும் உருண்டையான தோற்றமுடைய முத்துக்களுக்கே மதிப்பு உண்டு. தூசி, மிதமிஞ்சிய உஷ்ணம், ஈரலிப்புத் தன்மை போன்றவற்றினால் முத்து பழுதுறும் வாய்ப்பு ஏற்படலாம்.

அவிகுலிடி சிப்பிகளிலும் யூனியனி என்னும் மட்டிகளிலும் உற்பத்தியாகும் முத்து இயற்கை முத்துக்களாகும். இந்த முத்துக்கள் சிப்பியின் உட்புறம் முத்துப் போல் அழகான மெல்லிய பொருள் ஒன்றினால் மூடியிருக்கும். இதை நேக்கர் என்பர். அந்த நேக்கரினால் உருவாக்கிய மணியை உயிருடனுள்ள முத்துச்சிப்பியின் திசுவுக்கும் சிப்பிக்குமிடையே திணிப்பார்கள்.

அவ்வாறு திணிக்கப்பட்ட சிப்பிகளை கூண்டு ஒன்றினுள் வைத்து நீருள் பாதுகாப்பாக அமிழ்த்தி வைப் பர். நாளடைவில் மணிகள் பொதிக்கப்பட்டு முத்துக்கள் உண்டாகும். உருவத்தில் பெரிய முத்துக்கள் பெறு வதற்கு பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

இவ்வாறு பெறப்படும் முத்துக்கள் இயற்கை முத்துக்கள் எனப்படும். இந்த முறையை ஜப்பானியர் ஒருவர் 1804 ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். முத்துக்களின் தரத்தை 'எக்ஸ் கதி மூலமும் எண்டாஸ்கோப் என்னும் கருவியினூடாகவும் மிகத்துல்லியமாகக் கண்டுபிடித்து விடலாம். சில வகை மீன்களின் செதில்களைக் கொண்டு முத்துச்சாறு உற்பத்தி செய்யப்படுகின்றது. அதை ஊன்பசையுடன் கலந்து கண்ணாடி மணிகள் மீது அவற்றைப் பூசி போலி முத்துக்கள் தயாரிக்கின்றனர். முத்துக்களின் நிறை அதிகரித்துக் காணப்படுவதற்காக சில தொழில் நுட்ப யுத்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

முத்துக்குளிக்கும் இடங்கள் உலகில் மிகச் சிலவே உள்ளன. பாரசீகவளைகுடாவிலுள்ள பாரைன், இலங்கையில் உள்ள சிலாபம், மன்னார்வளைகுடா, ஜப்பானில் உள்ள டோக்கியோகடல், இந்தியாவில் உள்ள தூத்துக்குடி, குலூக்தீவுக் கூட்டம் அமைந்துள்ள கடல் பிரதேசம் ஆஸ்திரேலியாவின் மேற்கு கரையோரங்கள், கலிபோர்னியாக்கடல் என்பன ஆதியில் முத்துக்குளித்தலுக்கு உகந்த இடங்களாகக் கருதப்பட்டன. நம் நாட்டைப் பொறுத்தவரை மூன்று தசாப்த காலமாக நிலவிய அசாதாரண சூழ்நிலைகாரணமாக கடல்பாதுகாப்பின் நிமித்தம் முத்துக்குளித்தல் நடைபெற்றிருக்கலாம் என்பது சந்தேகமே. இன்றைய காலகட்டத்தில் இந்தத் தொழில் மீண்டும் பெரிய அளவில் நடைபெற வாய்ப்புக்கள் உண்டு.

எமது அயல் நாடான இந்தியாவில் முன்னர் அர அரசுக்குச் சொந்தமான பண்ணைகள் மூலமே முத் துப் பெறப்பட்டது. முத்துக்குளிக்கும், போது பெறப் படும் சிப்பிகளில் ஒரு குறிப்பிட்ட சதவீதமானவற்றை அரசாங்கத்திடம் கையளித்தல் அவசியம்.

முத்துச் சிப்பிகளுக்கு நான்கு வயதாக இருக்கும் போது பெறப்படுவனவற்றிலேயே அதி சிறந்த முத்துக்கள் காணப்படும். வருடத்தில் எல்லா மாதங்களிலும் முத்துக் குளித்தல் நடைபெறுவதில்லை. மார்ச் மாதமே இதற்கு உகந்ததாகக் கருதப்படுகின்றது.

சுமார் 20 மீற்றர் ஆழமுள்ள கடல் படுக்கையில் தென்படுகின்ற சிப்பிகளைச் சேகரிக்க வேண்டும். 80 - 90 செக்கன்களில் இது நடைபெற வேண்டும். மூச்சை அடக்கவும் தம்மீது அழுத்தும் கடல் நீரின் கனத்தை தாங்கவும் கூடியவராக இருத்தல் அவசியம். புதிதாக இந்தப் பணியில் ஈடுபடுபவர்க ளுக்கு மூக்கிலும் காதுகளிலும் இரத்தம் கசிவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். மேலும் இவர்கள் மனிதனை விழுங் கும் பெரிய சுறாமீன்கள் அண்மிக்கும் வேளைகளில் சமயோசிதமாகத் தப்பிக்க வேண்டிய நிலையும் உள்ளது. இதற்கு அவர்கள் பாதுகாப்பாக சிறிய கருங் காலித் தடிகளை தம்வசம் வைத்துக் கொள்வார்கள்.

முத்துக்குளிக்கும் ஒருவர் தவறுதலாக நீண்ட நேரம் கடலினுள் தங்கிவிட்டால் மூச்சுத்திணறி இறந்து போவதுமுண்டு. இந்தப் பணியில் ஈடுபடுபவர்கள் உடல் வலிமையும் அகன்ற மார்பும், கறுத்த நிறமுடையவராகவும் இருத்தல் மிக அவசியம் என்பது பழைய முறை.

மிலேனியம் ஆண்டாக மிளிருகின்ற இன்றைய நவீன யுகத்தில் நீரினுள் சுவாசிக்கக் கூடிய பிராணவாயு வாயு நிரப்பப்பட்ட சிறிய 'சிலிண்டர்களையும்' தலைக் கவசத்தையும் அணிந்த பின்பு கடலினுள் இறங் குவார்கள். சிப்பிகளைச் சேகரிப்பதற்காக இடுப்பைச் சுற்றி வலையொன்றையும் கட்டிக் கொள்வர். நீரில் மூழ்கும் போது சரியான இடம் தென்பட்டதும் பரபரப்பாக முத்துச் சிப்பிகளைச் சேகரித்து இடுப்பில் கட்டிச் சென்ற பை போன்ற வலையினுள் போடுவார்கள். அதே வேளை படகில் இருப்பவர்கள் முத்துக்குளிப் பவர்களைக் கண்ணும் கருத்துமாக அவதானித் துக் கொண்டிருப்பார்கள். முத்துக்குளிப்பவர் அவ்வப்போது மேலே வந்து தோணியில் இருப் பவரிடம் சேகரித்த சிப்பிகளை ஒப்படைத்து விட்டு சிறிது நேரம் ஓய்வு எடுத்தபின் மீண்டும் கடலினுள் குதித்துவிடுவார்.

முத்துக்குளிக்கும் பணி முடிவுற்றதும் சிப்பிகளைக் கடற்கரையில் கொட்டி ஏலத்தில் விற்பனை செய்வார்கள். அதை வாங்கியவர்கள் சில நாள்களின் பின்பு சிப்பிகளைத் திறந்து நன்றாகக் கழுவி முத்துக்களை வெளியில் எடுப்பார்கள்.

முத்தைப் பொறுத்தவரை அதற்கு எந்தக் காலத்திலும் பெருமதிப்பு இருக்கத்தான் செய்கிறது. பாண்டிநாட்டு மன்னர் தனது அரசிக்கு விலை மதிப்புள்ள முத்துக்கள் பதித்த தங்க ஆபரணங்களைப் பரிசாக அளித்தார் என்பதை சரித்திர வாயிலாக அறிய முடிகின்றது.

பொருளாதார சீர்கேட்டை எதிர்நோக்குகின்ற கடலை அண்டிய நாடுகள் முத்துக்குளித் தல் பணிக்கு புதிய மெருகூட்டி, நவீன தொழில் நுட்ப ரீதியில் செயற்பட்டால் நாடு ஸ்திர நிலையை அடையும் என்பது வெள்ளிடை மலை. சிப்பிக்குள் முத்து உருவாகும் விந்தை இயற்கை [illegible] அற்புதம்.

கடலில் காணப்படும் முத்துச் சிப்பியினுள் மிகச் சிறிய திண்மப் பொருளொன்று எதேச்சையாகப் புகுந்து கொண்டால் உயிருள்ள அந்தச்சிப்பி தன் தோல் அடுக்காகிய எப்பிதீலியம் என்னும் படலத்தால் அதை நன்கு பொதிகிறது. நாளடைவில் அந்தச்சிப்பியில் சுரக்கும் திரவம் மெல்லிய அடுக்குகளாக அதன் மீது படிந்து உலக மாந்தர் அனைவரும் விரும்பும் முத்தாகப் பரிணமிக்கின்றது.



நீங்கள் மெல்ல பணம் ஈட்டுவதில் வல்லவர்களாக மாறி வருகிறீர்கள். கிடைக்கும் வாய்ப்புகளையெல்லாம் மெல்லப் பயன்படுத்தி, அவற்றுக்கு மதிப்புக் கூடத் தொடங்கினாலே உங்களுக்குப் பணம் எளிதாக வந்து சேரும் என்ற விதியை நாம் இந்த அத்தியாயத்திலே கற்றுக் கொள்ள இருக்கிறோம்.

இப்படிச் செய்வதால் உங்களுடைய தேவைக்கும் அதிகமான பணம் உங்களிடம் குவிய ஆரம்பிக்கும். அப்படிக் கிடைக்கும் தேவைக்கும் அதிகமான பணத்தைத் திட்டமிட்டு முறையாக பயன் படுத்தினால் அள்ள அள்ளக் குறையாத பண வெள்ளத்தில் நீங்கள் மூழ்கித் திளைக்கலாம். தொடர்ந்து உழைக்காமலேயே நீண்ட நேரம் செலவிடாமலேயே, கஷ்டப்படாமலேயே மிகவும் நேர்த்தியாக பணம் தானாக உங்களிடம் வந்து கொட்டும்படி செய்து விடலாம்.

பிளாக்
உதவும் சி
வந்த போ
பணம்
பட்டியலி
பெரிய
நம்பமுடிக்
வாய்ப்புக
டொலர்க
முனைப
சாதா
கொண்டி
பயணம்
பயன்படு
அவரை
நகரங்களி
என்றால்

ளாக்பெர்ரி, ஐ போன் மற்றும் வாணிபத்திற்கு ம் சில கைபேசிகள் போன்கள் புழக்கத்திற்கு போது, எத்தனையோபேர் ஆயிரக் கணக்கில் ம். சம்பாதித்தார்கள் என்பதை இங்கு யலிடவே முடியாது. அந்த அளவுக்கு அது ய பட்டியல் என்றால் உங்களால் முடிகிறதா? அத்தகைய போன்கள் வழங்கும் புகளைப் பயன்படுத்தி மில்லியன் கணக்கில் லர்களை அள்ளிக் குவித்தார்கள் தொழில் னயவர்கள்.

தாரண பஸ்களில் பயணம் செய்து ண்டிருந்த அவர் இப்போது விமானத்தில் தான் ம் செய்கிறார். விதவிதமான கார்களையே படுத்துகிறார். அவர் வரும்போதெல்லாம் ரை வந்து அழைத்துச் செல்ல ஒவ்வொரு களிலும் அவருக்காக கார்கள் காத்திருக்கும் ல் பார்த்துக் கொள்ளுங்களேன்!

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, என் நண்பர் ஒருவர் ஒரு சமய பக்திப் பாடல்கள் நிறைந்த ஒலிநாடா மற்றும் இறுவட்டுக்களைத் தயாரித்து விற்பனையில் முழு மூச்சாக இறங்கினார். ஒரே ஓர் ஆண்டு மட்டும் காலை மாலை என்று பார்க்காமல் கடினமாக உழைத்தார். அதையே தனக்கு மகிழ்ச்சியூட்டும் ஓர் அன்றாட நிகழ்வாக்கிக் கொண்டார். ஒரு வருடத்திற்குப் பிறகு அதுவரையாரும் சாதித்திராத வகையில் கிறிஸ்தவ பக்திப் பாடல்களே அதிகம் விற்பனையாகிப் பொருள் ஈட்டியது என்ற பெருமை அவருக்குக் கிடைத்தது.

அதைத் தொடர்ந்து அந்தப் பெருமையையே தன் அடுத்தடுத்த வெளியீடுகளுக்கும் அடையாளப்படுத்திக் கொண்டார். அனைவரும் முதல் இறுவட்டுக்களில் இருந்த தரத்தைப் பார்த்து தொடர்ந்து அவரது படைப்புகளை வாங்க ஆரம்பித்தார்கள்.

(தொடரும்)

## தூங்காத பணத்தின் இரகசியம் தெரியுமா?



# இப்சன்

1828–1906



உலக இலக்கியங்களில் சேக்ஸ்பியர், சோபோக்குளவுசுக்குப் பின் நாடகத் தந்தையென அழைக்கப்படுகின்றவர் கென்றிக் இப்சன். நோர்வேயில் சேயன் எனும் நகரத்தில் பிறந்தர்.

எழுத்தாளர், கவிஞர், ஓவியர் எனப் பன்முக ஆளுமைகள் கொண்டவர். சேக்ஸ்பியருக்கு அடுத்தபடியாக நாடகத் துறையில் இவர் இடம் பிடித்திருப்பது நோர்வே மண்ணுக்கும் மக்களுக்கும் பெருமை சேர்க்கிறது.

கென்றிக் இப்சன் 1828 ஆம் ஆண்டு 20 ஆம் திகதி பங்குனி மாதம் நோர்வேயில் உள்ள சேயன் எனும் சீமையில் உள்ள ஸ்றொக் தோட்டத்தில் பிறந்தார். மரீச்சன், குனுத் இப்சன் இவரது பெற்றோர்.

ஓர் ஆண் பதின்மப் பருவம் அடையும் நேரத்தில் கிறித்தவ தேவாலயத்தில் பாதிரியார் முன்னிலையில் மரபு ரீதியாக நல்ல ஆண் மகனாகவும், தேவாலயத்தின் அங்கத்தவராகவும் ஆசீர்வதிக்கப்படுவார். 1843 ஆம் ஆண்டு இந்த முக்கியமான நிகழ்வு இப்சனுக்கு நிகழ்ந்தது.

கொன்பீர் மசூன் என்று நோர்வேஜிய மொழியில் அழைக்கப்படுகிற இந்த நிகழ்வு இன்றும் சுட வழக்கத்தில் உள்ளது.

1844 ஆம் ஆண்டு 3 ஆம் நாள் மருத்துவக் கூடம் ஒன்றில் மாத்திரை விற்பவராகப் பணியில் அமர்த்தப்படுகிறார்.

இந்தச் சூழலில் திருமணமாகாமலே இவர் பணிபுரிந்த மருத்துவ கூட நிறுவனரின் மகளுடன் ஏற்பட்ட உறவில் ஒரு குழந்தை பிறக்கிறது.

1849 ஆம் ஆண்டு முதன் முதலில் கதலினா என்கிற நாடகத்தை எழுதத் தொடங்குகிறார். அதே நேரத்தில் மேற்படிப்பிற்கான பரீட்சை எழுத நோர்வேயின் பழைய தலைநகரான கிறிஸ்தியானியா நகருக்குச் செல்கிறார். இவருடைய கதலினா, விநிரொல்ப் வியார்மன் எனும் புனைப் பெயருடனேயே வெளிவருகிறது. இதே ஆண்டில் தான் மாணவச் சமூக இதழ் ஒன்றுக்குத் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்கிறார். (தொடரும்)



நன்றி : தை மாத இதழ்

# யாழ்ப்பாணத்தில் அருகிவரும் பரதநாட்டிய அரங்கேற்றங்கள்

திருமதி அ.உமாமகேஸ்வரி
உடுவில் தெற்கு,
மானிப்பாய்.

(கடந்தவாரத் தொடர்ச்சி)

இன்றைய கல்வி நவீனமயப்படுத்தப்பட்டு கணினியை மையமாக வைத்தே மேற்கொள்ளப்படுகிறது. உலகமயமாக்கல் செயற்பாட்டில் தகவல் தொழில்நுட்ப அறிவு ஒவ்வொருவருக்கும் இன்றியமையாது வேண்டப்படுகிறது. இதனை முற்றுமுழுதாக கருத்தில் கொண்டு ஒவ்வொரு பெற்றோரும் தத்தமது பிள்ளைகளின் கல்வித் தரம் கணினி ரீதியான பாடப்பரப்புக்களை மட்டுமே கொண்டதாக இருக்க வேண்டும் என எண்ணுகின்றனர். வெறும் பாடசாலைக் கல்வியில் மாத்திரம் கலைத் துறைப் பாடங்களை பயில்வதோடு விட்டுவிடுவதில் அவர்கள் குறியாயிருக்கின்றனர். மேலதிகமாக கலைபயிலும் நிலையினை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆங்கிலக்கல்வி, தகவல் தொழில்நுட்பம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளனர். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் அழகியற் கலைகளை மேல் நிலைக் கல்வியாக கற்பதிலோ, அல்லது தொடர்ச்சியான பயிற்சியின் விளைவாக அரங்கேற்றம் பண்ணுவது என்பவற்றிலோ நாட்டம் காட்டத் தவறுகின்றனர். இவ்வாறான நிலை மாறி மனிதனது வாழ்க்கையை கலைகள் செம்மைப்படுத்துகின்றன என்பதை பெற்றோர்களும் மற்றோர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இன்றைய நிலையில் மாணவர்கள் மனதில் பஞ்சமா பாதகங்களில் ஒன்றோ, தேவையற்ற பழக்கவழக்கங்களோ குடிகொண்டிருப்பதை அவதானிக்கலாம். இத்தகைய தீய குணங்களிலிருந்து விடுபட மனது ஒரு நிலைப்பட வேண்டும். இறை பக்தி மேன்மையடைய வேண்டும். இத்தகைய மனப்பக்குவத்தினை ஏற்படுத்த கலைகளாலேயே முடியும். எனவே ஆடற் கலையின் அவசியம் மாணவர்கள் மத்தியில் பரப்பப்பட வேண்டும். நாட்டியக் கலை மாணவர்களையும் அவர்களூடாக இந்த சமூகத்தையும் நல்வழிப்படுத்தும் என்பதை அறியப்படுத்த வேண்டும். இன்று வெளி இடங்களில் பல வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்துறையை சேர்ந்தவர்கள் என பல துறையினரும் ஒரு பகுதியாகவேனும் பரத நாட்டியத்தைப் பயின்று அரங்கேற்றம் பண்ணுவதைக் காண்கிறோம். இதே நிலைமை யாழ்ப்பாணத்தில் ஏற்பட வேண்டும். அதற்கான அவசியத்தை தனியே ஆசிரியர் உணர்வதால் பிரயோசனம் இல்லை. பெற்றோர்கள் உணர வேண்டும். இதன் வாயிலாகப் பின்னடைந்து செல்லும் எமது கலாசார பண்புகள், பழக்கவழக்கங்களை நல்லநிலையில் தக்கவைத்துக் கொள்ள முடியும். எனவே எம் ஒவ்வொருவருடைய மனதும் தூய்மையடைய கலைகளைப் போற்றி வளர்ப்போம் என உறுதியெடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## நகுலநாதம்




நகுலேஸ்வரப் பெருமானின் சிறப்புக்கள் அமைய ஆக்கங்களையும், கட்டுரைகளையும் கொண்டு மலர்ந்துள்ளது நகுலநாதம்.

வரலாற்றியலானது நகுலேஸ்வரம் தோன்றி இற்றைவரை அருளாட்சி செய்து கொண்டு இருக்கும் நகுலேஸ்வரி சமேத நகுலேஸ்வரரின் அற்புதங்களையும் பெருமைகளையும் எடுத்தியம்புகின்றது.

இக் கட்டுரைகள் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்களினால் ஆராய்ச்சிக் கட்டுரைகளாகவும், சமயப் பெரியார்களினால் அனுபவக் கட்டுரைகளாகவும் அமையப் பெற்றுள்ளன.

தொன்மை - சமகாலம் - எதிர்காலப் பதிவுகளை உள்ளடக்கியுள்ளது. இதனைக் கட்டுரையாளர்கள் எதிர்கால சந்ததியினரையும், பக்தர்களையும் கருத்திற்கொண்டு பதித்துள்ளார்கள், இங்கே "சிவ நெறிக்கழகம்" கீரிமலை சிவபூமிமடம் போன்றவற்றின் தோற்றம், பரிணாம வளர்ச்சி, தற்போதைய நிலை, எதிர்காலத் திட்டம் என்பன சித்திரிக்கப் பட்டுள்ளன.

## பக்தி




இந்து சமூகத்தின் ஆன்மீகத்தை உள்ளடக்கி இந்த நூல் வெளிவந்திருக்கிறது. இல. 555 புதுத் தெரு மன்னாரில் இந்த நூலினைப் பெற முடியும். 44 பக்கங்களில் வெளிவந்திருக்கும் இந்த நூல் 100 ரூபாவுக்கு விற்பனையாகிறது.

வைகாசி மாத சிறப்புகள், ஆஞ்சநேய வழிபாடு, வாஸ்து சமையலறை, மங்கையர் சிறப்புத் தகவல்கள், மாணவர் சமய அறிவுப் போட்டி, விளக்கேற்றும் முறைகள், மதுரை அரசாளும் மீனாட்சி என்ற தலைப்புக்களில் பல விடயங்களை உள்ளடக்கி இந்த நூல் வெளி வந்திருக்கிறது.

# தமிழில் எல்லாம் முடியும்

ஸ்டீபன் ஹாக்கிங்கின் A Brief History of Time என்னும் பிரசித்தி பெற்ற நூலை எனக்குத் தெரிந்து இதுவரை மூன்று பேர் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். சிகாகோ உலகத் தமிழ் அறக்கட்டளையினர் அண்மையில் வெளியிட்டிருக்கும் 'காலம் ஒரு வரலாற்றுச் சுருக்கம்' நான்காவது என எண்ணுகிறேன். மொழி பெயர்த்தவர் நலங்கிள்ளி, பதிப்பாசிரியர் தியாகு.

இந்த நான்கையும் யாராவது ஒப்பிட்டுப் பார்க்கலாம். அறிவியலைத் தமிழில் எழுதுவதில் கொஞ்சம் மன்றாடியவன் என்கிற தகுதியில் இம்மாதிரியான நூல்களைத் தமிழில் தருவதில் உள்ள சிக்கல்களைக் கொஞ்சம் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஒரு புறத்தில் 'தமிழில் எல்லாம் முடியும். கலைச் சொற்கள் இல்லையெனில் கலைச் சொற்களை அவ்வப்போது ஆக்கிக் கொள்ளலாம்' என்று ஒரு கருத்து. மறுபுறத்தில் 'தமிழில் கலைச்சொற்கள் அமைக்கும் வரை காத்திருக்க வேண்டாம், அமைக்கவும் வேண்டாம்... சரளமாக ஆங்கிலத்தையும் தமிழையும் சரியான கலைச்சொற்கள் வரும் வரை கலந்தளிக்கலாம்' என்னும் கருத்து. இந்த இருதுருவங்களுக்கும் இடையே ஒரு மொழி நடை வர வேண்டும். முதலில் இரண்டுக்கும் உதாரணம் தருகிறேன். சிகாகோவின் முயற்சி முதல் வகையைச் சார்ந்தது.



'அண்டமானது மாவெடிப்பு இயன் வழிப்புள்ளியின் ஈறிலா அடர்த்தியுடன் தொடங்கிற்று. இயன் வழிப்புள்ளியில் பொதுச் சார்பியலும் மற்றெல்லா இயற்பியல் விதிகளும் செயலற்றுப் போகும். இயன் வழிப்புள்ளியிலிருந்து என்ன வரும் என்பதை ஊகிக்க முடியாது.

### இரண்டாவது வகை

'ஆர்டர் கமாண்டின் உதவியுடன் டேபிளின் அமைப்பில் மாற்றம் செய்யலாம். அதற்கு மூன்று வகையான கிளாஸ்கள் உள்ளன. புதிதாக ஒரு காலத்தைப் பதிவு செய்யும் போது அது டேபிளின் கடைசி காலமாகத்தான் பதிவு செய்யப்படும். காலத்தின் இடத்தை நிர்ணயம் செய்ய முடியாது.'

இது 'தமிழ் இணையம்' பத்திரிகையில் வந்த கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது. இவ்விரண்டில் முதல் உதாரண வாக்கியத்தை, ஒழுங்காக ஃபிசிக்ஸ் படித்த எனக்கே, புரிந்து கொள்ள அதன் தமிழை மறுபடி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொண்டால்தான் முடிகிறது.

ஆங்கிலமே தெரியாதவர்கள் தமிழில் மட்டும் படித்தால் இயன்வழிப்புள்ளி என்றாலும் singularity என்றாலும் இரண்டுமே புரியப் போவதில்லை. எனவே இந்த நூலின் முக்கிய குறிக்கோள் தமிழில் எழுதுவது சாத்தியம் என்பதை மட்டும் நிரூபிப்பது. அது படிப்பவர்களுக்குப் புரியும் என்பதை உத்தரவாதமாகச் சொல்ல முடியாது.

அதே போல் இரண்டாவது உதாரண வாக்கியம் கம்ப்யூட்டர் கற்பவர்கள் DDL என்னும் டேட்டா டெஃபனிஷன் லேங்வேஜைப் பற்றி அறிந்து கொள்ள ஓரளவுக்கு உதவும்.

ஆரம்பத்தில் இரண்டாம் வகைக் கட்டுரைகள் அதிகம் வரும். முதல் வகைக் கட்டுரைகளும் புத்தகங்களும் மெள்ளத்தான் வரும். தமிழிலேயே கலைச்சொற்களும் விளக்கங்களும் நிலை நாட்டப்பட்டு தமிழிலேயே படித்தாக வேண்டும் என்னும் கட்டாயம் ஏற்படும் போது, எல்லோரும் 'சிங்குலாரிட்டி'க்கு இயன்வழிப்புள்ளி என்கிற சொல்லைப் பயன்படுத்தத் தேவையும் பயனும் ஏற்படும். அதுவரை 'நேர்மங்களாலும் நொதுமங்களாலும் ஆன சின்னஞ்சிறு அணுக்கருவையும் அதைச் சுற்றிவரும் மின்மங்களையும் கொண்டமைந்த சாதாரணமான பருப்பொருளின் அடிப்படை அலகு' என்று அணுவைச் சொல்வதா அல்லது 'ப்ரோட்டான்களாலும் நியூட்ரான்களாலும் ஆன சின்னஞ்சிறு அணுக்கருவையும் அதைச் சுற்றிவரும் எலெக்ட்ரான்களாலும் கொண்டமைந்த [மோட்டர் என்னும்] பருப்பொருளின் அடிப்படைப் பிரிவு' என்று சொல்வதா என்கிற சர்ச்சை தொடரும். எப்படியும் சிகாகோவின் முயற்சி பாராட்டப்பட வேண்டியதே.

'மாடாடுகள் மனுசாள் சௌக்கியம். நோய் நொடிகள் ஏதும் இல்லை. நஞ்சை பாழ், புஞ்சை பூஜ்யம். நாட்டாமை மௌத்தி அடியேனும் தண்டனும் ஆஜர் சமூக சித்தம்.' இதை அவர் நகைச்சுவைக்காக கொடுத்திருந்தாலும் வட்டாட்சியருக்கு வி.ஏ.ஓ.எழுதும் கடிதங்களின் உதாரணங்கள் எளிய தெளிவு தமிழில் இருந்தன. தமிழில் எல்லாம் முடியும் என்பது இப்படித்தான் தொடங்குகிறது.

-சுஜாதா

# மரபுக் கவிதையும் புதுக் கவிதையும்

கலைகளுள் சிறந்ததொரு கலையாய் திகழ்வது கவி எழுதும் கலையாகும். சிறந்த நிகழ்ச்சிகளையும் உணர்ச்சிகளையும் நயமாக உணர்த்துவதைக் கவிதை எனலாம். அக்கவிதையை மரபுக் கவிதை, வசனக் கவிதை, புதுக் கவிதை என்று பிரிப்பர்.

"செல்வத்துள் செல்வம் கவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை"

என்று நாம் ஒரு புதுக் குறளே உருவாக்கலாம்.

புலவர்களும் எண்ணருங் கவிஞர்களும் அன்று வாழ்ந்தனர்; இன்று வாழ்கின்றனர்; என்றும் வாழ்வர்!

கவிதை என்பது உள்மனதிலிருந்து சுயமாக பொங்கி வரக்கூடிய ஆழ்ந்த உணர்ச்சிகளின் வெளிப்பாடு என்கிறார் வோர்ட்ஸ் வொர்த் என்னும் ஆங்கிலக்கவி.

கவிதை எழுதுவோரை நாம் முப்பகுப்பாக்கிக் காட்டலாம். கட்டுத்தளைகளை வெட்டி எறிய வேண்டும் என்ற கருத்தாளராய் கவி புனைவோர் முதலாம் வகையினர். மரபுப் பாதையில் நடை போடுபவர் இரண்டாம் வகையினர். மரபுக் கவிதையின் யாப்பிலிருந்து ஒதுங்கி நிற்போர் மூன்றாம் வகையினர்.

சங்க இலக்கியம் தனிசிறப்பு வாய்ந்தது. அதில் யாப்பு விதிக்கு உட்பட்டு சொற்செறி வோடும் நகைச்சுவையாகவும் கவிகள் இயற்றப் பட்டன. பல வெண்பாக்களும் நீதி நெறிப் பாக்களும், தொடர்நிலை செய்யுள்களும் மலர்ந்தன. ஒரு சாதாரண கருத்தை கவிமொழியிலே அழகாக வழங்கி வந்தனர்.

யாப்பு விதிகளுக்குள் முகிழ்க்கும் கவிதைகளை மரபுக் கவிதை என்று கூறுவர். அக்கவிதைகள் வாழ்க்கைக் குறிப்புகள் பற்றியும், தலைவன் தலைவி காதல் பற்றியும், போர்பரணியாகவும், தனிப்பாடலாகவும் வெளிவந்துள்ளன.

குடத்திலே கங்கை அடங்குமா?

ஆனால், தன் பாடலால் அடங்க வைக்கிறார் காளமேக புலவர்.

"விண்ணுக்கடங்காமல் வெற்புக்கடங்காமல்
மண்ணுக்கடங்காமல் வந்தாலும் - பெண்ணை
இடத்திலே வைத்த இறைவர் சடாம
குடத்திலே கங்கை அடங்கும்."

அதாவது சடா மகுடம் என்பதை சடாம குடம் என்று பிரித்து நகைச்சுவைபட பாடுகிறார் பாரதி.

**இணையவன்**

(தொடரும்)

# அறிவென்பது அனைத்திலுமுண்டு

**விஞ்ஞானம்**
பாரம்பரியத்தில் கலை (தொழில்நுட்பம்)
கல்வி (பாடப்பரப்பு) நவீன மாற்றத்தில்
விஞ்ஞானம், ஆயினும் அதுவும்
கலை, கல்விதான் ஆனால் கட்டுப்
பாடில்லா அறிவியல் வளர்ச்சி-பல
தடைகளைத் தாண்டிய முன்னேற்றம்
அறிவியல்களில் ஏற்றத்தாழ்வு
ஆனாலும் யாரும் இவைகளைக்
கண்டு கொள்வதில்லை-இறைவனைப்
பற்றியோ இறைசெயலைப் பற்றியோ
நவீன விஞ்ஞானம் ஆராயாமலுமில்லை!
**கண்டுபிடிப்பு**
உண்டாவதற்கு ஒரு பொருள், உருவாக்கும்
விதிகளுடன் மூலம் பொருள்களும்
அவசியம், செயற்கையாய்ச்செய்வ
தாயினும்கூட, அவ்வாறில்லாதவை
மாயை மயக்கமுறவைத்து மறைந்து போகும்
கண்களை மயக்கும் காட்சிப்படுத்தல்களும் கூட, படைப்புக்கள் அனைத்தின்
மூலமும் ஒன்றுமில்லாத ஒன்றுதான்
ஒரு வகையில் அதுவும் மாயைதான்
ஆனாலும் நியமமான விஞ்ஞான விதிகள்
உடையவை இவைகளைக் கண்டுபிடிப்பதும், இதுவரை கண்டறியப்படாதவைகளைக் கண்டடைவதும் கண்டுபிடிப்பு!
**மெய்ஞானம்**
மனதை முதன்மைப்படுத்தி, அன்றைய
அறிவியல்கள் அனைத்தையும் ஒருமைப்
படுத்தி, முத்தியின்பத்தை இலக்காகவும்
பக்தியின்பத்தை நோக்காகவும்
உண்மைகளின் அடித்தளத்தில்
கற்பனைகளின் வடிவமைப்பில்
சில அறிவில் குறைபாடுகளுடனும் கூட.
ஆனாலும் பல இன்றைய அறிவியல்களுக்கு,
வித்திட்ட வியூகங்களுடனும்
மெய்ஞானம் உணர்வு பூர்வமானதால்
விஞ்ஞானத்தைப் பற்றி அக்கறை
காட்டுவதில்லை என்பது குறைபாடு!
**ஆய்வாராட்சி**
தர்க்கரீதியான சிந்தனை-அறிவு
பூர்வமாவதற்கு தகவல்கள் கை
கொடுத்தாலும் அடித்தளம் கற்பனை
யானது, சந்தேக சிந்தனைகளையும்
உடையது, பெற்றுக்கொள்ளும்
விடயங்கள் சரியான கோணத்தில்
நிறுவப்படும் போதே மெய்ப்பிக்கிறது
பல்வேறு வகையில் விவாதிக்கப்படுதல்
இன்றியமைய ஆரோக்கியமானது!

இ.ஜெயபாலன்
தொட்டிலடி, சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தரவின்றி

# உள்ளே வரக் கூடாது?

இன்றைக்கு மத்தியானம் உங்கள் அக்கா இங்கே வந்திருந்தார்'' என்று சொல்லிவிட்டு தேநீரையும் கலவரத்தையும் கணவனிடம் ஒப்படைத்தாள் மனைவி.

'' எதற்காக இங்கே ?'' பிரச்சினை வந்த பயத்தில் விழி பிதுங்கினார் கணவர்.

''ஒன்றும் தெரியாதது போன்று நடிக்க வேண்டாம். நீங்களே போன் செய்து வரச்சொல்லி இருப்பீர்கள் வந்ததுதான் வந்தார் எதையாவது சாப்பிட்டுவிட்டு பேசாமல் போய்விட வேண்டியதுதானே? இதை ஏன் இப்படி வைத்திருக்கிறீர்கள்? அதை ஏன் அப்படி வைத்திருக்கிறீர்கள்? என்று அதிகாரம். இன்னொரு தடவை இப்படி வந்தார் என்றால் நடப்பதே வேறு. உங்க அருமை அக்காவுக்குச் சொல்லி வையுங்கள்.. வந்தால் வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டும்'' என்றாள்.

இவர் சொன்னால் அக்கா கேட்கவா போகிறாள்.. புருஷன் சொல்லியே கேட்காதவள் அந்தப் புண்ணியவதி. ஒவ்வொரு முறை வரும் போதும் ஏதாவது சொல்லி கணவன் மனைவிக்குள் சண்டை மூட்டுவது அவள் வாழ்க்கை முறை. தன் வீட்டைச் சரியாகக் கவனிக்க மாட்டாள். ஆனால் தம்பி வீட்டைப் பற்றி ஆயிரம் குறை சொல்வாள். இது ஒரு காட்சி. இன்னொரு காட்சி ,

எள்ளும் கொள்ளும் வெடிக்க கணவன் மனைவியிடம் அலறிக் கொண்டிருக்கிறான். ''உங்கள் அப்பன் ஒரு அரை லூசு.. முட்டாள்.. அறிவு கெட்டவன்.''

''எங்கள் அப்பா அறிவில்லாதவர்தான். ஏற்றுக்கொள்கிறேன்'' என்று இன்ப அதிர்ச்சி கொடுத்தவள் தொடர்ந்து ''எப்போது உங்களைப் போய் மாப்பிள்ளை என்று முடிவு செய்தாரோ அப்பவே அவரும் அறிவில்லாதவர் என்பது தெரிந்துவிட்டது'' என்று வாதத்தைத் திருப்பினாள்.

''அநாவசியமாகப் பேசாதே... எதற்கு உங்கள் அப்பா என் அலுவலகத்துக்கு வர வேண்டும். எனக்குப் புத்தி சொல்ல வேண்டும். என்னைப் பற்றி நான் செலவு செய்வதைப் பற்றி அலுவலகம் முழுக்க விசாரிக்க வேண்டும்.அரை லூசு .. இனிமே அவர் வந்தால் நடப்பதே வேறு''

கணவனுடைய அக்காவின் நடவடிக்கையால் முதல் வீட்டில் பிரச்சினை. மனைவியினுடைய அப்பாவின் செயல்களால் இரண்டாவது வீட்டில் சண்டை. பொதுவாகக் கணவன் மனைவிக்குள் பிரச்சினைகள் குறைவு. இருதரப்பு உறவினர்களால்தான் குடும்பங்களில் அதிக குழப்பங்கள் வருகின்றன. தம்பதிகள் முதலில் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். வந்து போகிற வெளி உறவுகளின் செயற்பாடுகள், ஒன்றாக இருக்கிற தங்கள் குடும்ப மகிழ்ச்சியைப் பாதிக்க அனுமதிக்கக்கூடாது. கணவனது உறவினர்களின் ஹிம்சைக்குக் கணவன் பொறுப்பல்ல. மனைவியின் உறவினர்களின் தவறுகளுக்கு மனைவி பொறுப்பல்ல. அவர்களது உளறல்களைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் தங்களுக்குள் ஒற்றுமையாக இருப்பது என்று தீர்மானித்து விட்டால் குடும்பத்தில் ஐம்பது சதவீத சண்டைகள் இருககாது.

வந்து போகிற ஒட்டுண்ணிகள் தாங்கள் முக்கியத்துவம் பெறுவதற்காகவே புதிய புதிய பிரச்சினைகளை உருவாக்குவார்கள். தங்கள் பழைய உறவினர்களுக்காக கணவன் மனைவி உறவு பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்கிற அறிவும் தெளிவும் வந்துவிட்டால் குடும்பம் குடும்பமாக இருக்கும்.

சிலப்பதிகாரத்தில் கோவலனைக் கவர கண்ணகிக்குத் தோழி யோசனை சொன்னாள். ''பீடு அன்று'' என்று மறுத்தாள் கண்ணகி. திருநீலகண்டர் தவறு செய்தபோது தீண்ட மாட்டேன் என்று சபதம் செய்த அவர் மனைவி அயலாருக்கு அது தெரியாமல் வாழ்ந்தாள் என்பதை ''அயல் அறியாமல் வாழ்ந்தார்'' என்று சேக்கிழார் எழுதுகிறார். ஆனால் இன்று மனைவியைப் பற்றி, அவளது குறைகள் பற்றி அலுவலகம் முழுவதும் பறை அடிக்கிற வேலையை வெட்கமில்லாமல் செய்கிற ஆண்கள் எத்தனை பேர்? அவர்கள் அந்தப் பழக்கத்தைக் கண்டிப்பாக விடவேண்டும்.

உறவினர்களுக்கும் சரி... நண்பர்களுக்கும் சரி...குடும்ப விஷயத்தில் ஓர் எல்லை உண்டு. தாய், தகப்பன், மாமனார், மாமியார் என்கிற உறவுகளே ஆனாலும் கணவன்-மனைவி உறவுக்குள் இவர்கள் தலையை நுழைப்பது சரியல்ல. அந்த ஆனந்த உலகத்தில் உத்தரவின்றி உள்ளே வரக்கூடாது என்பதை பிற உறவுகள் உணரவேண்டும்.



சுகி.சிவம்

# வாசகர் திருமுகம்

## பட்டதாரி பயிலுநர் நியமனம்; எமக்கும் இம்முறை கிடைக்குமா?

பட்டதாரி பயிலுநர் நியமனம் நாடளாவிய ரீதியில் மாவட்ட செயலகங்கள் தோறும் வழங்கப்பட்டு வருகின்றமை யாவருக்கும் தெரிந்ததே.

யாழ். மாவட்டத்திலும் இந்த நேர்முகத் தேர்வு கடந்த 5,6,7 ஆம் திகதிகளில் மாவட்டச்செயலகத்தில் நடைபெற்றது.

கடந்த 14 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வெளியான யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவித்த தகவலின்படி 2009 டிசெம்பர் வரையில் பட்டம் பெற்றவர்களுக்கே நியமனம் வழங்கப் படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எமது இறுதி ஆண்டுப் பரீட்சை 2009 ஆம் ஆண்டு டிசெம்பரில் ஆரம்பிக்கப்பட்டு 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் திகதி முடிவுற்றது. இதனால் நாம் 2010 ஆம் ஆண்டு பட்டம் பெற்றதாகக் கருதப்படுகின்றோம். இருப்பினும் கல்வியாண்டு பதிவுத் திகதியின்படி 2007 ஆம் ஆண்டு பட்டம் பெறவேண்டியவர்கள். உரிய காலத்தில் பரீட்சை இடம்பெறாமை, பெறுபேறுகள் வெளியிடப்படாமை போன்ற காரணங்களால் எமது பட்டத் திகதி பின்னோக்கிச் சென்றது.

பட்டதாரிகளுக்கான நியமனங்கள் வருடா வருடமன்றி குறித்த கால இடைவெளியிலேயே வழங்கப்பட்டு வருகின்றன.

12 நாள்களினால் நாம் எத்தனை வருடங்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுமோ தெரியவில்லை.

இந்தநிலைமைகளை கவனத்திற் கொண்டு எம்மை பட்டதாரி பயிலுநர் நியமனத்திலிருந்து புறக்கணிக்காது, சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து எம்மையும் இந்த நியமனத்தின் பொருட்டு உள்வாங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம்.

பாதிக்கப்பட்ட பட்டதாரிகள்

## மழைவீழ்ச்சி குறைவுக்கு நாமே காரணம்

மரத்தினை வளர்த்து மழையைப் பெறு என்பது சான்றோர் கருத்து. அன்றைய மன்னர் காலத்திலேயே மரங்களை வளர்ப்பதில் மக்கள் அக்கறையாக இருந்தனர். மழையினை வேண்டி யாகம் செய்வதை விட மரங்களை வளர்த்து மழையினைப் பெய்யச் செய்தனர். ஒவ்வொரு நாட்டிலும் காடுகளை வளர்ப்பதில் அக்கறை செலுத்தினர். வீதியோரங்களில் மட்டுமல்ல குடியிருப்பு காணிகளில், வேலியோரங்களிலும் மரங்களை நட்டு வளர்த்து நாட்டுக்கு தேவையான மழை வீழ்ச்சியைப் பெற்றனர்.

ஒரு நாட்டில் நிறைவான மழை பெய்யுமெனில் அந்த நாட்டின் செழிப்புக்கு எவரும் முட்டுக் கட்டையாக இருக்க முடியாது. நாட்டுக்குத் தேவையான மழை வீழ்ச்சியைப் பெற வேண்டுமாயின் போதியளவு மரங்களை வளர்க்க வேண்டும் என நீண்ட காலமாக வலியுறுத்தப் படுகின்றது. எவ்வளவுதான் விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக செயற்கை மழையினை உருவாக்கினாலும் இயற்கை தரும் மழை வீழ்ச்சிக்கு அது ஈடாக முடியாது.

''நல்லார் ஒருவர் உளரே அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை'' என்பது முதுமொழி. அந்த நல்லாரில் ஒருவர் மரங்களை நாட்டு நாட்டுக்கு மழையினைப் பொழிய வைப்பவர் எனவும் கருத்துக் கூறப்படுகிறது.

மரங்கள் மழை வீழ்ச்சிக்காக மட்டுமல்ல ஓய்வெடுக்கக் கூடிய நிழலையும் தரவல்லன. அரசர் ஆட்சிக் காலத்தில் காடுகளுக்கு வேட்டைக்குச் செல்லும் அரசன் தனது படைகளுடன் மர நிழலில் நீண்ட நேர பயணக் களைப்பை போக்க தங்கியிருந்ததாக சரித்திர நூல்கள் கூறுகின்றன.

இந்தியாவில் எந்தவொரு பிரதேசத்திற்கு செல்லும் வீதிகளிலும் பெரிய மரங்கள், அதுவும் பயனுள்ள மரங்கள் நாட்டப்பட்டு நிழலுடன் மக்களுக்கு பயன்தரக்கூடியவாறு நிற்பதைக் காண முடிகிறது. அங்குள்ள ஆலயங்கள், பொது இடங்களில் காணப்படும் பெரிய மரங்களைச் சுற்றி மேடை அமைக்கப்பட்டு மக்கள் இளைப்பாறக் கூடிய வகையில் காணப்படுகின்றன.

குழைக்காடு எனப் பெயர் பெற்ற தென்மராட்சி பிரதேசத்திலும் 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் அவ்வாறான நிலை காணப்பட்டது. நாவற்குழி தொடக்கம் ஆனையிறவு வரையான ஏ-9 வீதி மட்டுமல்ல எந்தவொரு வீதி, ஒழுங்கை போன்றவற்றினுள்ளும் சென்றாலும் வெயிலின் தாக்கம் தெரியாத அளவுக்கு பெரும் நிழல் தரு மரங்கள் காணப்பட்டன.

இந்த பெரிய மரங்களை விட வேலியோரங்களில் காணப்பட்ட மரங்களும், நிழல்தரக் கூடியனவாக இருந்தன. பிரதேசத்தில் மீளக்குடியமர்வு இடம் பெற்று கடந்த பத்து வருட காலத்தில் பிரதேச வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றத்தால் பெரிய மரங்கள், வேலி மரங்கள் போன்றவற்றை காண முடியாத நிலை உள்ளது.

வீதி அகலிப்பு பணிகளில் பிரதான வீதிகளில் காணப்பட்ட பெரிய மரங்களும், போர்க் காலங்களில் எறிகணைத் தாக்குதல்களினால் பெரிய மரங்களும் அழிக்கப்பட்டன. அத்துடன் வீதியோர வேலிகள் மதில்களாக மாற்றமடைவதாலும் அவை அகற்றப்பட்டு நிழல் தரு மரங்களின் எண்ணிக்கை பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளன.

வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்களில், வீதிகளில் நடந்து செல்வோர் படும் துயரங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

வீதியோரங்களில், வேலியோரங்களில் தறிக்கப்பட்ட பெரிய மரங்களுக்கு மாற்றீடாக மரக் கன்றுகள் நடும் எண்ணம் மக்கள் மத்தியில் இல்லாததால் எதிர்வரும் காலங்களில் மழை வீழ்ச்சியின் அளவை இந்த பிரதேச மக்கள் பெருமளவில் எதிர்பார்க்க முடியாமல் போவது பெரும் கவலைக்குரிய விடயமாகும். ஆகவே மரங்களை வளர்ப்போம்.

கிருஷ்ணா

## தொடர்ச்சியாக மின்வெட்டை அமுல்படுத்துவது நியாயமா?

வீதி அகலிப்பு காரணமாக மின் இணைப்பு திருத்தவேலை என்ற காரணம் கூறி பல மாதங்களாக ஒன்றுவிட்ட தினத்தில் தொடர்ச்சியாக காலை 7.30 மணி தொடக்கம் மாலை 7.30 மணி வரை மின்வெட்டு அமுல்படுத்தப் படுகின்றது.

சில மீற்றர்கள் இடப்பரப்பில் நடைபெறும் மின் இணைப்பு வேலைக்காக குடாநாட்டின் அரைவாசிப் பகுதிக்கு மின்வெட்டு நடைமுறைப் படுத்துவது நியாயமானதா? மின்சாரத்தை நம்பி பல தொழில்களை ஆரம்பித்தவர்களும் எல்லாவற்றிற்கும் மின்சாரத்தையே நம்பியிருக்கும் மக்கள் தினமும் பல்வேறு விதங்களில் பாதிக்கப்படுகின்றனர். மின்சாரம் வழங்கப்படும் நாள்களிலும் அடிக்கடி மின் வெட்டு ஏற்படுகிறது.

மின் இணைப்பு திருத்த வேலை நடைபெறும் குறிப்பிட்ட இடத்திற்கு மட்டும் மின் வெட்டை அமுல்படுத்தி மீதி இடங்களுக்கு மின்சாரத்தை வழங்கலாம் தானே என மக்கள் கேட்கின்றனர். உரியவர்கள் பதிலைத் தருவார்களா? மக்களுக்கு விமோசனம் கிடைக்குமா?

ஜே.குமார்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கழுத்தையும் கவனியுங்கள்

ஒரு பெண்ணின் கழுத்தைப் பார்த்து அவரின் வயதைச் சொல்லி விடலாம். அதற்கு காரணம் கழுத்தில் ஏற்படும் சுருக்கங்கள் மற்றும் கோடுகள்.

வழவழப்பான கழுத்தைப் பெறுவது அரிது. ஆனால் பயிற்சிகளைச் செய்வதன் மூலம் கழுத்தை சுருக்கமில்லாமல் நன்றாக வைத்துக் கொள்ள முடியும்.

### தினசரி கழுத்துப் பயிற்சி

தலையை பின்புறம் 10 முறையும் முன்புறம் 10 முறையும் சாய்க்கவும்.

தலையை நன்றாக பின்நோக்கி வைத்துக் கொண்டு, வாயை நன்றாகத் திறந்து அசைத்து மூடவும்.

தலையை ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு திருப்பவும். பின்னர் தலையை வலது தோள்பட்டைவரை கொண்டு சென்று மறுபடி இடது தோள்பட்டைக்கு கொண்டு செல்லவும். இது போல் 10 முதல் 20 தடவை செய்யவும்.

### கழுத்துப் பராமரிப்பு

நடக்கும் போதும், உட்காரும் போதும் தலையை நிமிர்த்தி தோள்பட்டையை பின்பக்கம் தள்ளிய படி இருக்கவும்.

உலர்ந்த காற்று மற்றும் வெயில் ஆகியவற்றிலிருந்து உடம்பை பாதுகாத்துக் கொள்ளவும். நீச்சல் பயிற்சிக்குப் பின், நல்ல நீரில் குளித்து உப்பு தண்ணீர் மற்றும் குளோரின் ஆகியவற்றிலிருந்து உடம்பை பாதுகாக்கவும்.

கழுத்துப் பகுதியை இறுக்கமாக்கும் கிரீம் உபயோகிக்கலாம். கிரீமை மேல் நோக்கி தேய்க்க வேண்டும். முகத்துக்கு தரும் முக்கியத்துவத்தை கழுத்திற்கும் தர வேண்டும். கழுத்துக்கு மாஸ்க், மஸாஜ் ஆகியவை மிகவும் முக்கியம்.

நாகரீக மாற்றங்களுக்கு ஏற்றால்போல் பெண்களின் அழகை மேலும் மெருகூட்டுவதற்கு ''அழகு சாதனப் பொருள்கள்'' கைகொடுக்கின்றன. இந்த அழகு சாதனப் பொருள்கள் பல பல நிறுவனங்களின் தயாரிப்பில் ஒவ்வொரு விதமாக அறிமுகப்படுத்தப்பட்ட வண்ணமே உள்ளன.

இயற்கையின் பொருள்களைக் கொண்டு தம்மை அழகுபடுத்த பெண்களுக்கு இப்போது நேரம் தடையாக உள்ளது. அதன் காரணமாக இலகுவாகவும் உடனடியாகவும் கிடைக்கக்கூடிய அழகு சாதனப் பொருள்கள் மீது நாட்டம் காட்டியுள்ளனர்.

அழகுக்கலை மீது நம்மவர் கொண்ட ஈடுபாட்டை ஈடுசெய்யும் ஒரிபிளேம் அழகுப் பொருள்கள் இப்போது சந்தைக்கு வந்துள்ளன. சுவீடன் உற்பத்திப் பொருள்களாக இவை உள்ளன. இவற்றின் விலைகள் சற்று உயர்வடைந்து காணப்பட்டாலும் பெரும் எண்ணிக்கையானோரின் தெரிவாக ஒரிபிளேம் உள்ளது.

அழகு சாதனப் பொருள்களை விற்பனை செய்யும் நோக்குடன் மட்டுமல்லாது தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் செயற்பாடுகளை ஒரிபிளேம் மேற்கொண்டு வருகிறது.

இந்த வகையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த வாரம் அழகுக்கலையும் அது தொடர்பாக காட்சிப்படுத்தலும் தொடர்பாளர்கள் காட்சி ஒன்றை ஒரிபிளேம் ஏற்பாடு செய்திருந்தது.

அன்றைய தினம் அழகுக் கலையுடன் தொடர்புடைய 12 காட்சியறைகள் அங்கே காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. ஆடை, அணிகலன் முதல் பேசியல் வரையான அழகுக்கலையுடன் ஒன்றிணைந்ததாக அந்தக் காட்சியறைகள் அமைந்திருந்தன.

அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த காட்சியறைகள் அனைவரையும் மிகவும் கவர்ந்தனவாகவும் இருந்தன.

அந்தக் கண்காட்சியில் ஒரிபிளேம் நிறுவன வடபிராந்திய முகாமையாளர் வித்யா நிரஞ்சனை சந்தித்து கலந்துரையாடினோம்.

2010 ஆம் ஆண்டு முதல் யாழ். மாவட்டத்தின் ஒரிபிளேம் தனது சேவையைத் தொடங்கியவுடன் 2500 இற்கும் மேற்பட்டவர்களுக்கு சுயதொழில் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்ததுடன் ஆண், பெண் வேறுபாடின்றி ''அழகு'' தொடர்பான சகல தேவைகளையும் நிறைவேற்றி முன்னணியில் உள்ளது.

பெண்கள் அனைவருடைய சரும மாற்றங்களுக்கும் ஏற்றாற்போல் மருத்துவ ரீதியாக தகுந்த அழகு சாதனப் பொருள்கள் வடமாகாணத்தில் அறிமுகப்படுத்தியுள்ளோம். வன்னி மாவட்டம் உட்பட சகல பிரதேசங்களிலும் இதன் பாவனையாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

ஒரிபிளேம் நேரடி அனுபவம் அதன் பாவனை, அழகுக்கலை நிபுணர்கள் இவற்றை நீங்கள் நேரடியாகவே இங்கு காணலாம் என்று இதன்போது கூறினார். ஒரு நாளில் மட்டும் 1500 இற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் இந்தக் கண்காட்சியைப் பார்வையிட வந்திருந்தனர். ஒரிபிளேம் அழகுக்கலை நிபுணர்கள் 20 நிமிடத்தில் பேசியல் செய்து முடித்தனர். பலர் இதில் ஆர்வம் காட்டினர்.

இப்போதைய நவநாகரீகப் பெண்கள் கண்களின் இமைகளை பல்வேறு வடிவங்களில் மாற்றியமைத்துக்கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. கண்களின் இமைகளைச் சரிசெய்வதற்கு குறைந்தது 5 நிமிடம் போதுமானதாக இருந்தது. இங்கு வந்த பெரும் எண்ணிக்கையானோர் இமைகளைச் சரி செய்வதைக் காண முடிந்தது.

அத்துடன் கைகளுக்கு மருதாணி போடுதலை பயிற்றப்பட்ட அழகுக்கலை நிபுணர்கள் மிகவும் தத்துவ ரீதியாக மேற்கொண்டனர். பல்வேறு வடிவங்களில் கைகளுக்கு அழகு சேர்த்ததையும் அவதானிக்க முடிந்தது. ஒட்டுமொத்தமாக பெண்களின் அழகுக்கலை தொடர்பான சகல தேவைகளையும் ஒரிபிளேம் காட்சிக்கூடம் வழங்கிக்கொண்டிருந்தது.

சந்திப்பு: சோபனா




திருமதி வித்யா நிரஞ்சன்

# நீண்ட நேர வாசனைக்கு......

நீண்ட நேர வாசனைக்கு வாசனைத் திரவியத்தை உடல் முழுவதும் படிப்படியாக சேர்க்க வேண்டும். ஒரே விதமான வாசனைத் திரவியத்தை குளிக்கும் நீரிலும் அதன் பின் உடம்பிலும் பயன்படுத்தவும்.

உங்கள் உணவு கூட நீங்கள் பயன்படுத்தும் வாசனைப் பொருள்களின் வாசனையை மாற்றக் கூடும். வாசனைப் பொருளைப் பயன்படுத்துவோர் கொழுப்புச் சத்துள்ள உணவு மற்றும் மசாலாக்கள் அதிகம் கலந்த உணவு உண்பவரானால் வாசனை அதிகமாக இருக்கும். உணவுப் பழக்கத்தில் திடீர் மாற்றத்தை ஏற்படுத்தினால், அது வாசனையின் தன்மை மாற்றிக் காட்டக் கூடும்.



தோலின் தன்மை கூட வாசனையை மாற்றிக் காட்டும். எண்ணெய்ப் பசையுள்ள சருமத்தில் வாசனை நீண்ட நேரம் நீடிக்கிறது. உலர்ந்த சருமம் நீண்ட நேரம் வாசனையைப் பாதுகாப்பதில்லை. ஆகவே அது போன்ற தோலின் தன்மை கொண்டவர்கள் அடிக்கடி வாசனைப் பொருள்களை பயன்டுத்த நேரிடலாம்.

மூன்றுக்கும் மேற்பட்ட வாசனைகளை முகராதீர்கள். உங்கள் மூக்குக்கு அதற்கு மேற்பட்ட வாசனைகளை வித்தியாசப்படுத்திக் காட்ட இயலாது.

புதிய வாசனை பொருள்களை போட்டுப் பார்க்கும் போது அவற்றை நேரடியாக உங்கள் தோலில் போட்டு முகர்ந்து பார்க்கவும். பாட்டிலில் இருந்தபடியே முகர்ந்து பார்த்தால் சரியான வாசனையை கண்டுகொள்ள முடியாது. சில துளிகளை உங்கள் கையின் மேல்புறம் தோலில் தெளித்து முகர்ந்து பார்க்கவும். மேலும் சில வாசனைகளை டெஸ்ட் செய்ய விரும்பினால் அடுத்த கையின் மேல் தோலில் தடவி முகரவும்.

10 நிமிடங்கள் ஆன பிறகே நீங்கள் எந்த வாசனையைப் பற்றியும் முடிவெடுக்கவும்.

வாசனைப் பொருள்களை நீண்ட காலம் சேமித்து வைப்பதால் அது கெட்டு விடும் அல்லது காற்றில் கரைந்து விடும்.

வாசனைப் பொருள்களை துணிகள் மேல் நேரடியாக தெளிக்காதீர்கள். அது கறைகளை ஏற்படுத்தலாம்.

உங்கள் உள்ளங்கைகளில் வாசனைப் பொருள்களைத் தெளித்து நீண்ட நேரம் அதன் வாசத்தை அனுபவியுங்கள்.

ஒவ்வொருவருக்கும் ஒரு கையின் நீட்டம் வரை ஒரு வாசனை வட்டம் அமைந்துள்ளது. அப்படியா! என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. இதை நினைவில் வைத்துக் கொண்டு நீங்கள் வாசனைப் பொருள்களை பயன்படுத்த வேண்டும். இல்லையெனில் மற்றவர் அதிக வாசனைப் பொறுக்காமல் முகம் சுளிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org